DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர் இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7 905-272-1222
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1 905-794-4404
online service: www.remitbee.com

பஞ் சொக்கலிங்கம் BROKER
வீடு விற்க
416.786.2463
416.PUNCH ME
416punchme@gmail.com
RE/MAX ACE

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

MORTGAGE மோர்ட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA MORTGAGE SOLUTIONS INC.
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

25 வது வெள்ளி விழா 2021
UTHAYAN
உதயன்
Canada's Other Voices
Member of National Ethnic Press and Media Council of Canada
Canadian Media Circulation Audit
$1.00
416-752-1524 www.uthayannews.ca
உதயம் 1347 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday January 28, 2022

## Canadian Prime Minister Justin Trudeau isolates for five days after exposure to COVID-19

# கனடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ முன்னெச்சரிக்கையாக தன்னை தனிமைப்படுத்திக் கொண்டார்

கனடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அவர்கள் நேற்று வியாழக்கிழமை தொடக்கம் 5 நாட்களுக்கு தன்னை சுய தனிமைப்படுத்திக்கொள்ளும் முடிவை எடுத்துள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.




ஏற்கெனவே கொரோனாவால் தொற்றினால் பாதிக்கப்பட்ட ஒருவருடன் நேரடியாக தொடர்பில் இருந்தது பற்றி உதவியாளர்களால் அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர் இந்த இந்த முடிவை எடுத்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது

*(தொடர்ச்சி உள்ளே 3ம் பக்கத்தில்)*

## தங்கள் நகரங்களுக்கு விஜயம் செய்யும்படி பரஸ்பர அழைப்பு விடுத்த யாழ் மேயர் வி. மணிவண்ணனும் ரொறன்ரோ மேயர் ஜோன் றோரியும்...




”ரொறன்ரோ மேயர் ஜோன் றோரி யாழ்ப்பாண நகருக்கு வருகை தந்து எமது மக்களை மகிழ்விக்க வேண்டும்” என்று யாழ்ப்பாண மேயர் மணிவண்ணன் அவர்களும் ” யாழ்ப்பாண மேயர் மணிவண்ணன் எமது ரொறன்ரோ நகருக்கு வருகை தந்து எமது நகரத்தின் சிறப்புக்களையும் அழகையையும் காணவேண்டும்“ என்று மேயர் ஜோன் றோரியும் பரஸ்பர அழைப்பு விடுத்ததை இணையவழிக் கலந்துரையாடலின் போது பார்த்த அனைவரும் பரவசம் அடைந்த நிகழ்வு கடந்த 25-01-2022 செவ்வாய்க்கிழமையன்று நடைபெற்றது.

அன்றைய தினம் ரொறன்ரோ-யாழ்ப்பாண நகரங்கள் சார்ந்த தமிழர் மரபுரிமை மாதக் கொண்டாட்ட நிகழ்வு ரொறன்ரொ மாநகர சபையில் உறுப்பினர் **Jennifer McKellvie** அவர்களதும் கனடிய தமிழர் பேரவையின் ஏற்பாட்டிலும் சிறப்பாக நடைபெற்றது.

*(தொடர்ச்சி உள்ளே 5ம் பக்கத்தில்)*

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333 KUMAR 416.453.7777

RE/MAX ACE REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship; Super visa for parents and grandparents including health insurance; Citizenship; Permanent resident card renewal;
More than 10 Years experience in the field of Canadian Immigration
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance, First Mortgage, Second Mortgage, Commercial Mortgage, Equity Loan
Mobile: 416.710.9150
ACCOUNTING
Personal Income Tax, Corporate Income Tax, HST Returns, Bookkeeping Service, Payroll Service, Audit preparation, Business Startup service

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX REALTRON TEAM

SRI NADARAJASUNDARAM
Broker
416-276-6666
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

வீடு வாங்க விற்க
PIRAPA SIVALINGAM
Sales Representative
416-999-7482
RE/MAX

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

RE/MAX REALTRON BLUE FORCE
TEAM BLUE FORCE
வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
416 2888882
கவாஸ் - சோம சச்சிதானந்தன்

# Carefirst Family Health Team



## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION ACCREDITATION AGREMENT CANADA

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F, Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com





## சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS


### COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

**VARUNAN: 416-894-6244**

### LOYAL PEST CONTROL

Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.

Residential, Commercial, Industrial Elimination of Roaches & Mice

**RAJAN: 416-464-2415**

### சாஸ்திரம்



மதுரை மீனாட்சி துணை
கடந்த 40 வருடத்திற்கு மேல் அனுபவமிக்க நந்தி வாக்கிய ஓலை சாஸ்திரம்
பிறந்த திகதி, வருடம், மாதம், நேரம் சொன்னால் போதும் நடக்கப்போவதை மிக துள்ளியமாக கணித்து சொல்லப்படும்.



தொடர்புகளுக்கு: கோ. காசிலிங்கம்
437-925-5643

### CAR LOANS



Newcomers to Canada
Bankruptcy
Pandemic problems
Divorce
Limited credit/bruised credit
Collections
Not sure of your credit?

*Applying for a vehicle loan online is one of the quickest and easiest ways to apply.*



Our secure online application is easy to complete, just go to
gopal@driveautogroup.ca
Or call Gopal Pillai at:
**(647) 763-0210**

brimell

### ATSIN LAW
### சட்ட அலுவலகம்

உங்கள் சட்டத் தேவைகளுக்கு எம்மை நாடுங்கள்

Matrimonial/Family
- property equalization, custody, access, child/ spousal support, domestic agreements, divorce

Real Estate
- residential purchase, sale & refinance transactions

Powers of Attorney, Guardianship, Wills
Notary Public/Commissioner

**SAROJINI SINIVASAN**
Barrister, Solicitor & Notary Public
250 Consumers Road, Suite 517
Toronto, Ontario M2J 4V6
Office: (416) 613 8998
Fax: (416) 494 8938 --- Email: atsinlaw@gmail.com

### Basement for Rent

**Pharmacy / Lawrence** சந்திப்புக்கு அருகில் உள்ள நான்கு அறைகள் கொண்ட **basement** உடனடியாக வாடகைக்கு உண்டு.
**2 washrooms. Separate entrance and parking available.**
**Newly renovated.**
**Washer+Dryer separate.**

**விபரங்களுக்கு:**
**416-302-9022**

### HOUSE for RENT

மார்க்கம் நகரில் **Markham / Denison** சந்திப்புக்கு அருகில் உள்ள நான்கு அறைகள் கொண்ட வீடு, **basement** தவிர்த்து உடனடியாக வாடகைக்கு உண்டு.
4 வாகனங்களுக்கான **parking** உண்டு.
407 பெருந்தெரு, கடைகள் பாடசாலைகள் மற்றும் அனைத்து வசதிகளும் அருகில் உள்ளன.

**விபரங்களுக்கு:**
**(647) 282-0643**
**என்னும் இலக்கத்தை அழைக்கவும்.**

### நேரலை வீடியோ ஒளிபரப்பு சேவை

கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்திலும் கியுபெக் மாகாணத்திலும் தமிழ் மக்கள் மத்தியில் இடம்பெறும் சுப வைபவங்கள் மற்றும் இறுதிக்கிரிகைகள் ஆகியவற்றை நேரடியாக வீடியோ ஒளிப்பதிவு செய்வது மாத்திரமன்றி. அந்த நிகழ்வுகளை நேரடியாக முகநூல் மற்றும் இணையத் தளங்களில் நேரலையாக ஒளிபரப்பவும் எம்மை அழையுங்கள். குறைந்த கட்டணமே அறவிடப்படும் அழையுங்கள்

**சிவா 647 891 7725**

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | உதயன் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## உதயன் கதிரோட்டம்

# ‘இப்ப நல்ல ரேட் போகுது’ ‘இது நல்லது இல்ல பாருங்கோ’

புலம் பெயர்ந்து வாழும் தமிழர்கள் தற்போது அதிகமாகப் பகிர்ந்து கொள்ளும் ஒரு கூற்று ‘இப்ப நாட்டில நல்ல ரேட் போகுது’ என்பதாகும். பெயர் குறிப்பிட விரும்பாத ஒருவர் ஒரு வெளிநாட்டில் இந்தக் கூற்றை அடிக்கடி மற்றவர்கள் கூறுவதைக் கேட்டு ‘கடுப்பாகி’ விடுவாராம். ஒரு நாள் இவ்வாறு கூறிய ஒருவரிடம் “ நீங்கள் என்ன கொரோனா ரேட்டை சொல்லுறியளோ? அதுவெண்டால் உண்மையாய் இருக்கலாம்” என்றாராம். இதைக் கேட்ட மற்றவரும் ‘கடுப்பாகி’ கைகலப்பு ஏற்பட இருந்த தருணத்தில் இன்னொரு நண்பர் அந்த இடத்திற்கு ஓடி வந்து இருவரையும் சமாதானம் செய்து அனுப்ப வேண்டியதாய்ப் போய்விட்டதாம்.

இலங்கையில் தற்போது கொரோனாவின் ‘ரேட்’ அதிகமாகிச் சென்று பலரது உயிர்களைப் பறித்துச் செல்ல. நாட்டின் பொருளாதார நிலை தாழ்ந்து சென்று வெளிநாட்டுப் பணத்தில் இலங்கைப் பெறுமதி அதிகரித்துக்கொண்டே விரைகின்றது. இதைத் தான் நம்மவர்கள் ‘இப்ப நாட்டில நல்ல ரேட் போகுது’ இ என்ற கூற்றாகப் பகிர்ந்து வருகின்றார்கள்.

இன்றிலிருந்து இருபது ஆண்டுகளுக்கு முன்னர் கனடாவின் ஆயிரம் டாலர்கள் இலங்கையில் அறுபதாயிரம் ரூபாய்களை பெற்றுக்கொள்ளும் அளவிற்கு அன்றைய பொருளதார நிலையும் அதற்கான பெறுமதியும் இருந்தது. ஆனால் இன்றைய நாளில் ஆயிரம் கனடிய டாலர்களுக்கு இரண்டு இலட்சம் ரூபாய்கள் வழங்கப்படுகின்றது. இருபது ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையில் அறுபது ரூபாய்க்கு வாங்கியவர்கள் இன்று இருநூறு ரூபாய்களுக்கு அதிகமாகக் கொடுத்து பெற்றுக்கொள்ள வேண்டியுள்ளது என்பதே யதார்த்தம்.

இனி நாங்கள் இலங்கையின் ‘கொரோனா’ தொற்று என்ன ரேட்டில் உள்ளது என்று கவனிப்போமானால். அது முன்னர் நாம் கூறியிருப்பது போன்றே அதிகரித்துத் தான் செல்கின்றது. கிழக்கு மாகாண நகரங்களில் ஒன்றான மட்டக்களப்பில் கொரோனா தொற்றிய நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து மரணங்களும் தினசரி சம்பவிப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இவ்வார எமது இதழிலும் அது தொடர்பான செய்தியொன்றும் பிரசுரமாகியுள்ளது

இலங்கையில் நாளாந்தம் சுமார் 2 ஆயிரம் பேர் கொவிட் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டு வருவதாக பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹண தெரிவித்துள்ள தகவல் இலங்கையின் சுகாதார அமைச்சருக்கு ‘கடுப்பை’ கொண்டு வந்ததாகவும் கொழும்பின் பத்திரிகையாளர் ஒருவர் எமது ஆசிரிய பீடத்திற்கு அறியத்தந்துள்ளார்.

இதுகுறித்து அவர் ஊடகங்களிடம் மேலும் தெரிவித்ததாவது, “இலங்கையில் தற்போது தொற்றாளர்களின் எண்ணிக்கை பாரிய அளவில் அதிகரித்துள்ளது. சரியான தரவுகள் ஊடகங்கள் வழியாக வெளிப்படுவதில்லை.

நாளாந்தம் 2000 வரையிலான தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர். நோயாளர்களின் எண்ணிக்கை உயர்வடைந்ததை அடுத்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்படும் நோயாளிகளின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. இதனால் வைத்தியசாலைகள் நிரம்பியுள்ளன” என்று தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஆட்சித் தலைவர்களுக்கு ‘தலை வீக்கம்’ ஏற்பட்ட காரணத்தால் அங்கு பண வீக்கம் மற்றும் கோவிட்-19 பாதிப்புக்கள் ஏற்றமும் உண்டான நிலையில் அவர்களுக்கு ஏமாற்றுமும் அதிகரித்து ஆட்சிக் கதிரைகளின் கால்களில் நடுக்கம் காணப்படுவதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அங்கு ஆட்சியாளர்கள் உட்பட குறைந்த எண்ணிக்கையில் உள்ளவர்களிடம் போதிய நிதி போய்ச் சேர்ந்துள்ளது. இலங்கையின் மக்கள் தொகையில் எண்ணிக்கையில் அதிகமான ஏழைகளின் கைகளில் பணம் இல்லை. அவர்களின் வாழ்க்கைத் தரம் தாழ்ந்து செல்லுகையில் குறைந்த எண்ணிக்கை கொண்டவர்களிடம் நிதி நிறைந்து காணப்படுகின்றது. ஆனால், அரசின் ‘திறைசேரியில் ‘ நிதிப் பற்றாக்குறையால் நாடே மயக்கமடைந்துள்ளதாகவும் பலர் கவலை தெரிவித்துள்ளார்கள்.

ஆட்சியாளர்கள் தங்கள் கடமைகளை மறந்தும் மறைத்தும் இருந்தபடி ‘பதவிகளின்” பெருமைகளை தினமும் எண்ணி எண்ணி கனவுகளில் மூழ்கி வருகின்றனர். இதுவே நாட்டின் தற்போதைய நிலை.

# இலங்கையின் 74 வது சுதந்திர தினத்தை முன்னிட்டு மன்னார் பிரதான பாலப் பகுதியில் சிரமதானம்

**(மன்னார் நிருபர்)**





இலங்கையின் 74 வது சுதந்திர தினத்தை முன்னிட்டு இன்றைய தினம் வெள்ளிக்கிழமை மன்னார் பிரதான பாலத்தின் இரு கடற்கரையோரங்களில் பாரிய சிரமதானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டது.

இலங்கையின் 74 வது சுதந்திர தினத்தை முன்னிட்டு மன்னார் மாவட்டத்தில் மேற்கொளளப்படவுள்ள நிகழ்வுகள் தொடர்பாக ஆராயும் கூட்டம் கடந்த வாரம் இடம் பெற்றது.

இதன் போது மன்னார் பிரதான பாலத்தின் இரு கடற்கரை ஓரங்களிலும் சிரமதானப் பணியை மேற்கொண்டு தூய்மையாக்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றமை தொடர்பாக தீர்மானிக்கப்பட்டது.

இந்த நிலையில் இன்று வெள்ளிக்கிழமை (28) காலை 7 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில்,சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் (மெசிடோ) உதவியுடன் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் குறித்த சிரமதான பணிகள் முன்னெடுக்கப்பட்டது.

இதன் போது மன்னார் மாவட்ட உதவி அரசாங்க அதிபர், மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு,மன்னார் பிரதேசச் செயலாளர், மாவட்டச் செயலகம், மன்னார் பிரதேச செயலக பணியாளர்கள், கிராம அலுவலர்கள், சமுர்த்தி அலுவலர்கள், சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் ஜாட்சன் பிகிராடோ, பணியாளர்கள் மற்றும் இராணுவத்தினர் ஆகியோர் குறித்த சிரமதான பணியில் ஈடுபட்டனர்.

இதன் போது குறித்த பகுதியில் சேகரிக்கப்பட்ட அதிக அளவான கழிவுப் பொருட்கள் மன்னார் நகர சபையின் உதவியுடன் அகற்றப்பட்டுள்ளது.

*(முன்பக்கத் தொடர்ச்சி)*

## Canadian Prime Minister Justin Trudeau isolates... கனடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ முன்னெச்சரிக்கையாக...

நேற்று வியாழக்கிழமை அவருக்கு இந்த விடயம் அறிவிக்கப்பட்டதும், அவர் உடனடியாக உடனடிப் சோதனைக்கு உள்ளாகியதாகவும் எனினும் அந்த சோதனையின் முடிவில் அவருக்கு தொற்று ஏற்படவில்லை என்பது தொடர்பாக அறிவிக்கப்பட்டதாவும். எவ்வாறயினும் தனதும் தனது குடும்பத்தின் நலன் கருதியும் ஏனையோரின் நலன் கருதியும் இந்த முன்னெச்சரிக்கை முடிவை எடுத்துள்ளதாகவும் அவர், சுகாதார விதிமுறைகளை கடுமையாகப் பின்பற்றுவதாகவும், 5 நாட்களுக்கு சுயமாக தனிமைப்படுத்தப்படுவதாகவும் பிரதமர் அலவலகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் அவர் இணைவழி வழியாக ஊடகங்களின் பிரதிநிதிகளோடு கலந்துரையாடுகையில் கனடியர்கள் அனைவரும் பாதுகாப்பாக இருக்க வேண்டும் என்றும் - தடுப்பூசி போடவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கனடியப் பிரதமர் அவர்களின் துணைவியார் சொபியா அவர்களும் 2020ம் ஆண்டின் ஏப்ரல் மாதம் அளவில் இங்கிலாந்துக்கு சென்ற போது அங்கு கோவிட்-19 தொற்றுக்கு உள்ளாகி இரண்டு வாரங்களுக்கு மேலாக கடுமையான தனிமைப் படுத்தலுக்கு உள்ளாகியிருந்தார் என்பதும் இங்கு கவனிக்கத்தக்கதாகும்.

TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergics
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும் Mrs. K. Vasanthakumar ஐ தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இலங்கை இந்தியாவுக்கு ஒரு மூலோபாய அச்சுறுத்தல் இல்லை – நாங்கள் சீனா பக்கம் சாய்கின்றோம் என்பதும் உண்மையில்லை

## இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர்




இந்தியாவிற்கு மூலோபாய பாதுகாப்பு அச்சுறுத்தலாக விளங்குவதற்கு நாங்கள் விரும்பவில்லை என தெரிவித்துள்ள வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பேராசிரியர் ஜயனத் கொலம்பகே அந்நிய செலாவணி நெருக்கடியை சமாளிப்பதற்காக இலங்கை சீனாவின் பக்கம் சாய்கின்றது என்ற விமர்சங்களை நிராகரித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கை வரலாறு முழுவதும் சமமான உறவுகளை பேணிவந்துள்ளதுடன் நாங்கள் அதன் மூலம் நன்மையடைந்துள்ளோம். நாங்கள் முக்கியமான தருணங்களில் சில துணிச்சலான முடிவுகளை எடுத்துள்ளோம் - உதாரணத்திற்கு சீனாவுடன் இராஜதந்திர உறவுகளை மீள ஏற்படுத்துதல் - இரப்பர் அரிசி உடன்படிக்கையில் கைசாத்திட்டமை - கச்சதீவை மீளப்பெற்றமை போன்ற நடவடிக்கைகள் இதற்கான உதாரணங்களாகும்.

எங்கள் வெளிவிவகார அமைச்சர் தனது நிபுணத்துவத்தை மேற்கு கிழக்கு மற்றும் ஏனைய பகுதிகளுடனான உறவுகளை பேணுவதில் மிகச்சிறந்த சிறந்த விதத்தில் செயற்பட்டுள்ளார்.

நடுநிலைமையை பேணுவதும் அதிகார போட்டியில் சிக்காமலிருப்பதுமே எங்கள் வெளிவிவகார கொள்கையின் முக்கிய உத்தரவு. நாங்கள் எந்த பக்கமும் சாய்வதில்லை - நாங்கள் அனைவரினதும் நண்பர்கள் அனைத்து சிறந்த விடயங்களிற்கும் நாங்கள் ஆதரவு வழங்குகின்றோம்.

ஏனைய நாடுகளிற்கு இலங்கை தொடர்பான புவிசார் அரசியல் நோக்கங்கள் உள்ளன. இந்தியப்பெருங்கடலின் இயக்கவியலை நாங்கள் புரிந்துகொள்ளவேண்டும், யாரையும் பகைத்துக்கொள்ள கூடாது. எங்கள் வெளிவிவகார அமைச்சர் தலைமையிலான எங்கள் முக்கிய கவனத்திற்குரிய விடயம் அனைவருடனும் ஈடுபாடுகளை கொண்டிருத்தலாகும்.

ஏற்கனவே ஐரோப்பிய ஒன்றிய சீன ஹங்கேரி பிரிட்டன் அமைச்சர்கள் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ளனர். இந்தியாவின் அளவையும் முக்கியத்துவத்தையும் கருத்தில்கொள்ளும் போது அந்த நாட்டிற்கு மூலோபாய பாதுகாப்பு அச்சுறுத்தலாக விளங்குவதற்கு நாங்கள் விரும்பவில்லை.

இலங்கையை இந்தியாவிற்கு ஆபத்தை ஏற்படுத்துவதற்கான தளமாக பயன்படுத்துவதற்கு ஒருபோதும் அனுமதிப்பதில்லை என்பது குறித்து ஜனாரிபதி மிகவும் உறுதியாக உள்ளார். இது எங்கள் அயல் - எங்கள் ஸ்திரமானதாக இல்லையென்றால் நாங்களும் பிரச்சினைகளை எதிர்கொள்ளநேரிடும்.

கேள்வி - அந்நிய செலாவணி நெருக்கடியை சமாளிப்பதற்காக இலங்கை சீனா பக்கம் சாய்கின்றது என தெரிவிக்கின்ற ஆய்வாளர்கள் சீனாவை நம்பியிருப்பதை விமர்சிக்கின்றார்களே?

பதில் - நாங்கள் சீனாவுடன் மாத்திரம் ஈடுபாட்டை கொண்டிருக்கவில்லை, எரிபொருள் கொள்வனவிற்காக இந்தியா எங்களிற்கு இன்னுமொரு 500 மில்லியன் டொலர்களை கடனாக வழங்கியுள்ளது. பங்களாதேஸ் கூட நாணயபரிமாற்றத்திற்கு இணங்கியுள்ளது. நாங்கள் எங்கள் நண்பர்களை ஆதரவளிக்குமாறு கேட்டுக்கொண்டுள்ளோம்.

பெருந்தொற்று காரணமாக உருவாகியுள்ள முன்னொருபோதும இல்லாத நிலைமை இது. வருடத்திற்கு 4.5 பில்லியன் டொலர்களை பெற்றுத்தந்த - மூன்று பில்லியன் மக்களிற்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் வேலைவாய்ப்பை வழங்கிய சுற்றுலாத்துறை முடங்கிய நிலையில் காணப்படுகின்றது.

இலங்கை போன்ற சிறிய நாட்டிற்கு இது பெரும் பாதிப்பாகும். ஆனால் சுற்றுலாத்துறை தற்போது மீண்டும் உயிர்பெறதொடங்கியுள்ளது.

ஆனால் நாங்கள் எங்கள் நண்பர்களிடம் தங்கியிருக்கும் நிலையை தவிர்த்துக்கொள்ளவேண்டும் - எங்கள் ஏற்றுமதி வருமானங்கள் மீள கிடைக்க தொடங்கியுள்ளமை நல்ல அறிகுறியாகும். புலம்பெயர்ந்த தொழிலாளர்களிடமிருந்து கிடைக்கின்ற வெளிநாட்டு வருமானம் மெல்ல மெல்ல அதிகரிக்கின்றது. நாங்கள் எங்கள் கையிருப்பை கட்டியெழுப்பவேண்டும்.

கடந்த 73 வருடங்களாக எங்கள் பொருளாதார கொள்கையில் ஏதோ தவறு இடம்பெற்றிருக்கின்றது. பல பிரச்சினைகள் ஒன்றுசேர்ந்து தற்போதைய நெருக்கடியை உருவாக்கியுள்ளன. நாங்கள் உற்பத்திகளை அதிகரிக்கவேண்டும், வர்த்தகங்களை கவரவேண்டும் - அதிகாரிகள் மட்ட தலையீடுகளை நீக்கவேண்டும்.

கொழும்பு துறைமுகநகரம் சிறந்த உதாரணம், வர்த்தக நடவடிக்கைகளை இலகுவாக முன்னெடுப்பதற்கு அதிகாரிகள் மட்ட தலையீடுகளை தவிர்ப்பதற்கு அங்கு விசேட சட்டங்கள் உள்ளன.

ஆகவே நாங்கள் சீனா பக்கம் சாய்கின்றோம் என்பதில் உண்மையில்லை - எங்களிற்கு அதிகளவு தெரிவுகள் இல்லை. சர்வதேச சமூகம் எங்களிற்கு திட்டங்கள் முதலீடுகள் தொடர்பில் அதிகளவு தெரிவுகளை வழங்கவேண்டும்.

# விடுதலைப் புலிகளின் ஊடகப் பேச்சாளராக செயற்பட்ட தயா மாஸ்டருக்கு ஒத்திவைக்கப்பட்ட சிறை! மேல் நீதிமன்றம் தீர்ப்பு



தமிழீழ விடுதலைப் புலிகளின் ஊடகப் பேச்சாளராக செயற்பட்ட தயாமாஸ்டர் என அழைக்கப்படும் வேலாயுதம் தயாநிதிமீது தொடரப்பட்ட வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளதுடன், அவருக்கு ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருட சிறைத்தண்டனை வழங்கி வவுனியா மேல்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

தமிழீழ விடுதலை புலிகளின் ஊடகப் பேச்சாளராக இருந்த தயா மாஸ்டர் போரின் இறுதிக்கட்டத்தில் படையினரிடம் சரணடைந்தார். இந்த நிலையில் தயா மாஸ்டருக்கு எதிராக பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் சட்டமா அதிபரால் வவுனியா மேல் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.

குறிப்பாக கடந்த 2009ஆம் ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதி தொடக்கம் 2009 மே 18ஆம் திகதிக்கு உள்பட்ட காலப்பகுதிக்குள் தடை செய்யப்பட்ட இயக்கமான தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பின் தலைவர்களுடன் இணைந்து செயற்பட்டமை தொடர்பாக குறித்த வழக்கு தொடரப்பட்டது.

2006ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க பயங்கரவாதம் மற்றும் குறித்துரைக்கப்பட்ட பயங்கரவாத செயற்பாடுகளை தடுத்தல் விதிகளின் கீழ் தண்டனை விதிக்கப்பட கூடிய குற்றத்தை புரிந்துள்ளதாக வவுனியா மேல் நீதிமன்றில் சட்டமா அதிபரால் 2018ஆம் ஆண்டு ஒக்டோபர் 19ஆம் திகதி குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

வழக்கு செயற்பாடுகள் தொடர்ந்து இடம்பெற்று வந்த நிலையில் இன்றைய தினம் வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் முன்னிலையில் விசாரணைக்கு அழைக்கப்பட்டது. வழக்கில் தயா மாஸ்டர் மற்றும் அவர் சார்பாக சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஆஜராகியிருந்தார்.

குறித்த வழக்கில் தயாமாஸ்டருக்கு கட்டாய சிறைத்தண்டனை வழங்க வேண்டிய பிரிவுகளின் அடிப்படையில் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டது. அந்தகுற்ற பத்திரிகை திருத்தப்பட்டு குறைந்த குற்றச்சாட்டுக்கள் மாத்திரம் அவர் மீது முன் வைக்கப்பட்டிருந்தது.

அதன்படி அவர் தனது குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து அவருக்கு ஐந்து வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது.





# சாவகச்சேரி மின் மயான அபிவிருத்திக்காக தென்மராட்சி நிறுவனங்களின் சர்வதேச ஒன்றியம் 18 இலட்சம் கைளிப்பு



சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதியில் நகரசபையின் கோரிக்கைக்கு அமைவாக புலம்பெயர் மற்றும் உள்ளூர் உறவுகளின் நிதிப் பங்களிப்புடன் நிறுவப்படவுள்ள மின் மயானத்திற்கான மயான அபிவிருத்திக் குழு 22/01/2022 சனிக்கிழமை பிற்பகல் தெரிவு செய்யப்பட்டது.

சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் தலைமையில் நகரசபையின் பொன்விழா மண்டபத்தில் இடம்பெற்ற குறித்த குழுத் தெரிவில் மின் மயான அபிவிருத்திக் குழுத் தலைவராக சாவகச்சேரி வர்த்தக சங்கத் தலைவர் ந.சிவபாலன், செயலாளராக சாவகச்சேரி நகரசபைத் தவிசாளர் இ.சிவமங்கை, பொருளாளராக அதிபர் தேவரதி, திட்ட இணைப்பாளராக சமூகசேவகர் கலாநிதி அகிலன் முத்துக்குமாரசுவாமி, உப தலைவராக சாவகச்சேரி பிரதேசசபை உபதவிசாளர் செ.மயூரன், உப செயலாளராக சட்டத்தரணி திசாந்தினி ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் சாவகச்சேரி லயன்ஸ் கழகம், கொடிகாமம் வர்த்தக சங்கம்,கைதடி வர்த்தக சங்கம், சாவகச்சேரி இளைஞர் கழகம், வைத்தியர்கள், சமாதான நீதவான்கள், கிராம சேவகர்கள், அரசியல் கட்சி பிரமுகர்கள் சார்பாக ஒவ்வொருவர் என்ற ரீதியில் 17பேர் கொண்ட மின் மயான அபிவிருத்திக் குழு தெரிவு செய்யப்பட்டுள்ளது.



சாவகச்சேரியில் மின் மயானம் நிறுவ சுமார் ஒன்றரைக் கோடி தேவை என்ற நிலையில் இதுவரை 18இலட்சம் ரூபாய் நிதியை தென்மராட்சி நிறுவனங்களின் சர்வதேச ஒன்றியத்தினரால் சேகரிக்கப்பட்டு மின் மயான அபிவிருத்திக் குழு வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

தென்மராட்சி மைந்தர்கள் மற்றும் பொது அமைப்பினர்கள் அனைவரும் உங்களால் இயன்ற நேரடிப் பங்களிப்பினை வழங்குமாறு அன்புரிமையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

நேரடியாக பணம் வைப்புச் செய்வதற்கு:
Chavakachcheri Kannadippiddy Electrical Cemetry Project
Bank: People's Bank, Chavakachcheri.
A/C No: 110-2-001-7-0008145
1)Mr.Sivabalan Namasivayam
தலைவர்: சாவகச்சேரி மின் மயான அபிவிருத்திக் குழு
2)Mrs.Sivamankai Ramanathan - Chairman urban Council, Chavakachcheri
3)Mrs.Devarathy Sutheskaran - (Principal)

கனடிய செய்திகள் Canadian News

# தங்கள் நகரங்களுக்கு விஜயம் செய்யும்படி பரஸ்பர அழைப்பு விடுத்த யாழ் மேயர் வி. மணிவண்ணனும் ரொறன்ரோ மேயர் ஜோன் றோரியும்...


"ரொறன்ரோ மேயர் ஜோன் றோரி யாழ்ப்பாண நகருக்கு வருகை தந்து எமது மக்களை மகிழ்விக்க வேண்டும்" என்று யாழ்ப்பாண மேயர் மணிவண்ணன் அவர்களும்" யாழ்ப்பாண மேயர் மணிவண்ணன் எமது ரொறன்ரோ நகருக்கு வருகை தந்து எமது நகரத்தின் சிறப்புக்களையும் அழகையையும் காணவேண்டும்" என்று மேயர் ஜோன் றோரியும் பரஸ்பர அழைப்பு விடுத்ததை இணையவழிக் கலந்துரையாடலின் போது பார்த்த அனைவரும் பரவசம் அடைந்த நிகழ்வு கடந்த 25-01-2022 செவ்வாய்க்கிழமையன்று நடைபெற்றது.

அன்றைய தினம் ரொறன்ரோ-யாழ்ப்பாண நகரங்கள் சார்ந்த தமிழர் மரபுரிமை மாதக் கொண்டாட்ட நிகழ்வு ரொறன்ரொ மாநகர சபையில் உறுப்பினர் Jennifer McKellvie அவர்களதும் கனடிய தமிழர் பேரவையின் ஏற்பாட்டிலும் சிறப்பாக நடைபெற்றது.



மேற்படி இணையவழி கொண்டாட்ட நிகழ்வில் யாழ் மேயர் மணிவண்ணன் மற்றும் ரொறன்ரோ மேயர் ஜோன் றோரி ஆகியோர் சிறப்பு பேச்சாளர்களாக கலந்து கொண்டார்கள்.

ஆரம்ப உரையை நகர சபை உறுப்பினர் Jennifer McKellvie அவர்கள் ஆற்றினார்கள். அவர் தனது உரையில் ரொறன்ரோ வாழ் தமிழ் மக்கள் கனடாவின் வளர்ச்சியிலும் ரொறன்ரோ நகரின் வளர்ச்சியிலும் அதிக பங்கெடுத்து வருகின்றார்கள் என்றும் அத்துடன் இந்த நாட்டிலும் எமது நகரத்திலும் தங்கள் பண்பாட்டையும் கலாச்சாரத்தையும் தொடர்ந்து பேணுவதிலும் கண்ணும் கருத்துமாக உள்ளார்கள் என்றும் மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.



அன்றைய நிகழ்வை பிரகால் அவர்கள் அழகாகத் தொகுத்து வழங்கினார்.

கனடிய தமிழர் பேரரைவயின் தலைவர் சிவன் இளங்கோ அவர்களும் அங்கு சிறப்புரையாற்றினார்.

அங்கு சிறப்புரை வழங்கிய யாழ்ப்பாண மேயர் ரொறன்ரோ நகரமும் யாழ்ப்பாணம் நகரமும் இணைந்து தமிழர் மரபுரிமை மாதத்தின் சிறப்பைக் கொண்டாடும் வைபவத்தை ரொறன்ரோ மாநகரத்தின் உறுப்பினரும் தமிழர்கள் பலர் வாழ்ந்துவரும் ரொறன்ரோ ரூஜ்பார்க் வட்டாரத்தின் அங்கத்தவருமான Jennifer McKellvie அவர்கள் ஏற்பாடு செய்துள்ளதை அறிந்து புளாங்கிதம் அடைவதாகவும் தொடர்ந்து இந்த நகரங்களின் இணைந்த செயற்பாடுகளின் மூலம் யாழ்ப்பாண நகர மக்கள் வியக்கும் வண்ணம் ஆக்கபூர்வமான விடயங்கள் இடம்பெற வேண்டும் என்றும். மேயர் ஜோன் றோரி அவர்கள் தனது நகரத்தில் வாழ்ந்து வரும் தமிழ் மக்களோடு நெருங்கிய தொடர்புகளை வைத்துள்ளதைக் கண்டு தான் வியப்படைந்ததாகவும் இந்த நட்பு ரொறன்ரோ வாழ் தமிழ் மக்களுக்கு கிட்டியது போல தமது யாழ்ப்பாண நகரத்தில் வாழும் மக்களுக்கும் கிட்ட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

# FRONTLINE COMMUNITY CENTRE சமூகசேவை நிறுவனம் நடத்திய "தமிழர் மரபுரிமை மாதக் கொண்டாட்ட நிகழ்வு"



கனடாவில் பல வருடங்களாக இயங்கிவருவதும் தமிழர்களால் நிர்வகிக்கப்பெற்று வருவதுமான சமூக சேவை நிறுவனம் FRONTLINE COMMUNITY CENTRE ஏற்பாட்டில் அண்மையில் "தமிழர் மரபுரிமை மாதக் கொண்டாட்ட நிகழ்வு" சிறப்பாக நடைபெற்றது.

அமைப்பின் நிறுவனரும் நிறைவேற்றுப் பணிப்பாளருமான திருமதி விஜயா குலாவின் தலைமையில் அமைக்கப்பெற்ற சிறப்புக் குழு இந்த வைபவத்தை நேர்த்தியான முறையில் திட்டமிட்டது.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஸ்காபுறோ வடக்கு மாகாணப் பாராளுமன்றத் தொகுதியின் உறுப்பினரும் ஒன்றாரியோ மாகாணத்தில் முதியோர்களின் நலன் பேணும் அமைச்சருமான கௌரவ றேமண்ட் சோ அவர்கள் அழைக்கப்பெற்றிருந்தார். ரொறன்ரோ கல்விச் சபையின் தமிழ் மொழி சார்ந்த கற்கைநெறிகளுக்கான திட்டப் பொறுப்பாளருமான தமிழ் விரிவுரையாளருமான பொன்னையா விவேகானந்தன் அவர்கள் சிறப்புப் பேச்சாளராக அழைக்கப்பெற்றிருந்தார்.





அன்றைய நிகழ்வில் தமிழர் பண்பாட்டை நன்கு புலம்படுத்தும் கலை நிகழ்ச்சிகளும் உரைகளும் இடம்பெற்றன. FRONTLINE COMMUNITY CENTRE அமைப்பின் தொண்டர்கள் மற்றும் பணியாளர்கள் பங்கு பற்றிய நிகழ்வுகளும் அமைப்பின் மூத்தோர் பிரிவில் அங்கத்தவர்களாக உள்ள உறுப்பினர்கள் வழங்கிய கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

ஸ்காபுறோ வடக்கு மாகாணப் பாராளுமன்றத் தொகுதியின் உறுப்பினரும் ஒன்றாரியோ மாகாணத்தில் முதியோர்களின் நலன் பேணும் அமைச்சருமான கௌரவ றேமண்ட் சோ அவர்கள் அங்கு உரையாற்றுகையில் கடந்த 30 வருடங்களாக நகரசபையின் உறுப்பினராகவும் தொடர்ந்து மாகாணப் பாராளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றும் தமக்கு தமிழ் மக்களின் சிறப்பியல்களும் அவர்களது பாரம்பரிய பண்பாட்டுக்கோலங்களும் மிகவும் பரிச்சியமானவை என்று குறிப்பிட்டார்.

MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)

⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)

⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்

⇒ Private Mortgage (No Income Verification)

⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)

⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்

⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC

www.mortgageclinicccanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி

1504 Markham Rd,

Toronto, ON, M1B 2V9

(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE

RIGHTBROKER = RIGHTMORTGAGE

Lic # 10530

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# பத்தனை தமிழ் வித்தியாலயத்திற்கு கணணிகளை கையளிக்கும் நிகழ்வு




நுவரெலியா கல்வி வலயத்திற்குற்பட்ட பத்தனை தமிழ் மகா வித்தியாலயத்திற்கு கணணிகளை வழங்கும் நிகழ்வு பாடசாலையின் அதிபர் திரு. செல்வம் தலைமையில் கடந்த 20.01.2022 ஆம் திகதி இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக நுவரெலியா கல்வி வலயத்தின் உதவி கல்வி பணிப்பாளர் திரு. மோகன் அவர்களும், கோட்ட கல்வி பணிப்பாளர், IMHO நிறுவனத்தின் திட்ட பணிப்பாளர் திரு. கந்தையா விக்னேஷ்வரன் அவர்களும், இரட்னம் அறைக்கட்டளை, வன்னி ஹோப் ஆகிய அமைப்புகளின் ஒருங்கிணைப்பாளர் திரு. முரளி அவர்களும் மற்றும் பாடசாலையின் ஆசிரியர்கள், மாணவர்கள் என பலரும் கலந்துக் கொண்டனர்.





இரட்னம் அறைக்கட்டளை, வன்னி ஹோப் ஆகிய அமைப்புக்கள் இணைந்து நவீன கற்றல் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் முகமாக இப் பாட-சாலை மாணவர்களுக்கு ஐந்து கணணிகளை வழங்கியது. பல வருட காலமாக கணனி வசதி இப் பாடசாலை மாணவர்களுக்கு எட்டாக் கனியாக காணப்பட்ட நிலையில் இரட்னம் அறைக்கட்டளை, வன்னி ஹோப் ஆகிய அமைப்புக்கள் இணைந்து இந்த வசதியினை ஏற்படுத்திக் கொடுத்துள்ளமை வரவேற்கத்தக்கது. மேலும் எதிர்காலத்தில் தொழிநுட்ப பாட துறைகளில் மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளை பெறுவதற்கு இது வாய்ப்பாக அமையும் என்பதில் எந்த ஐயமும் இல்லை.

மேலும் இந் நிகழ்வில் கலந்துக் கொண்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் தனதுரையில் குறித்த நிறுவனகளுக்கு நன்றிகளையும் பாராட்டுக்களையும் கூறியதோடு, மாணவர்கள் இவ் வளங்களை பயன்படுத்தி எதிர்கால நவீன உலகிற்கு தயாராக வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

# இலங்கை ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமல் ஆக்கப்பட்டு 12 வருடங்கள்

## நீதி வேண்டி மனைவி தலைமுடி காணிக்கை



இலங்கை ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமல் ஆக்கப்பட்டு 12 வருடங்கள் நிறைவடைந்துள்ள நிலையில், அவருக்கு நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்று வலியுறுத்தி, பிரகீத் எக்னெலிகொடவின் மனைவி சந்தியா எக்னெலிகொட தனது தலை-முடியை காணிக்கையாக செலுத்தியுள்ளார்.

கொழும்பு முகத்துவாரத்தில் அமைந்துள்ள காளி கோவிலில், இன்று காலை விசேட பூஜை வழிபாட்டில் ஈடுபட்ட அவர் அதன் பின்பு தனது தலைமுடியை காணிக்கையாக செலுத்தியுள்ளார்.

ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட கடந்த 2010ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24 ஆம் திகதி காணாமல் ஆக்கப்பட்டார். அவருக்கு என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்த வேண்டும் என வலியுறுத்தி, அவரது மனைவி சந்தியா எக்னெலிகொட மனித உரிமைகள் மற்றும் சிவில் சமூக அமைப்புக்களுடன் இணைந்து தொடர்ச்சியாக போராடி வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.



# "உண்மையை காணவும் பேசவும் முன் வாருங்கள்"

## மன்னாரில் சர்வ மதத் தலைவர்களுடன் விசேட கருத்து பகிர்வு நிகழ்வில் வலியுறுத்தல்



உண்மையை காணவும் அதனை பேசவும் அனைத்து தரப்பினரும் முன்வர வேண்டும் என திங்கட்கிழமை (24) காலை மன்னாரில் நடைபெற்ற சர்வ மத தலைவர்களுடன் விசேட கருத்து பகிர்வு நிகழ்வில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மன்னாரில் தேசிய சமாதான பேரவையின் ஏற்பாட்டில் அதன் நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர் மெடோ-சன் பெரேரா தலைமையில் திங்கட்கிழமை (24) காலை மன்னாரில் உள்ள தனியா-ர் விடுதியில் இடம்பெற்ற சர்வமத நிகழ்வின் போது சர்வமததலைவர்களினால் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மத சக வாழ்வை பலப் படுத்துவதன் ஊடாக "பன்மைத்துவ சமூகத்தை கட்டியெழுப்புவோம்" எனும் தொனிப்பொருளில் தேசிய சமாதானப் பேரவையின் அனுசரணையில் தொடர்பாடலுக்கான நிலையம் (CCT) அமைப்பின் ஒழுங்கமைப்பில் மன்னார் பிரதேச சர்வ மத குழு வினரின் ஏற்பாட்டில் "உண்மையை காணவும் பேசவும் முன்னே வாருங்கள்" எனும் தொனிப் பொருளில் விசேட கருத்தமர்வு மன்னார் தேசிய சமாதானப் பேரவையின் நிகழ்ச்சி திட்ட இணைப்பாளர் மெடோ-சன் பெரேரா மேற்பார்வையில் தொடர்பாடலுக்கான நிலையத்தின் இணைப்பாளர் ஜோண்சன் தலைமையில் (24) திங்கட்கிழமை மன்னார் தனியார் விருந்தினர் விடுதியில் காலை 10 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

மத ரீதியான பிளவு மற்றும் இன மத முரண்பாடுகள் தொடர்பாக மதத் தலைவர்களின் நிலைப்பாடு மற்றும் அவர்களின் ஆலோசனைகளை வெளிக் கொண்டு வரும் முகமாக குறித்த விசேட கருத்தமர்வு மற்றும் விவாத நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

பிரதேச ரீதியாக இடம் பெறும் சிலை உடைப்புகள், மத சின்னங்கள் புறக்கணிக்கப் படுகின்றமை, மத தலைவர்கள் மத்தியில் முரண்பாடுகள், வெறுப்பு பேச்சு, சமூக ஊடகங்களின் தற்போதைய நிலை போன்றவை தொடர்பான விடயங்களில் மத தலைவர்கள் மற்றும் சர்வ மத குழுவினரின் வகிபாகம் தொடர்பாக பூரண தெளிவு படுத்தல் குறித்த நிகழ்வின் ஊடாக பகிரப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வில் மன்னார் மாவட்டத்தை பிரதி நிதித்துவப்படுத்தும் சர்வ மதங்களைச் சேர்ந்த மதத் தலைவர்கள், அரச அதிகாரிகள், ஊடகவியலாளர்கள், மற்றும் மன்னார் மாவட்டத்தைச் சேர்ந்த சர்வ மத குழு உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

- மன்னார் நிருபர்








# மன்னார் மாவட்டத்தில் கனியவள மண் அகழ்வுக்கு எதிராக பல இடங்களில் விழிப்புணர்வு பதாதைகள்

மன்னார் மாவட்டத்தில் உள்ள கரையோர பகுதிக-ளில் இடம் பெறும் சட்ட வி-ரோத கனிய வள மண் அகழ்வு மற்றும் ஆய்வுகளை உடன-டியாக நிறுத்தக் கோரி "மன்னாரின் சுற்றாடலை பாதுகாக்கும் அமைப்பின்" ஒழுங்கமைப்பில் பொது இடங்களில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பதாதைகள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

மன்னார் கடற்கரையோரங்களில் காணப்படும் மணல்களில் மிகவும் விலை உயர்ந்த அரிதான "தைத்தனியம்" எனும் கனிமம் அதிக அளவு காணப்பட்டு வருகின்ற நிலையில் குறித்த தைத்தனியத்தை அகழ்வு செய்யும் பணிகள் சட்டவிரோதமாக இடம் பெறுவதை தடுக்க கோரி குறித்த விழிப்புணர்வு பதாதை-கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

அவுஸ்திரேலிய நிறுவனம் ஒன்று குறித்த தைத்தனியம் அகழ்வுக்கான செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளதாகவும் முதற் கட்டமாக மன்னாரில் பேசாலை, தலைமன்னார் உள்ளிட்ட பல பகுதிகளில் மணலுக்கு அடியில் பல மீற்றர்கள் குழி தோண்டப்பட்டு மாதிரிகள் சேகரிக்கப்பட்டு வருவதாகவும் அவற்றை உடனடியாக நிறுத்தக் கோரி மன்னாரின் சுற்றாடலை பாதுகாக்கும் அமைப்பினர் மும் மொழிகள் அடங்கிய குறித்த பதாகைக-ளை பிரதான பேருந்து நிலையம், வைத்தியசாலை சந்தி, மடு சந்தி உட்பட பல பகுதிக-ளில் காட்சிப்படுத்தியுள்ளனர்.



மேற்படி காட்சிப்படுத்தப்பட்ட சில பாதைகள் சில இடங்களில் கனிய வள அகழ்வு டன் சம்பந்தப்பட்ட விசமிகளால் கிழிக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

- மன்னார் நிருபர்

# மலேசியத் தமிழ்ப் பள்ளி மாணவர்களுக்கான "நாவன்மை நிகழ்ச்சி" யின் ஜனவரி 2022 இற்கான அரங்கம் எதிர்வரும் 30-01-2022 அன்று நடைபெறுகின்றது

மலேசியத் தமிழ்ப் பள்ளி மாணவர்களுக்காக நடத்தப்பெறும் "நாவன்மை நிகழ்ச்சி" யின் ஜனவரி 2022 இற்கான அரங்கம் எதிர்வரும் 30-01-2022 அன்று நடைபெறுகின்றது. கனடா உதயன் பத்திரிகை நிறுவனத்தின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்த இணையவழி நிகழ்ச்சிக்கான அனைத்து தொழில்நுட்ப மற்றும் நிர்வாக ஏற்பாடுகளையும் மலேசியா வாழ் அன்புச் சகோதரர் பாடகர் ரவாங் ராஜா அவர்கள் செய்து வருகின்றார்.

இம்மாதம் நிகழ்ச்சிக்கு சிறப்பு விருந்தினராக கனடாவிலிருந்து கவிஞர் குமரகுரு கணபதிப்பிள்ளை அவர்கள் அழைக்கப்பெற்றுள்ளார்.

மேலதிக விபரங்களுக்கு இங்கு காணப்பெறும் விளம்பர அறிவித்தைப் பார்க்கவும்.

கனடா உதயன் நிறுவனம் http://www.uthayannews.ca

Join Zoom Meeting: Meeting ID: 847 1770 8410
Passcode: JAS6855

For more information please contact:
MALAYSIA ZOOM EVENT ORGANIZER
(Singer RAJA RAWANG, Malaysia)
+60123776559
http://wassap.my/0123776559/RajaRawanginfo




இந்தியா செய்திகள்
India News

# குடியரசு தின விழா அணிவகுப்பில் பங்கேற்ற ரபேல் போர் விமான முதல் பெண் விமானி



டெல்லி ராஜபாதையில் நடைபெற்ற குடியரசு தின அணிவகுப்பின்போது இந்திய விமானப் படையின் வீரர்கள் அணிவகுத்துச் சென்றனர். அதைத் தொடர்ந்து விமானப் படையின் 75 விமானங்கள் பறந்து சாகசம் செய்தன. இதில் பிரான்ஸிடமிருந்து வாங்கிய ரபேல் போர் விமானங்களும் அடக்கம்.

அணிவகுப்பின்போது ரபேல் போர் விமானத்தின் முதல் பெண் போர் விமானி என்ற பெருமையைப் பெற்ற ஷிவாங்கி சிங் உள்ளிட்டோர் பங்கேற்றனர். அதே நேரத்தில் குடியரசு தின விழா அணிவகுப்பில் பங்கேற்ற 2-வது பெண் போர் விமானி ஷிவாங்கி என்பது குறிப்பிடத்தக்கது.

வாரணாசியைச் சேர்ந்த ஷிவாங்கி சிங், இந்திய விமானப் படையில் 2017-ல் சேர்ந்தார். முதலில் மிக்-21 பைசன் ரக விமானத்தை இயக்கி வந்த ஷிவாங்கி தற்போது ரபேல்போர் விமானத்தை இயக்கி வருகிறார்.


DEBT FREE CREDIT SOLUTION

- கடன் தொகையினை 80% வரை குறைத்து அதனை வட்டியின்றி ஒரு மாதத் தவணையில் கட்ட ஏற்பாடு செய்தல்
  We provide expert advice on how to consolidate and reduce debt payments safely without borrowing money
- பாதுகாப்பான முறையில் கடனை அடைப்பது பற்றிய அறிவுரையும் ஆலோசனையும் தரப்படும்
  We shield you from your creditors and offer you a guranteed protection
- கடன் கொடுத்தவர்களின் அச்சுறுத்தல்கள், சட்ட நடவடிக்கைகளிலிருந்து பாதுகாப்பு
  We package a custom solution to protect all your assets including your hard earned property, vehicle, insurance, RRSP, TFSA, RESP, Shares
- உங்கள் சேமிப்பு, சொத்து, வாகனம், முதலீடுகள் பாதுகாப்பிற்கு உரிய வழிமுறை செய்தல்
  We arrange a sensible Repayment Plan minimizing potential lossesand avoiding bankruptcy

DF CREDIT SOLUTION
SETTLEMENT | CONSUMER PROPOSAL | BANKRUPTCY

Head Office
10 Milner, Business court, Suite 334
Toronto, ON M1B 3C6

416. 834. 7227
www.dfcstoday.ca
info@dfcs.today

Branches
Mississauga | Vaughan



ELANKEERAN THAN
Certified Insolvency Counsellor

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மட்டக்களப்பில் 1300 பேருக்கு ஒமிக்கிரோன் – ஒருவாரத்தில் 22 வயது யுவதி உட்பட 6 பேர் உயிரிழப்பு

## மட்டு பிராந்திய சுகாதார வைத்திய சேவைகள் பணிப்பாளர்



மட்டக்களப்பு மாவட்டத்தில் ஓமிக்குரோன் வைரஸ் என சந்தேகிக்கப்படும் வைரஸ் நோயயினால் 40 கர்ப்பிணி தாய்மார்கள் உட்பட 1300 பேருக்கு நோய் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் கடந்த ஒருவாரத்தில் 22 வயதுடைய யுவதி ஒருவர் உட்பட 6 பேர் உயிரிழந்துள்ளதாக மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் கே. சுகுணன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட கொரோனா தடுப்பு செயலணி கூட்டம் வியாழக்கிழமை (27) மாவட்ட செயலகத்தில் செயலணியின் தலைவரும் மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தலைமையில் இடம்பெற்றது. இதில் கலந்துகொண்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் கே. சுகுணன் ஊடகங்களுக்கு தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்தார்.

திடிரென எமது நாடு உட்பட உலகம் பூராக ஒமிக்ரோன் கொரோனா வைரஸ்சின் தாக்கத்தினால் மிக அதிகமானோர் பாதிக்கப்பட்டு வருகின்றனர். அந்த விதத்தில் மேற்கு மாகாணமான கொழும்பு கம்பஹா தவிர்ந்து கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகரித்துள்ளது.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் நேற்று 100 மேற்பட்ட நாயாளிகளும் 20க்கு மேற்பட்ட கர்ப்பிணிதாய்மார்களும் இந்த நோய்தாக்கம் கண்டறியப்பட்டுள்ளதையடுத்து மாவட்டத்தில் 40க்கு அதிகமான கர்ப்பிணி தாய்மர்கள் ஒமிக்கிரோன் என சந்தேகிக்கப்படும் வைரஸ் தாக்கத்தினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த 3 தினங்களில் 500 நோயாளிகள் அடையாளம் காணப்பட்டதையடுத்து 1300 பேருக்கு நோய் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் இன்று வயது 22 யுவதி ஒருவர் உயிரிழந்துள்ளதையடுத்து இரண்டு யுவதிகள் உட்பட 6 பேர் கடந்த ஒருவாரத்தில் உயிரிழந்துள்ளனர். கடந்த முறை டெல்டா வைரஸ் நோயினால் பாதிக்கப்பட்டவர்களை வைத்து பராமரிப்பதற்கு சிரமப்பட்டிருந்தோம். ஆனால் இந்த முறை வந்திருக்கின்ற ஒமிக்கிரோன் வைரஸ் ஆனது மிக அதிகளவானவர்களை மிக குறுகிய காலத்தில் நோயினால் பாதிப்படைய செய்து கொண்டிருக்கின்றது.

இந்த தாக்கம் ஏற்பட்டதையடுத்து எங்களுக்கு எதிர்காலத்தை நோக்கிய நிச்சயமற்ற தன்மை ஏற்பட்டுள்ளதுடன் இந்த நோய்தாக்கம் எம்மை திக்கு முக்காடவைத்துள்ளது ஏன் என்றால் வைத்தியசாலைகளில் வைத்து பராமரிப்பதற்கான போதிய இடங்கள் இல்லை. ஆகவே பொது மக்கள் இந்த ஒரு அபாயத்தை உணர்ந்தவர்களாக ஒவ்வொரு நடைமுறைகளையும் பின் பற்ற வேண்டும் என கேட்டுக் கொள்கின்றோம்.



இன்று இலங்கையில் இருக்கின்ற இந்த பொருளாதார சீரிழிவை நோக்கி சென்று கொண்டிருக்கின்ற இந்த நிலமை கொரோனா தாக்கத்தினால் ஏற்பட்ட இந்த நிலமையை மேலும் அதிகரிக்கின்ற விதமாக எமது நடவடிக்கைகளை செய்ய முடியாது எனவே தேவையற்ற விதத்தில் கூட்டம் கூடுதலை நிறுத்தவேண்டும்.

பிறந்த நாள் வைபவங்கள் மற்றும் வேறு சமூக வைபவங்களுக்காக ஒன்று கூடுவதை நிச்சயமாக தவிர்த்துக் கொள்ளவேண்டும் அதேவேளை ஒன்று கூடுவதற்கு சுகாதார அதிகாரிகளின் அனுமதியை பெறவேண்டும். இது தொடர்பாக மாவட்டத்திலுள்ள பிரதேச செயலாளர்கள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள், பொலிஸ் நிலையங்கள், அனுமதி வழங்குதல் மற்றும் சட்ட நடவடிக்கை தொடர்பாக கலந்துரையாட உள்ளோம்.

எனவே மக்கள் சுகாதார அமைச்சினால் வழங்கப்பட்டுள்ள சுகாதார நடைமுறைகளுக்கு ஏற்ப நடந்து கொள்ளவேண்டும். முககவசம் அணிவது என்பது மிக மிக முக்கியமானது சமூக இடைவெளி என்கின்ற ஒரு மீற்றர் இடைவெளி மற்றும் கை சுகாதாரம் பேனவேண்டும்.

இந்த வைரஸ்சை நோயை உலகத்தில் இருந்து இல்லாமல் ஒழிப்பதற்கு தான் இந்த தடுப்பூசி வழங்கப்படுகின்றது இந்த தடுப்பூசி மூலம் கடந்த காலத்தில் பலபல தொற்று நோய்கள் இல்லாமல் செய்யப்பட்டுள்ளது. எனவே இந்த கொரோனா தொற்றை இந்த உலகத்தை விட்டு இல்லாமல் செய்யப்பட வேண்டும் என்றால் இந்த தடுப்பூசி அதற்குள்ள விதத்தில் ஏற்றிக் கொள்ளவேண்டும்.

எமது நாட்டை பெறுத்தமட்டில் 12 வயது தொடக்கம் 15 வயதான மாணவர்களுக்கு பைசர் தடுப்பூசி ஒரு டோஸ் ஏற்றப்படுகின்றது. 16 வயதில் இருந்து 19 வயது மாணவர்களுக்கு 2 டோஸ் 3 மாதகால இடைவெளியில் ஏற்றப்படுகின்றது. 20 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு 3 வது தடுப்பூசியான பூஸ்சர் ஊசி ஏற்ற அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது எனவே நோய்வாய்ப்பட்டவர்கள் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் கர்ப்பிணிதாய்மார்கள், முக்கியமாக இந்த தடுப்பூசிகளை பெற்றுக் கொள்ளவேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இன்றில் இருந்து பதிய கட்டுப்பாடுகள் புதிய விதிமுறைகள் புதிய அறிவுறுத்தல்கள் வழங்கப்படும். அதில் அரசியல்வாதிகள் உயர்அதிகாரிகள் என உயர்வு தாழ்வு பார்க்காது சட்டம் அனைவருக்கும் சமம் என்ற விதத்தில்தான் சுகாதார நடவடிக்கை எடுக்கப்படும. எனவே அனைவரும் ஒத்துழைக்கவேண்டும் ஒத்துழைப்பு கொடுக்க மறுப்பவர்களுக்கு சட்டநடவடிக்கை எடுக்கப்படும்.

முதலாவது அலையின் போது கொரோனா வைரசின் அல்பா திரிவு வைரஸ்தான் எங்களை தாக்கியிருந்தது இரண்டாவது அலையின் போது பீற்றா காமா எனப்படுகின்ற தாக்கியிருந்தது மூன்றாவதாக அலையில் அதிகளவு உயிர்சேதத்தையும் அதிகளவு தொற்றையும் ஏற்படுத்தியிருந்தது டெல்டா மிகவும் ஒரு அபாயமான வைரசாக கணிக்கப்பட்டிருந்தது.

ஆனால் இப்பொழுது உலகத்தில் 99 வீதமான கொவிட்-19க்கு காரணமாக இந்த ஓமிக்குரோன் வைரஸ் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது ஆகவே மட்டக்களப்பில் இருந்து மாதிரிகளை அனுப்பியுள்ளோம் இருந்தாலும் இங்கு காணப்படுகின்ற அனைவருமே ஒமிக்கிரோன் பிறவு வைரசால் தான் பாதிக்கப்பட்டுள்ளதாக சந்தேகிக்கின்றோம் அது விரைவில் விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்படும் என்றார்.

# மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற நீதி அமைச்சின் நடமாடும் சேவை



நீதி அமைச்சின் ஏற்பாட்டில் "நீதிக்கான அணுகல்" நடமாடும் சேவை வியாழக்கிழமை (27) காலை 9.30 மணி முதல் மன்னார் மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்றது. குறித்த நடமாடும் சேவையானது காலை 9.30 மணியளவில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மெல் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

குறித்த நடமாடும் சேவையில் பல்வேறு திணைக்களங்கள் கலந்து கொள்ளும் என அறிவிக்கப்பட்ட போதும் காணாமல் போனவர் பற்றி அலுவலகம், இலங்கை சட்ட உதவி ஆணைக்குழு, நீதி அமைச்சின் பிரதி நிதிகள் மற்றும் விழிப்புணர்வு கருத்தரங்கு ஆகியவை மாத்திரமே இடம் பெற்றது.





இதன் போது வருகை தந்த மக்கள் இலங்கை சட்ட உதவி ஆணைக்குழுவிடம் சட்ட உதவி ஆலோசனைகளை பெற்றுக் கொண்டதுடன், காணாமல் போனவர் பற்றிய அலுவலக பிரதிநிதிகளிடம் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சென்று காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் விவரங்களை பதிவு செய்துள்ளனர்.

குறித்த நடமாடும் சேவையில் நீதி அமைச்சின் பிரதி நிதிகள், நீதி அமைச்சின் கீழ் உள்ள திணைக்கள அதிகாரிகள்,மாவட்ட செயலக பணியாளர்கள், கிராம அலுவலர்கள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.

**- மன்னார் நிருபர்**

# மன்னாரில் இயற்கை முறையில் பயிரிடப்பட்ட ஒரு லட்சம் கிலோ பூசணி அறுவடை



மன்னார்- முசலி பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட கொண்டைச்சி பகுதியில் இலங்கை கஜு கூட்டுத்தாபனத்தினால் இயற்கையான முறையில் பயிரிடப்பட்ட தர்பூசணி பூசணிக்காய், மற்றும் கெக்கரிக்காய் பயிர் செய்கையின் அறுவடை நிகழ்வு வியாழக்கிழமை (27) மதியம் கொண்டச்சி கஜு பண்ணையில் இடம் பெற்றது.

இலங்கை கஜு கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் சட்டத்தரணி சாரங்க ரத்னாயக்கா மற்றும் கஜு கூட்டுத்தாபன அதிகாரிகள் இணைந்து குறிப்பட்ட அறுவடை செயற்பாட்டை ஆரம்பித்து வைத்தனர்.

கடந்த நவம்பர் மாதம் மேற்கொள்ளப்பட்ட பயிற்செய்கையானது முற்று முழுதாக இயற்கையான முறையில் மேற்கொள்ளப்பட்டு மூன்று மாதங்களின் பின்னர் இன்றைய தினம் அறுவடை செய்யப்பட்டது.



இலங்கை கஜு கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான 250 ஏக்கர் நிலத்தின் மேற்படி பயிர்ச்செய்கை மேற் கொள்ளப்பட்டதுடன் குறித்த அறுவடையில் ஒரு (1) லட்சம் கிலோ மதிப்பிடக் கூடிய பூசணிக்காய்கள், இருபத்தையாயிரம் (25,000) கிலோ அளவுடைய தற்பூசணிகளும் முப்பதாயிரம் (30.000) கிலோ கெக்கரிக்காயும் அறுவடை செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**

**Sapphire Banquet & Catering**

Specializing in Videography & Photography

- Anniversary Party
- Birthday Party
- Bridal Shower
- Children's Party
- Engagement Party
- and more...
- Family Get-together
- Graduation Party
- Holiday Party
- Religious Ceremonies
- Wedding Showers

SHIVA SUBRAMANIAM:(647) 406-4868

# நாட்டில் புரையோடிப் போயுள்ள இனச் சிக்கலுக்கு தீர்வு காணத் தவறியதே இன்று நாடு ஒட்டாண்டி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது!

**- கனடா நக்கீரன்**

துன்ப துயரங்கள் தனித் தனியாக வருவதில்லை. அது வரிசையாக அணிதிரண்டு வரும். இதனை ஒரு தமிழ்ப் பாடல் மிக அழகாக சித்தரிக்கிறது.

ஆஈன, மழைபொழிய, இல்லம் வீழ,
அகத்தினள் நோய் தனில் வருந்த, அடிமை சாவ,
மாஈரம் போகுது என்று விதை கொண்டு ஓட,
வழியிலே கடன்காரர் மறித்துக் கொள்ள,
சாவோலை கொண்டு ஒருவன் எதிரே செல்ல,
தள்ள ஒணா விருந்து வர, சர்ப்பம் தீண்ட,
பாவாணர் கவிபாடிப் பரிசுகேட்க,
பாவிமகன் படுந்துயரம் பார்க்கொணாதே. (விவேக சிந்தாமணி - பாடல் 66)

சிறிலங்கா நாடும் இந்தப் பாவிமகன் படுந்துயரம் போலவே படாதபாடு பட்டுக் கொண்டிருக்கிறது. அயல்நாட்டு செலாவணி பற்றாக்குறை, அயல்நாட்டுக் கடன்களை அடைப்பதில் நெருக்கடி, இறக்குமதி, ஏற்றுமதி பற்றாக்குறை, பணவீக்கம், விலையேற்றம், அரிசி, மா, பால், மருந்து, எரிபொருள், மின்சாரம் போன்ற பல தட்டுப்பாடுகளுக்கு நாடு முகம் கொடுத்து வருகிறது. அயல்நாட்டு நாணயக் கையிருப்பு அயல்நாட்டுக் கடன் சுமைதான் முக்கிய நெருக்கடிகளாகக் கருதப்படுகிறது.

இலங்கையின் நிதி நெருக்கடிக்கு தலையான காரணம் குறைந்த பொருளாதார வளர்ச்சி விழுக்காடாகும். தற்போது வளர்ச்சி 4% ஆக உள்ளது. 2019 இல் வளர்ச்சி 2.26% ஆக இருந்தது. இது 2020 இல் -3.6% ஆகச் சுருங்கிவிட்டது. 2021 இல் வளர்ச்சி 3.65% எட்டியிருந்தது. 2022 இல் வளர்ச்சி எதிர்பார்ப்பு 3.64% ஆகும். இதனால் ஒட்டுமொத்த பொருளாதாரம் மோசமடைந்து வருகின்றது.



இந்த இருண்ட பின்னணியில் சுற்றுலாத்துறையில் வளர்ச்சி காணப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. கோவிட் தொற்றுக் காரணமாக அதிகம் பாதிக்கப்பட்ட துறை சுற்றலாத் துறையாகும். கடந்த ஆண்டு 150,000 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வருகை தந்திருந்தார்கள். 2021 டிசெம்பர் மாதத்தில் மட்டும் 89,506 கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் வந்திருந்தார்கள். இது 2020 டிசெம்பர் மாதத்தைவிட 22,675% அதிகரிப்பாகும். சனவரி மாதத்தில் முதல் 22 நாட்களில் சிறிலங்காவுக்கு சுமார் 59,000 சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளதாக அமைச்சர் இரணதுங்க தெரிவித்தார். அடுத்த ஐந்து நாட்களுக்கு எதிர்பார்க்கக்கூடிய அதிகபட்ச வருகை 10,000 ஆகும், இது சனவரி மாதத்து மொத்த வருகை 69,000 எட்டும் என எதிர்பார்க்கப் படுகிறது. கடந்த ஆண்டு இதே காலப்பகுதியில் 1,682 சுற்றலாப் பயணிகளே வந்திருந்தார்கள். இந்த மாதம் (சனவரி) பெரும்பாலும் உருசியா, இந்தியா, உக்ரைன், ஐக்கிய இராச்சியம் மற்றும் ஜெர்மனியில் இருந்து சுற்றுலாப் பயணிகள் வந்ததாக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

சென்ற ஆண்டு இறுதியில் இலங்கையின் அயல்நாட்டு நாணய கையிருப்பு அ.டொலர் 3.1 பில்லியன் ஆகும். அதற்கு முந்திய நொவெம்பர் மாதம் அ.டொலர் 1.0 பில்லியன் ஆக இருந்தது. இந்த அதிகரிப்புக்கு ஒரு காரணம் சீனாவின் மக்கள் வங்கியிடம் இருந்து பெறப்பட்ட அ.டொலர் 1.5 பில்லியன் நாணய பரிமாற்றம் **(currency swap)** ஆகும்.

இதில் இறையாண்மை முறிகளுக்கு செலுத்த வேண்டிய கடன் அ.டொலர் 500 பில்லியன் ஆகும். இந்தத் தொகை சனவரி 18 இல் செலுத்தப்பட்டது. மேலும் இந்த ஆண்டில் அ.டொலர் 4.2 பில்லியன் கடன் பெப்ரவரி - ஒக்தோபர் மாதங்களுக்கு இடையில் செலுத்த வேண்டிவரும்.




இலங்கை கடன் கட்ட வேண்டிய நாடுகளில் சீனா முதலிடத்தில் இருக்கிறது. மொத்தக் கடன் கொடுப்பனவில் சீனாவின் பங்கு 14% இருக்கிறது. இன்று சிறிலங்காவின் அயல்நாட்டுக் கடன் அ.டொலர் 48.7 பில்லியனை எட்டியுள்ளது, இது முந்தைய காலாண்டில் அ. டொலர் 50.6 பில்லியனாக இருந்தது. யூன் 2019 இல் இதுவரை இல்லாதளவு கடன் அ.டொலர் 55.6 பில்லியனை எட்டியிருந்தது. டிசெம்பர் 2012 இல் அ.டொலர் 37.1 பில்லியனை எட்டியிருந்தது. அயல்நாட்டு நாணய நெருக்கடி 2029 ஆம் ஆண்டுவரை நீடிக்கும் என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நிவாட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

கடந்த டிசெம்பர் 18 அன்று குவைஉா நிதி மதிப்பீடு நிறுவனம் சிறிலங்காவின் இறையாண்மை மதிப்பீட்டை *'CCC'* இலிருந்து **'CC'** ஆகக் குறைத்தது. 2022 ஆம் ஆண்டில் கடன் தவணை செலுத்துவதில் சிறிலங்கா தவறும் அபாயம் அதிகரித்து வருவதைக் காரணம் காட்டி இந்த மதிப்பீட்டைக் குறைத்துள்ளது. ஆனால் மத்திய வங்கி சுற்றுலாத் துறையில் வரவேற்கத்தக்க வலுவான மீட்சி மற்றும் ஏற்றுமதியில் வலுவான அதிகரிப்பு நாட்டின் அயல்நாட்டு நாணய கையிருப்பை 2022 ஆம் ஆண்டு முழுதும் ஆரோக்கியமான நிலையில் வைத்திருக்க முடியும் என்று அரசாங்கமும் மத்திய வங்கியும் நம்பிக்கை தெரிவித்துள்ளன.

கடந்த தசாப்தத்தில் துறைமுகங்கள், நெடுஞ்சாலைகள், நிலக்கரி மின் உற்பத்தி நிலையம் உள்ளிட்ட பல்வேறு உள்கட்டமைப்புத் திட்டங்களுக்காக அ.டொலர் 5 பில்லியன்களுக்கு மேல் கடனாக வழங்கிய சீனா சிறிலங்காவின் மிகப்பெரிய நிதிக்கொடுப்பாளராக இருந்து வருகிறது. சீனாவின் நிதியுதவியில் அம்பாந்தோட்டையில் துறைமுகம், சர்வதேச கிரிக்கட் விளையாட்டு மைதானம், அனைத்துலக விமான நிலையம் போன்றவை 2010க்குப் பின்னர் கட்டப்பட்டன.

(1) அம்பாந்தோட்டையில் மகம்புர மகிந்த இராசபக்ச துறைமுகம் அ.டொலர் 1.3 பில்லியன் செலவில் சீன நிறுவனத்தால் கட்டப்பட்டது. அதில் இருந்து கடன் வட்டி கட்டவே வருவாய் இல்லாத நிலையில் சிறிலங்கா அரசு அந்தக் கடனுக்கு ஈடாக 2017 ஆம் ஆண்டு 80% பங்கை 99 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு எழுதிக் கொடுத்து விட்டது. அது மட்டுமல்ல துறைமுகத்தை அண்டிய 15,000 ஏக்கர் நிலத்தையும் பொருளாதார மையம் ஒன்றை உருவாக்க 99 ஆண்டு குத்தகைக்கு கொடுக்கப்பட்டு விட்டது.

(2) 2013 இல் மத்தள இராசபக்ச பன்னாட்டு விமான நிலையம் கட்டி முடிக்கப்பட்டது. 2013 இல் திறக்கப்பட்ட இந்த விமான நிலையத்துக்கு செலவான தொகை அ.டொலர் 210 மில்லியன் (ரூபா42,000 மில்லியன்) ஆகும். இன்று அந்த விமான நிலையத்தில் ஆடிக்கொருக்கா அமாவாசைக்கொருக்கா அயல்நாட்டு விமானங்கள் தரையிறங்குகிறது.

(தொடர்ச்சி 13ம் பக்கம்)




Start your Second Career with Us
Financial Aid available!

JRS College of Business and Health Care Inc.
4168 Finch Avenue East, Suite330
Midland & Finch,
Toronto, Ontario M1S 5H6
(416)-292-2455

ARE YOU READY TO UPGRADE YOUR SKILLS AND GET A HIGH PAYING JOB?

*-Personal Support Worker*
*Starting Jan 31 2022*

*-Early Childhood Assistant*
*Starting Feb 14 2022*

*-Accounting & Payroll Administration*
*Starting Feb 7 2022*

*-Health Office Administrator*
*Starting March 2022*

GET UP TO $28,000 GRANT FROM THE GOVERNMENT

SHORT DURATION COURSES

FREE CONSULTATION WITH OUR EMPLOYMENT COACH

*Student Accounts:*

*Mathu*
"I chose Early Childcare Assistant which is 36 weeks at JRS college and received $34,000 from government"

Limited Seats | Free Consultation

*Thiny*
"I chose 40 weeks of Health Office Administrator diploma at JRS. Due to its long duration, i got a grant of $44,000 through Second Career for my studies, day care, & living allowance"

(416)-292-2455
(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)



# விடுதலைப் பொங்கலும் யாழ் சர்வதேச வர்த்தகச் சந்தையும்

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

கடந்த 13ஆம் திகதி அதாவது பொங்கலுக்கு முதல் நாள் யாழ்ப்பாணம் முற்றவெளியில் ஒரு வித்தியாசமான பொங்கல் ஒழுங்கு செய்யப்பட்டது. அதற்கு பெயர் விடுதலைப் பொங்கல். அரசியல் கைதிகளை விடுவிக்கப் போராடும் அமைப்பாகிய குரலற்றவர்களின் குரல் என்ற அமைப்பு அப் பொங்கல் நிகழ்வை ஒழுங்குபடுத்தியிருந்தது. தமிழாராய்ச்சி மாநாட்டில் கொல்லப்பட்டவர்கள் நினைவாக உருவாக்கப்பட்ட நினைவுச் சின்னத்துக்கு அருகில் ஒரு சிறிய சிறைக்கூண்டு செயற்கையாக உருவாக்கப்பட்டது. அதற்குள் கைதிகளின் உடைகளை அணிந்தபடி செயற்பாட்டாளர்கள் பொங்கல் நிகழ்வை நடத்தினார்கள். நிகழ்வுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களையும் ஏனைய அரசியல் வாதிகளையும் அழைத்ததாக ஏற்பாட்டாளர்கள் சொன்னார்கள். ஆனால் அதில் விரல் விட்டு எண்ணக் கூடிய மிகச்சில அரசியல்வாதிகளே காணப்பட்டார்கள். ஐங்கரநேசன், சிவாஜிலிங்கம், யாழ் நகரபிதா மணிவண்ணன், பார்த்திபன் உள்ளிட்ட மிகச் சில அரசியல்வாதிகளும் இரு மதத்தலைவர்களும் அங்கே காணப்பட்டார்கள். அரசியல் கைதிகளை நோக்கி பொது மக்களின் கவனத்தையும் வெளி நாடுகளின் கவனத்தையும் ஈர்ப்பது அந்த வித்தியாசமான பொங்கலின் நோக்கமாகும்.

தமிழ் பரப்பில் நடக்கும் பெரும்பாலான கவனயீர்ப்புப் போராட்டங்கள் அடுத்த நாள் பத்திரிக்கைகளில் தலைப்புச் செய்திகளாக வருவதோடு சரி. அவை பொதுமக்களின் கவனத்தை ஈர்ப்பதை விடவும் ஊடகவியலாளர்கள் மற்றும் புலனாய்வு துறையினரின் கவனத்தைத்தான் அதிகமாக ஈர்க்கின்றன.எனவே ஒரு கவனஈர்ப்புப் போராட்டத்தை ஒழுங்குசெய்யும் பொழுது அங்கே அதிர்ச்சியூட்டும் புதுமை இருக்க வேண்டும் என்று அரசியல் செயற்பாட்டாளர் ஒருவர் குரலைற்றவரின் குரல் அமைப்புக்கு ஆலோசனை கூறியிருந்தார். இவ்வாறு ஆலோசனை கூறப்பட்டது கடந்த ஆண்டில் ஆகும். மேலும் அது போன்று வேறு சில வித்தியாசமான படைப்பு திறன்மிக்க கவனயீர்ப்பு போராட்டங்களை ஒழுங்கு செய்யுமாறும் ஆலோசனை கூறப்பட்டது. தமிழ்தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒருநாள் கைதிகளின் உடையோடு கைதிகள் சிறையில் பயன்படுத்தும் சாப்பாட்டுக் கோப்பையோடு நாடாளுமன்றத்துக்கு வெளியே ஒரு கவனயீர்ப்பு போராட்டத்தை செய்யலாம் என்பது ஒன்று.

மற்றது தமிழ்தேசிய நிலைப்பாட்டைக் கொண்ட வழக்கறிஞர்கள் கைதிகளின் உடையோடு ஒரு நாள் நீதிமன்ற புறக்கணிப்புப் போராட்டத்தை முன்னெடுக்கலாம் என்பது. எனினும் நாடாளுமன்ற உறுப்பினர்களையோ அல்லது ஏனைய அரசியல் செயற்பாட்டாளர்களையோ அவ்வாறு வித்தியாசமான ஒரு கவனயீர்ப்பு போராட்டத்தை நோக்கித் திரட்டும் அளவுக்கு அரசியல் கைதிகளுக்காகப் போராடும் அமைப்பிடம் ஆட்களும் இல்லை வளங்களும் இல்லை.

இவ்வாறானதொரு வெற்றிடத்தில் கடந்த 13ஆம் தேதி ஒழுங்கு செய்யப்பட்ட கவன ஈர்ப்பு பொங்கலுக்கு வழமையாக போராட்டங்களில் காணப்படும் மிகச் சில அரசியல்வாதிகளே வருகை தந்திருந்தார்கள். பொதுமக்கள் என்று பார்த்தால் இல்லை என்று சொல்லுமளவுக்கே நிலைமை இருந்தது.

இவ்வாறு முற்றவெளியில் மிகச்சிறு தொகையினர் ஒரு கவனயீர்ப்பு பொங்கலை நடாத்திக் கொண்டிருக்க, அதிலிருந்து நடந்து போகும் தூரத்தில் இருந்த யாழ் நகரப்பகுதியில் பொங்கலுக்கான ஏற்பாடுகள் அமோகமாக காணப்பட்டன. பொங்கலுக்கு முதல் நாளான அன்று யாழ்ப்பாணத்தில் சிறிய மற்றும் பெரிய நகரங்கள் ஜனங்களால் பிதுங்கி வழிந்தன. கடந்த 12 ஆண்டுகளில் அமோகமாக கொண்டாடப்பட்ட பொங்கலில் அதுவும் ஒன்று. நாட்டில் பொருளாதார நெருக்கடி என்று ஒன்று உண்டா என்று கேட்குமளவுக்கு எல்லா நகரங்களும் ஜனங்களால் பிதுங்கி வழிந்தன.

இது நடந்து சரியாக எட்டு நாட்களின் பின் கடந்த வெள்ளி சனி ஞாயிறு ஆகிய மூன்று தினங்களில் அதே முத்தவெளியில், 12 ஆவது யாழ். சர்வதேச வர்த்தகச் சந்தை திறக்கப்பட்டது. சந்தை நடந்த மூன்று நாட்களிலும் லட்சக்கணக்கானவர்கள் திரண்டார்கள். மக்கள் வெள்ளம் பொங்கி வழிந்தது. சந்தைக்குள் பெரும்பாலும் மாலை வேளைகளில் உள்ளிட முடியாத அளவுக்கு ஜனத்திரள் பிதுங்கியது. குறிப்பாக இளைஞர்கள் வேண்டுமென்றே வரிசைகட்டி ஒருவர் மற்றவரின் தோளில் கைகளை வைத்தபடி பெண்கள் அதிகம் உள்ள பகுதிகளை நோக்கி புகையிரதம் ஓடி அட்டகாசம் செய்தார்கள்.

இவ்வாறாக பொங்கலுக்கு முதல் நாளும் பொங்கல் அன்றும் பொங்கலில் இருந்து ஒரு கிழமை கழித்தும் முற்றவெளியில் நடந்தவைகளை தொகுத்துப் பார்த்தால் ஒரு விடயம் தெளிவாகத் தெரிகிறது. மக்கள் கொண்டாட விரும்புகிறார்கள். மகிழ்ச்சியாக இருக்க விரும்புகிறார்கள். சந்தர்ப்பம் கிடைத்தால் அதை அட்டகாசமாக அனுபவிக்கிறார்கள். அதில் பிழையில்லை. மக்கள் கொண்டாட வேண்டும். அதே சமயம் தங்களுக்காக போராடி சிறையில் இருப்பவர்களுக்குப் பொங்கல் இல்லை என்பதையும் நினைத்துப் பார்க்கவேண்டும். காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் வீதியோரங்களில் ஆண்டுக்கணக்காக இப்பொழுதும் போராடிக் கொண்டிருக்கிறார்கள் என்பதனை நினைத்துப் பார்க்கவேண்டும். காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காவும்
அரசியல் கைதிகளுக்காகவும் காணிகளை அபகரிக்கப்படுவதை எதிர்த்தும் நடக்கும் போராட்டங்களில் பொதுமக்களின் பங்களிப்பு மிகக் குறைந்த அளவே காணப்படுகிறது. அதற்குப் பொதுமக்கள் பொறுப்பில்லை. மக்கள் எப்பொழுதும் மகிழ்ச்சியை நோக்கியும் ஆபத்தில்லாததை நோக்கியும் சுகமானதை நோக்கியும் ஓடிக்கொண்டே இருப்பார்கள். அவர்களை இலட்சியத்தை நோக்கி, கனவுகளை நோக்கித் திரட்ட வேண்டியது அரசியல்வாதிகளும் அரசியல் செயல்பாட்டாளர்களும்தான். அதைச் செய்ய வேண்டியவர்கள் செய்யத் தவறிய ஒரு வெற்றிடத்தில் தான், அவ்வாறு யாருடைய கவனத்தையும் ஈர்க்காமல் ஒரு கவனயீர்ப்பு பொங்கல் நடந்து முடிந்தது.

பொதுமக்களின் கவனத்தையும் வெளி உலகத்தின் கவனத்தையும் அதிர்ச்சியூட்டும் விதத்தில் ஈர்க்க வேண்டும் என்பதற்காக வித்தியாசமாக சிந்திக்கப்பட்ட ஒரு பொங்கல் மக்கள் மயப்படவில்லை மட்டுமில்லை, அதைக் குறித்து மக்கள் மத்தியில் பெரியளவில் உரையாடப்படவும் இல்லை. இது அதை ஒழுங்கு படுத்திய அமைப்பின் தோல்வி மட்டுமல்ல, தமிழ் அரசியலின் தோல்வியும்தான்.

கடந்த 12 ஆண்டுகளாக தமிழ்ப் பரப்பில் ஒழுங்கு செய்யப்பட்டுவரும் பெரும்பாலான கவனயீர்ப்பு போராட்டங்கள் இவ்வாறுதான் காணப்படுகின்றன. அவை அடுத்தநாள் ஊடகங்களில் தலைப்புச் செய்திகளாக வருவதோடு சரி. எந்த மக்களின் கவனத்தை ஈர்ப்பதற்காக அவை ஒழுங்கு செய்யப்படுகின்றனவோ, எந்த அரசியல்வாதிகளின் கவனத்தை ஈர்ப்பதற்காக அவை ஒழுங்கு செய்யப்படுகின்றனவோ, எந்த வெளியுலகத்தின் கவனத்தை ஈர்ப்பதற்காக அவை ஒழுங்கு செய்யப்படுகின்றனவோ அந்த வெளியுலகத்தின் கவனத்தையோ அல்லது மக்களின் கவனத்தையோ அல்லது அரசியல்வாதிகளின் கவனத்தையோ அவை பெரும்பாலும் ஈர்ப்பதில்லை என்பதே கடந்த 12 ஆண்டுகால அனுபவமாக காணப்படுகிறது.

அரசியல் கைதிகளுக்காக ஒன்றில் அரசியல் கைதிகள் போராடுகிறார்கள். அல்லது விடுவிக்கப்பட்ட கைதிகள் போராடுகிறார்கள். அல்லது கைதிகளின் உறவினர்கள் போராடுகிறார்கள். மிக அரிதாகத்தான் பொது மக்களும் ஏனைய அமைப்புக்களும் அந்தப் போராட்டத்தில் இணைகின்றன. அவ்வாறு இணையும் பொழுது அது அரசாங்கத்தின் மீது ஒரு அழுத்தத்தைக் கொடுக்கிறது. அப்படித்தான் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் போராட்டமும். அங்கேயும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள்தான் போராடிக்கொண்டிருக்கிறார்கள். அப்போராட்டத்திலும் எப்போதாவது அரிதாக பொதுமக்கள் இணைகிறார்கள். அப்படித்தான் காணிக்கான போராட்டமும். காணி உரிமையாளர்களும் சில அரசியல்வாதிகளும்தான் தொடர்ந்து போராடுகிறார்கள். இவை யாவும் மக்கள் மயப்பட்ட போராட்டங்கள் அல்ல. இப்போராட்டங்களை மக்கள் மயப்படுத்த வேண்டிய பொறுப்பு அரசியல்வாதிகளுக்கும் செயற்பாட்டாளர்களும் சிவில் சமூகங்களுக்கும் உண்டு. ஆனால் அதை எப்படிச் செய்வது என்பதை குறித்து யாரிடமும் சரியான பார்வையும் தெளிவான வழிவரைபடமும் இருப்பதாக தெரியவில்லை.


இதை இன்னும் கூர்மையாகச் சொன்னால், கடந்த 12 ஆண்டுகளாக தமிழ் மக்களுக்கு தொடர்ச்சியாக விட்டுக்கொடுப்பின்றி போராடத் தெரியவில்லையா? அல்லது போராட முடியவில்லையா? சில எழுக தமிழ் கள், ஒரு பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான போராட்டம் போன்ற தெட்டந்தெட்டமான போராட்டங்களுக்கும் அப்பால் தொடர்ச்சியாகப் போராட தமிழ்மக்களால் முடியவில்லை. கேப்பாபுலவில் காணிகளை மீட்பதற்காக நடந்த போராட்டத்தைப் போலவோ,டெல்லியில் வேளாண் மசோதாவை எதிர்த்துப் போராடிய விவசாயிகளைப் போலவோ, அல்லது குறைந்தபட்சம் இலங்கை தீவில் அண்மையில் அதிபர் ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு கேட்டு ஒரு பெருந்தொற்றுச் சூழலுக்குள் போராடிய ஆசிரிய தொழிற்சங்கங்களைப் போலவோ, தமிழ்மக்கள் தொடர்ச்சியாகப் போராடினால்தான் அரசாங்கத்தையும் வெளி உலகத்தையும் தங்களை நோக்கித் திரும்பலாம்.

தெட்டந் தெட்டமாக நடக்கும் எழுகதமிழ்களோ அல்லது P2Pக்களோ அரசாங்கத்தின் கவனத்தையோ அல்லது வெளியுலகின் கவனத்தையோ தொடர்ச்சியாக ஈர்த்து வைத்திருக்கத் தவறிவிட்டன. பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான போராட்டம் முடிந்த கையோடு யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த வெளிநாட்டுத் தூதுவர்கள் பெரும்பாலானவர்கள் அதைக்குறித்து ஒருவித பிரமிப்போடு அல்லது ஆர்வத்தோடு கேள்விகளைக் கேட்பார்கள். ஆனால் அதுவும் எழுக தமிழ்களைப் போல ஒரு தொடர்ச்சியற்ற போராட்டம்தான் என்பது நிரூபிக்கப்பட்டுவிட்டது.

எனவே கடந்த 12 ஆண்டுகளையும் தொகுத்துப்பார்த்தால் ஒரு விடயம் தெளிவாகத் தெரிகிறது ஒப்பீட்டளவில் பெரிய ஆர்ப்பாட்டங்களையும் கவனத்தை ஈர்க்கும் போராட்டங்களையும் பொதுமக்கள் அமைப்புக்களே முன்னெடுத்துள்ளன. அநேகமாகக் கட்சிகள் அல்ல. கடந்த 12 ஆண்டுகளில் தமிழ் மக்கள் பேரவை, தமிழ் மரபுரிமைப் பேரவை, பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலுமான அமைப்பு ஆகிய மூன்று மக்கள் அமைப்புக்கள் தோன்றி பின் தொடர்ந்து வளராமல் தேங்கிவிட்டன. இத்தேக்கத்திலிருந்து கற்றுக்கொண்ட பாடங்கள் போதாது என்பதைத்தான் பொங்கலுக்கு முதல்நாள் நடந்த விடுதலைப் பொங்கலும் உணர்த்துகிறது.

### வீணாவின் கவிக்கணை

பார்வையின்றி வாழ்பவனுக்கு
இருளும் வெளிச்சமும் ஒன்று தான்,
இருளின் அழகும், ஒளியின்
பிரகாசமும் தெரியப்போவதில்லை,
அதுபோல, அன்பில்லாத வாழ்க்கை,
இருப்பதும் இல்லாததும் ஒன்று தான்,
வாழ்வின் அழகான நிமிடங்களும்,
அன்பான தருணங்களும் கிடைக்காமல்
இருப்பதற்கு, அந்த வாழ்க்கை
இல்லாமல் போவதே மேல்.



# ஒரு நரியின் தந்திரமும் நாட்டின் அவல நிலையும்

- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர் - லண்டன்)

சுயநலத்திற்காகச் செய்யப்படும் ஒரு செயல் மிக நீண்ட காலத்திற்கு மாபெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதற்கு அரசியல்வாதிகளின் சித்து விளையாட்டுகள் மிகவும் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

அதிலும் குறிப்பாக, இந்த வகையான அரசியல் அநாகரீகம் தெற்காசிய அரசியல் (வியா) வாதிகளுக்குக் கைவந்த கலை. குடும்ப ஆட்சி, பதவி வெறி, முடிந்தவரை ஆட்சி காலத்தில் கொள்ளையடிப்பது, நாட்டை சொந்த தனியார் நிறுவனம் என்று கருதுவது, எதிர்பார்ப்பையும் மீறி ஆட்சி பறிபோனால், புதிதாக ஆட்சிக்கு வந்தவர்களுடன் "டீல்" ஒன்றை ஏற்படுத்தி கொள்ளுவது அல்லது அவர்களை ஆட்சியிலிருந்து அகற்ற அனைத்து வழிகளையும் கையாள்வது என்பது வளர்ந்துவரும் நாடுகளின் சாபக்கேடாகவே இருதுள்ளது. இதற்கு இலங்கை எவ்வகையிலும் விதிவிலக்கல்ல.

இலங்கையில் தற்போது நிலவும் மோசமான அரசியல், சமூக மற்றும் பொருளாதார நெருக்கடிகளால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் பல்தரப்பில் புதிய சிந்தனைகளைத் தோற்றுவித்துள்ளன. இதில் மிகவும் முக்கியமானதொரு விவாதப்பொருளாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட வேண்டும் என்பது. அதுவே கடந்த 40 ஆண்டுகளுக்கும் மேலாக நாட்டில் நிலவும் அவலநிலைக்கு காரணம் என்று தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வருகிறது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையே ஒரு தீய உள்நோக்கத்தோடு கொண்டுவரப்பட்டது என்பது கசப்பான உண்மையாகும்.

மிகவும் மோசமான அரசியல் சூதாட்டம் ஒன்று இலங்கையில் 1977 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலுக்குப் பிறகு அரங்கேறியது. சிறிமாவோ பண்டாரநாயக்கவின் மோசமான நிர்வாகம் காரணமாக நாட்டில் நிலவிய பிரச்சனைகளுக்கு இடையே நடைபெற்ற தேர்தலில் சிறிமாவோ தலைமையிலான இலங்கை சுதந்திரக் கட்சி படுதோல்வியடைந்து, ஜெ ஆர் ஜெயவர்தன தலைமையேற்றிருந்த ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தது. அதுவும் ஆறில் ஐந்து பெரும்பான்மை பெற்று "யானை" பலத்துடன் ஐ தே க ஆட்சியைக் கைப்பற்றியது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி 8 இடங்களை மட்டுமே பெற்று படுதோல்வியடைந்தது. தமிழர் தாயக பகுதிகளில் பெரும் வெற்றியைப் பெற்றிருந்த தமிழர் விடுதலைக் கூட்டணி 21 இடங்களில் வென்றதை அடுத்து நாடாளுமன்றத்தில் இரண்டாவது பெரிய கட்சி என்ற அடிப்படையில் எதிர்க்கட்சி அந்தஸ்த்தை பெற்றது. தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் அ.அமிர்தலிங்கம் எதிர்க்கட்சித் தலைவரானார். இது தேசிய அரசியலில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி ஒரு திருப்புமுனையாக அமைந்தது. இனி எக்காலத்திலும் தமிழர் ஒருவர் எதிர்க்கட்சித் தலைவராகக் கூட வந்துவிடக் கூடாது என்பதில் "நரி" ஜெ ஆர் குறியாக இருந்தார். இதற்கு 14 மே 1976 அன்று நிறைவேற்றப்பட்ட வட்டுக்கோட்டைத் தீர்மானமும் ஒரு பின்புலமாக இருந்தது. தமிழர்களுக்கான சுயநிர்ணய உரிமை, அது மறுக்கப்பட்டால் தனி நாடு என்ற தீர்மானம் ஜே ஆருக்கு கலக்கத்தை ஏற்படுத்தியது. அதேவேளை எதிர்க்கட்சி தலைவராக தமிழர் ஒருவர் இருந்தால் பன்னாட்டுச் சமூகம் அவருடன் தொடர்பில் இருக்கும், தனிநாடு கோரிக்கை சர்வதேசமயமாக்கப்பட்டு வலுப்பெற கூடும் என்கிற அச்சம் ஜெ ஆரை தொற்றிக் கொண்டது. பின்னர் தனி நாடு என்ற எண்ணத்தை முறியடிக்க அரசியல் யாப்பின் 6 ஆவது திருத்தம் ஆவது திருத்தம் போன்றவை நடைமுறைக்கு வந்தன.



இன்றளவும் பெரும் பேசுபொருளாக இருக்கும் 13 ஆவது சட்டத் திருத்தமும் அதற்குக் காரணமான இந்திய - இலங்கை ஒப்பந்தமும் ஜே ஆர் ஆட்சிக் காலத்தில் தான் இடம்பெற்றது. அது ஏற்படுத்திய தாக்கம் மற்றும் பாதிப்புகள் உலமறிந்தது.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி நடைமுறைக்கு வந்த நிலையில் அதுவரை முதலாவது ஜனாதிபதி என்ற பெருமையைக் கொண்டிருந்த வில்லியம் கோபல்லாவ மறைமுகமாகப் பதவி விலகும் நிலைக்குத் தள்ளப்பட்டார். இது நாடாளுமன்ற ஜனநாயகத்திற்கு விழுந்த முதல் அடி.

ஜே.ஆர்.பிரதமராகப் பதவியேற்ற ஒரு மாதத்திலேயே, யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற சம்பவமொன்றை மையப்படுத்திப் பரவிய வதந்தி ஆகஸ்ட் 8 ஆம் திகதி நாடு முழுவதும் இனக்கலவரமாக வெடித்தது. சில நாட்கள் நீடித்த இந்தக் கலவரத்தில் ஏராளமான தமிழர்கள் தமது உயிரையும், உடைமைகளையும் இழந்தனர். இந்த கலவரம் காரணமாக மலையகப் பகுதியிலிருந்து 75,000க்கு மேற்பட்ட இந்திய வம்சாவளித் தமிழர்கள் வடக்கு-கிழக்கில் குடியேறும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். நாட்டில் நிலவும் சூழல் தேர்தல் நடத்துவதற்கு ஏற்றதாக இல்லை என்று கூறிய ஜெ ஆர் புதிய அரசியல் யாப்பு மற்றும் ஜனாதிபதி முறை ஆட்சியை கொண்டுவந்த பிறகு தேர்தலே நடத்தாமல் சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் தனது மற்றும் நாடாளுமன்றத்தின் ஆட்சிக் காலத்தை நீட்டித்துக் கொண்டார்.

அவரது புதிய அரசியல் யாப்பின் மூலம், நாடாளுமன்றத்தில் பரவியிருந்த அதிகாரம் ஜனாதிபதி எனும் தனிநபர் ஆதிக்கத்துக்கு செல்ல வழி வகுத்தது. இது "சுதந்திரமான ஜனநாயகத்துக்குச் சாவுமணி" என்று அப்போதே விமர்சனம் எழுந்தது.

ஜே.ஆரின். நரித்தனமான அரசியல் சிந்தனை அவர் கொண்டுவந்த அரசியல் யாப்பு மூலமாக அம்பலமானது. பயங்கரவாதத் தடைச்சட்டமும் இவரது ஆட்சியில் தான் நிறைவேற்றப்பட்டது.

தனக்கு நாடாளுமன்றத்தில் இருந்த "யானை" பலம் கொண்ட அதிகார மமதை காரணமாக ஒரு கட்டத்தில் அன்றையத் தமிழ்த் தலைவர்களை நோக்கி, "போர் என்றால் போர் சமாதானம் என்றால் சமாதானம்" என்று ஜே.ஆர்.சூளுரைத்தது தமிழர்கள் மனதில் ஆறாத வடுவாகவுள்ளது. அந்த சமயத்தில் ஜே.ஆர். "ஆணைப் பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் மாற்றுவதைத் தவிர அனைத்து அதிகாரங்களையும் இந்த அரசியல் யாப்பு தந்துள்ளது" என்று கூறியது இச்சமயத்தில் நினைவுக்கு வருகிறது.

இன்றைய ஆட்சியாளர்கள் எவ்வகையிலிருந்து "அரசியல் நரி" ஜே ஆரிடமிருந்து மாறுபட்டவர்கள் அல்ல என்பதைக் காண முடிகிறது. சிறுபான்மை மக்கள் எந்த வகையிலும் வலுப்பெற்றுவிடக் கூடாது, அவர்களுக்கு உரிமைகள் என்ற பேச்சிற்கே இடம் கிடையாது, நாடு பெரும்பான்மையானவர்களுக்கே சொந்தம் என்கிற சித்தாந்தத்தில் ஜே ஆர் மற்றும் ஜி ஆர் ஆகியோரிடையே எந்த மாற்றமும் இல்லை.

இலங்கை போன்ற சிறிய ஏழை நாடுகளுக்கு நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை சரிப்பட்டு வராது. மேலும் அந்த முறைமையைக் கொண்ட நாடுகளில் பெரும்பாலும் சர்வாதிகாரம் அல்லது ஒருகட்சி ஆட்சியே நிலவுகிறது. இதில் மத்திய ஆசியாவில் கசகஸ்தான், ருவாண்டா, புருண்டி, தெற்கு சூடான், தென் அமெரிக்காவில் வெனிசுவேலா, நிகராகுவா போன்று பல நாடுகளை உதாரணமாகக் காட்ட இயலும். இந்த வகை அரசாட்சியைக் கொண்ட நாடுகள் காலவோட்டத்தில் கொடுங்கோல் ஆட்சியை முன்னெடுத்து, மனித உரிமைகளை நசுக்கி, குடும்ப ஆட்சியை வளர்த்து, தம்மையும் குடும்பத்தாரையும் வளப்படுத்திக் கொண்டு நாட்டை திவாலாக்கியது போன்றவை வரலாற்று உண்மைகள்.

ஒரு தனி நபர் தான் நினைத்ததை, நினைக்கும் நேரத்தில், நினைக்கும் வகையில் செய்வதற்கு நிறைவேற்று ஜனாதிபதி அதிகார முறை வழிவகுக்கிறது.



இலங்கையில் உள்நாட்டுப் போர் 2009 ஆம் ஆண்டு முடிவுக்கு வரும்வரை அதைக் காரணம் காட்டி தொடர்ச்சியாக வந்த அரசுகள் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறைக்கு நியாயம் கற்பித்தன. அதை ஒழிப்பதற்கு முதல் படியாக, ஜனாதிபதியின் அதிகாரங்களை குறைக்க வழிசெய்யும் வகையில் 2015 ஆம் ஆண்டு மைத்ரிபால சிறிசேன - ரணில் விக்ரமசிங்க அரசு அரசியல் அமைப்பின் 19 ஆவது திருத்தத்தைக் கொண்டு வந்தது. எனினும் அடுத்து வந்த ராஜபக்சக்களின் ஆட்சி அந்த திருத்தத்தை ஒழித்துக் கட்டும் வகையில் 20 ஆவது திருத்தத்தை கொண்டுவந்தது.

சிங்கள மக்கள் போர் என்ற மாயையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை அறியாமல் ஆதரித்தனர். ஆனால் போருக்கு பின்னர் ராஜபக்சக்களின் ஆட்சி அதன் கோர முகம் தெரிய ஆரம்பித்தது. போர்க்காலத்தில் மகிந்த ராஜபக்ச எடுத்த நிலைப்பாட்டைவிட இப்போது கோட்டாபய ராஜபக்ச எடுக்கும் நிலைப்பாடு மிகவும் கடும்போக்குத் தன்மை கொண்டதாகவுள்ளது.

அதன் விளைவை இப்போது அனுபவித்து வருகின்றனர். நாடாளுமன்றத்திற்கு பதில் சொல்ல வேண்டியதில்லை என்பதால் ஆட்சியாளர்களின் அட்டகாசம் கட்டுக்கடங்காமல் சென்றது. ஊடகச் சுதந்திரம் நசுக்கப்படுவது, அரசுக்கு எதிரானவை என்று கருதப்படும் செய்திகளை வெளியிடும் ஊடகவியலாளர்கள், அரசியல் செயற்பாட்டாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள், தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள், ஆசிரியர்கள், பொதுமக்கள் என்று பல்துறையினரை அச்சுறுத்துவது, அவர்கள் தேச பாதுகாப்பிற்கு ஊறு விளைவித்தனர் என்று கூறி கைது செய்வது, அவர்கள் மீது வழக்கு பதிவு செய்யாமல் சிறையில் அடைத்து வைப்பது என்கிற நடைமுறை இன்றளவும் இலங்கையில் தொடருகிறது. இது போன்ற செயல்பாடுகள் நிறைவேற்று அதிகார முறையின் காரணமாகக் கட்டுக்கடங்காத அதிகாரம் ஒரே இடத்தில் குவிக்கப்பட்டுள்ளதே காரணம்.

நீதித்துறைக்கே களங்கம் என்கிற விமர்சனத்திற்கு ஆளான மொஹான் பீரிஸ் போன்றவர்களை நாட்டின் தலைமை நீதிபதியாக நியமிப்பதற்கு வழி செய்தது ஜெ ஆர் கொண்டுவந்த ஆட்சி முறை. அதாவது ஜனநாயகத்தின் அடிநாதமாக விளங்கும் நாடாளுமன்றத்தை செல்லாக்காசாக்கி அதை தான் விரும்பியபடி தமது அடிவருடிகளைக் கொண்டு ஆட்டி வைத்து அதன் குரல்வளையை நசுக்க வழி செய்தது ஜே ஆரால் முன்னெடுக்கப்பட்ட நரித்தனமான சிந்தனை.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறையை முடிவுக்குக் கொண்டுவர ராஜபக்சக்களுக்கு விருப்பமில்லை. அதற்குப் பல காரணங்கள் உள்ளன. நாட்டின் தேர்தல் முறையிலுள்ள குறைபாடுகளை அவர்கள் தொடர்ந்து தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்கிறார்கள். மக்களால் நேரடி வாக்கெடுப்பின் மூலம் ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படும் போது ஒரு நிறுவனத்தைவிட ஒரு தனி நபரிடம் அதிகாரங்கள் குவிந்திருப்பது நாட்டின் அவல நிலைக்கு அடிப்படைக் காரணமாக உள்ளது. ஜனாதிபதி தான் விரும்பிய நேரத்தில் நாடாளுமன்றத்தைக் கலைக்க முடியும் என்பதைக் கட்டுப்படுத்த 19 ஆவது திருத்தத்தின் மூலம் சில மாற்றங்கள் கொண்டுவரப்பட்டாலும் அதை ஒழித்துக் கட்டியது 20 ஆவது திருத்தம்.

அமெரிக்கா மற்றும் சீனா இரண்டு பெரிய நாடுகளுமே நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியால் ஆட்சி செய்யப்படுகின்றன. ஆனால், அமெரிக்காவில் ஜனாதிபதியின் நியமனங்கள் அனைத்திற்கும் நாடாளுமன்ற ஒப்புதல் பெறப்பட வேண்டும். ஆனால் சீனாவில் அப்படியல்ல. ஏனென்றால் அங்கு ஒரு கட்சி. இலங்கை தாராளவாத முதலாளித்துவ கொள்கையை முன்னெடுக்கும் அமெரிக்காவையும் பின்பற்றாமலும், சீனா போன்ற ஒரு கட்சி ஆட்சி என்கிற வகையிலும் இல்லாமாலுள்ளது.



அதேவேளை சீனாவைப் போல ஒரு கட்சி ஆட்சியை நோக்கி இலங்கை நகர்கின்றது என்கிற கவலையும் எழுந்துள்ளது.

ஜனநாயகம் என்பது அதிகாரப் பரவலாக்கமே தவிர அதிகார குவிப்பு அல்ல. தனி நபர்களிடம் அதிகாரக் குவிப்பு நாட்டிற்கு நல்லதல்ல.



# காவல் (போலீஸ்) சிறார் மன்றங்கள்

வே. பாலகிருஷ்ணன், இ.கா.ப
(மண்டலக் காவல்துறைத் தலைவர், மத்திய மண்டலம், திருச்சி, தமிழ்நாடு)

மணிகண்டன் - இந்தப் பெயர் போலீஸ் சிறார் மன்றங்கள் மத்தியில் பிரபலமானப் பெயர். சாதாரணமாகக் குடிசைப் பகுதியில் இருந்து வந்த ஏழை மாணவன், சென்னை இராயப்பேட்டைச் சிறுவர் மன்றத்தில் சேர்ந்து தன் உழைப்பாலும் சரியான வழிகாட்டுதலாலும் இன்று வணிகக் கப்பலில் நல்ல பணியில் இருந்து மற்ற சிறார்களுக்கு வழிகாட்டியாக இருந்து வருகிறார். இவர் போல பல உதாரணங்களை அடுக்கிக் கொண்டேப் போகலாம்.

காவல்துறையின் பணி, குற்றங்களை கட்டுப்படுத்துவதோடு மட்டுமல்லாமல் அவை நடக்காமல் தடுப்பதுவும் ஆகும். குற்றங்கள் நடக்காமல் தடுப்பதற்கு பலவித திட்டங்களை காவல்துறை செயல்படுத்தினாலும் குற்றங்கள் நடப்பதற்கான காரணங்களை கண்டுபிடித்து குறிப்பாக குற்றவாளி உருவாவதற்கானக் காரணிகளைக் கண்டறிந்து அவற்றை சரிபடுத்துதல் முக்கியமானது ஆகும்.

இதில் பல துறைகளின் ஒத்துழைப்புத் தேவைப்பட்டாலும் காவல் துறையின் பங்கு முதன்மையானது. கடந்த காலங்களில் நடந்த குற்றங்களை ஆய்வு செய்யும்போது குற்றத்தில் ஈடுபடும் குற்றவாளிகள் குறிப்பாக இளம் சிறார்கள் பெரும்பாலும் பெற்றோர் கவனிப்பு இல்லாமல் வளர்ந்த குழந்தைகளாகவோ அல்லது பெற்றோர்கள் மது மற்றும் போதை பழக்கத்திற்கு அடிமையானவர்களாகவோ, குழந்தைகளை கடுமையான வார்த்தைகளாலும் உடல்ரீதியாகவும் தாக்குதலுக்கு உள்ளாக்கும் பெற்றோர்களாகவோ அல்லது பள்ளிக்கு செல்லாமல் இடையில் நின்றக் குழந்தைகளாகவோ இருக்கின்றனர். பல குற்றங்களில், பழங்குற்றவாளிகள் இதுபோன்ற நிலையில் உள்ள சிறுவர்களை கண்டறிந்து அவர்களை தங்களின் ஆளுமைக்குள் கொண்டுவந்து குற்றச் செயல்களில் ஈடுபடுத்துவதும் நடைமுறையாக இருந்து வருகிறது.

ஆகவே சிறுவர்களை அச்சூழல்களில் இருந்து காப்பாற்றுவதும் கெட்ட நடத்தைகாரர்களின் பாதிப்பிலிருந்து மீட்பதும் குற்றவாளிகள் உருவாவதை தடுப்பதற்கு காவல்துறை கொள்ள வேண்டிய பணிகளில் முதன்மையானதாகும். வடசென்னையில் இது போன்ற சூழல்களில் இருந்து வந்த சிறுவர்களின் பாதுகாப்பிற்காக ஏற்கனவே இருந்து வந்த காவல் சிறார் மன்றங்கள் உயிர் ஊட்டப்பட்டதோடு புதியதாக 31 காவல் சிறார் மன்றங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்தச் சிறார் மன்றங்களில் 18 வயதுக்குட்பட்ட சிறுவர்கள், சிறுமிகள் தங்களுடைய மாலை நேரத்தை ஆக்கப்பூர்வமான வகையில் செலவிடுவதற்காக அவர்களை விளையாட்டு மற்றும் புத்தகப் படிப்பில் ஈடுபடுத்தி கெட்ட நடத்தைகாரர்களின் பாதிப்பிலிருந்து விடுவிப்பதற்கு வழிவகை செய்யப்பட்டது. இந்தச் சிறுவர்களுக்கு நேரிடையாகவும், ஆன்லைன் மூலமாகவும் வகுப்புகள் நடத்தி அவர்களுக்கு வழிகாட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது.



சென்னை மாநகரத்தில் பல காவல் சிறார் மன்றங்கள் சிறப்பானப் பணிகளை மேற்கொள்கின்றனர். இராயப்பேட்டை ரோட்டரி நகர் சிறார் மன்றம் அப்பகுதியில் குற்றங்களை குறைத்திருப்பது மட்டும் அல்லாமல் அங்குள்ள சிறுவர்களுக்கு சிறந்த வழிகாட்டுதலையும் கொடுத்துள்ளது. காவல் சிறார் மன்றங்களில் பயிற்சி பெற்ற சிறார்கள் வேலை வாய்ப்புகளையும் பெற்றிருக்கிறார்கள். மற்ற இளைஞர்களுக்கு அது உந்துதல் கொடுப்பதோடு ஒரு ரோல் மாடலையும் கொடுத்துள்ளது.

இது போன்று வடசென்னையில் உள்ள சிறார் மன்றங்கள் டான் பாஸ்கோ அன்பு இல்லம் உதவியோடு HCL கம்பெனியின் CSR உதவியுடன் பல நல்ல பணிகளை செய்து வருகிறது. வடசென்னையில் புகழ்பெற்ற கால்பந்து மற்றும் கானா பாட்டு திறமைகளை வெளிக்கொண்டு வந்து அவர்களின் நேரத்தை முறையாக, ஆக்கப்பூர்வமாக பயன்படுத்த ஒரு அடித்தளத்தை கொடுத்துள்ளது.

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள சிறார் மன்றங்கள் அந்தப் பகுதியில் உள்ள தொழில் முனைவோர் உதவியுடன் அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றன. தொழில்களுக்கும், வியாபாரத்திற்கும் அமைதி அடிப்படை என்பதால் சிறார் மன்றங்கள் அமைப்பதில் அவர்களின் சமுதாயக் கடமையை உணர்ந்து அவர்களும் பங்கெடுத்து வருகிறார்கள். சிறார் மன்றங்களோடு சேர்ந்து "நடை ரோந்து" மற்றும் "குடிசைப்பகுதி விஜயம்" காவல் அதிகாரிகளால் செய்யப்பட்டு வடசென்னையில் பெரிய சமூகப் புரட்சிக்கு வித்திடப்பட்டது. "நடை ரோந்து" மற்றும் "குடிசைப்பகுதி விஜயத்தின்" போது சிறுவர்கள் மற்றும் பெண்களுடன் கலந்துரையாடி அப்பகுதியில் உள்ள பிரச்சனைகளை தெரிந்துகொண்டு, பிரச்சனை பற்றித் தகவல் கொடுப்பது மற்றும் பிரச்சினைகளுக்கான தீர்வு பற்றி விவாதிப்பது என சட்டம் ஒழுங்கு தொடர்பான அனைத்து பிரச்சனைகளை கையாள்வதில் அவர்களின் பங்களிப்பை உறுதி செய்வதற்கு அது ஒரு வாய்ப்பாக அமைந்தது. வடசென்னையில் மாலை நேரங்களில் சிறுவர்கள் போதைப்பொருள் பழக்கத்திற்கு ஆளாகுவதற்கும், குடிப்பழக்கத்திற்கு ஆளாகுவதற்கும் நிரம்ப வாய்ப்புகள் உள்ளன. பயன்படுத்தப்படாத குடிசை பகுதிகளும், கடற்கரை ஓரங்களும், சாக்கடைக் கால்வாய் ஓரங்களும் கஞ்சா மற்றும் குட்கா போன்றப் போதைப் பொருட்கள் பயன்படுத்துவதற்கும் அதனைத் தொடர்ந்து சட்டம்-ஒழுங்கு பிரச்சனை மற்றும் குற்றச் செயல்களில் ஈடுபடுதல் போன்ற விரும்பத்தகாத செயல்களை செய்வதற்கும் வாய்ப்புகளை ஏற்படுத்துகின்றன. இந்தப் பகுதிகளில் நடை ரோந்து மிகப் பயனுள்ளதாக இருக்கிறது. இதுவும் இந்தப் பகுதிகளில் காவல் சிறார் மன்றங்களை அதிக அளவில் அமைப்பதற்கு ஒரு காரணம் ஆகும். காவல் சிறார் மன்றங்களோடு பொங்கல் விழா, தீபாவளி போன்ற பண்டிகைகளை கொண்டாடுவதோடு மாலை நேரங்களில் காவல் அதிகாரிகள் அங்கு சென்று அந்தக் குழந்தைகளுடன் உரையாடி அவர்களுக்கு வாழ்க்கையில் ஒரு குறிக்கோளை ஏற்படுத்துவதோடு அதை அடைவதற்கான வழிமுறைகளையும் எடுத்துக் கூறி அவர்களுக்கு நல்ல ரோல் மாடலை ஏற்படுத்திக் கொடுக்கின்றனர்.





கொரோனா காலகட்டத்தில் இந்தச் சிறுவர் குடும்பங்களின், அடிப்படைத் தேவைகளான உணவு மற்றும் உடை அளித்ததோடு அவர்கள் வாழ்க்கைக்கு அடிப்படைத் தேவைகளுக்கான ஏற்பாடுகளும் காவல் சிறுவர் மன்றங்கள் மூலம் செய்யப்பட்டன. இது மிக முக்கியமான நடவடிக்கை ஏனெனில் அவர்களின் வாழ்வாதாரத்திற்கு பிரச்சனை ஏற்படும் பொழுது குழந்தைகளை வேலைக்கு அனுப்புவதற்கும் ஒரு சில பெற்றோர்கள் தயங்குவதில்லை. மேலும் கொரோனா காலத்தில் பள்ளிகள் மூடியிருந்ததும். நிகழ்நிலை (ஆன்லைன்) வகுப்புகளைக் கவனிப்பதற்கு ஸ்மார்ட்போன் வசதி இல்லாமையால் குடிசைப் பகுதியில் உள்ள சிறுவர்கள் மிகுந்த இன்னலுக்கு ஆளாகி பள்ளிக்கல்வி முழுமையாக தடை பட்ட நேரத்தில் காவல் சிறார் மன்றங்கள் துணையாக வந்தன. அதன் மூலம் அவர்களை ஆக்கபூர்வமான வழிகளில் ஆற்றுப்படுத்தப்பட்டதும், கல்விக்கு தடை இல்லாமல் பல்வேறு வகுப்புகள் நடத்தப்பட்டதும் முக்கியமானதாக கருதப்படுகிறது. மேலும் காவல் சிறார் மன்றங்களில் சிறுவர் சிறுமிகளுக்கு குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் பற்றிய சட்ட விழிப்புணர்வு அவ்வப்போது கொடுக்கப்படுகிறது. இதன் மூலம் ஏதேனும் தவறாக நடந்து கொள்ள முயற்சி செய்தால் அது காவல்துறை கவனத்திற்கு உடனடியாக வந்து சேரும்.

காவல் சிறார் மன்றங்களுக்கு வரக்கூடிய சிறுவர்கள் சமூக விரோதிகளின் பார்வையில் இருந்து விலகியே இருக்கிறார்கள்- காரணம் சிறுவர்கள் காவல் அதிகாரிகளுடன் தொடர்பில் இருப்பதால் குற்றவாளிகளைப் பற்றியத் தகவல்களை சிறுவர்கள் காவல் அதிகாரிகளுக்கு சொல்லக்கூடும் என்ற பயமும் காரணமாகும். ஆக, காவல் சிறார் மன்றங்கள், குற்றவாளிகளின் பிடியில் வருவதற்கு வாய்ப்புள்ள குழந்தைகளின் வாழ்வில் ஒரு வசந்த காலத்தை ஏற்படுத்துகிறது என்றால் அது மிகையில்லை.

# தமிழகத்தில் மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சிகளுக்கு பிப்ரவரி 19–ந் தேதி தேர்தல்




தமிழகத்தில் நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் ஒரே கட்டமாக பிப்ரவரி 19ல் நடைபெறும் என்று மாநிலத் தேர்தல் ஆணையம் அறிவித்தது. தமிழ்நாட்டில் உள்ள 21 மாநகராட்சிகள், 138 நகராட்சிகள், 490 பேரூராட்சிகள் என அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் தேர்தல் நடத்தப்படாமல் இருந்து வருகிறது.

சமீபத்தில் இது தொடர்பான வழக்கின் தீர்ப்பில், நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் நடத்துவதற்கு எந்தவித தடையுமில்லை என்று உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

நீதிமன்ற உத்தரவை அடுத்து நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலுக்கான அட்டவணை வெளியிடப்பட்டுள்ளது. மாநில தேர்தல் ஆணையர் பழனிக்குமார் தேர்தல் தேதியை ஜன 26 மாலை அறிவித்தார்.

ஒரேகட்ட தேர்தல்

அதன்படி, தமிழகத்தில் 21 மாநகராட்சிகள், 128 நகராட்சிகள், 490 பேரூராட்சிகள், 649 நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள 1,374 மாநகராட்சி உறுப்பினர், 8,288 பேரூராட்சி உறுப்பினர், 3,468 நகராட்சி உறுப்பினர் பதவிகளுக்கு ஒரே கட்டமாக தேர்தல் நடைபெறும் என்று அறிவித்தார்.

பிப்ரவரி 19ம் தேதி தேர்தல் நடைபெறும். வாக்குப்பதிவு காலை காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெறும். மாலை 5 மணிக்கு மேல் கொரோனா தொற்று உள்ளவர்கள் வாக்களிக்கலாம்.

தேர்தலுக்கான வேட்புமனு தாக்கல் ஜனவரி 28-ம் தேதி தொடங்குகிறது. காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை வேட்புமனு தாக்கல் செய்யலாம். மனுதாக்கலுக்கான கடைசி நாள் பிப்ரவரி 4-ம் தேதி.

வேட்புமனுக்கள் பரிசீலனை பிப்ரவரி 5ம் தேதி - வேட்புமனுக்களை திரும்ப பெற பிப்ரவரி 7-ம் தேதி கடைசி நாள்.

22-ந் தேதி முடிவுகள் - வாக்கு எண்ணிக்கை பிப்ரவரி 22-ம் தேதி நடக்கவுள்ளது. அன்றே முடிவுகள் அறிவிக்கப்படும்.

மாநகராட்சி மேயர், துணை மேயர், நகராட்சித்தலைவர், துணைத்தலைவர் பதவிகளுக்கு மார்ச் 4ம் தேதி மறைமுக தேர்தல் நடைபெறும். புதிதாக தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள் மார்ச் 2ம் தேதி பதவியேற்பார்.

தேர்தல் நடைபெறும் பகுதிகளில் உடனடியாக தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்துள்ளன என்று தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

(9ம் பக்கத் தொடர்ச்சி)

(3) கொழும்புக்குப் பதில் அம்பாந்தோட்டைக்கு வியாபாரத்தை மடைமாற்ற 52 மில்லியன் அமெரிக்க டொலரில் (ரூபா10,400 மில்லியன்) கட்டிய நவீன 6 ஒழுங்கை நெடுஞ்சாலையும் அதிகம் பயன்படுத்தப் படாது கிடக்கிறது.
(4) 2011 இல் 47 ஏக்கர் காணியில் 32,000 பேர் உட்காரக்கூடிய சூரியவேவா விளையாட்டு அரங்கு அ.டொலர் 35 மில்லியன் (ரூபா 7,000) செலவில் கட்டப்பட்டது. அந்த விளையாட்டு அரங்கில் இதுவரை 15 கிறிக்கட் போட்டிகளே நடைபெற்றுள்ளன.
(5) 2013 இல் நடந்த பொதுநல நாடுகளது உச்சி மாநாட்டின் போது பயன்படுத்தப்படுவதற்கு பெரிய மாநாட்டு அரங்கம் கட்ட 15.5 மில்லியன் அமெரிக்க டொலர் செலவழிக்கப்பட்டது. இன்று அதனை யாரும் பயன்படுத்துவதில்லை.
(6) 300 ஏக்கர் காணியில் ஒரு தாவரயியல் தோட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த தோட்டத்துக்கு தொன் கணக்கில் தண்ணீர் தேவைப்படுகிறது. அதே சமயம் ஊர் மக்கள் குடிக்கிறதுக்குத் தண்ணீர் இல்லாமல் அல்லாடுகிறார்கள்.

கடன் வாங்கிக் கட்டப்பட்ட இதுபோன்ற வெள்ளை யானைகளே நாட்டை இன்று ஒட்டாண்டி நிலைக்குத் தள்ளியுள்ளது.

இந்த மாதத் தொடக்கத்தில் சிறிலங்காவின் நிதி அமைச்சர் பசில் இராசபக்ச அரசு பொதுத்துறை ஊழியர்களின் சம்பளம் மற்றும் ஓய்வூதியத்தை மாதாந்தம் ரூபா 5,000 உயர்த்தியும் சமுர்த்தி பயனாளிகளுக்கு ரூபா1,000 உயர்த்தியும் வழங்கப்படும் என்று அறிவித்துள்ளார். மேலும் போரில் ஊனமடைந்த இராணுவ வீரர்களுக்கு ரூபா.5000 உயர்த்தப்படும். விவசாயிகளின் பெரும்போக விளைச்சல் வீழ்ச்சி கண்டுள்ளதால் அவர்களுக்கு இழப்பீடாக ஒரு கிலோ நெல்லுக்கு ரூபா 25 - ரூபா 50 வரை கூடுதலாக வழங்கப்படும். வீட்டுத் தோட்டத்தை ஊக்குவிக்கு முகமாக ரூபா 10,000 - ரூபா 20,000 கொடுக்கப்படும். மேலும், தோட்டத் தொழிலாளர்களுக்கு 15 கிலோ கோதுமை மா கிலோ ரூ.80 க்கு வழங்கப்படும் அதேவேளை மருந்து மற்றும் அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கு வரி விலக்கு அளிக்கப்படும்.

இந்தக் கொடுப்பனவுக்கு ரூபா 229 பில்லியன் தேவைப்படும் என்றும் அது வரவு செலவுத் திட்டத்துக்குள் உள்ளடக்கப்படும் என்றும் வரிகள் உயர்த்தப்பட மாட்டாது என்றும் அமைச்சர் கூறினார். பொது ஊழியர்கள் ரூபா 18,000 சம்பள உயர்வு கேட்டிருந்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

சரி இதற்கெல்லாம் பணம் எங்கே இருக்கிறது? கோட்டாபய இராசபக்ச அரசு அரசாங்க அச்சகத்தில் நாணயத் தாள்களை அடிக்கும் தொழிலில் இறங்கியிருக்கிறது.

இலங்கை மத்திய வங்கி கடந்த திங்கட்கிழமை 26 பில்லியன் ரூபாவை அச்சிட்டுள்ளதாக உத்தியோகபூர்வ தகவல்கள் தெரிவிக்கின்றன. 2022 இல் மத்திய வங்கியால் அச்சிடப்பட்ட பணத்தின் அளவு ரூபா 146 பில்லியன் ஆகும். அதாவது, நாளொன்றுக்கு 6 பில்லியன் ரூபா என்ற வகையில், 25 நாட்களுக்கு 146 பில்லியன் பணத்தை அச்சிட்டுள்ளது. மொத்தம் ஒரு பில்லியன் (ஆயிரம் கோடி) பெறுமதியான நாணயத்தாள் அச்சிடப்பட்டுள்ளது.

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் மதிப்பு, மிக கடுமையான அளவு வீழ்ச்சியடைந்திருக்கிறது. இலங்கையின் வரலாற்றில், இதற்கு முன்னர் இந்தளவுக்கு அதன் நாணயப் பெறுமதி வீழ்ச்சியடைந்ததில்லை என்று கூறப்படுகிறது.

1 **USD = Rs181.4084**

தற்போதைய அரசாங்கம் 2020 சனவரியில் ஆட்சியமைத்த போது, அமெரிக்க டொலர் ஒன்றின் இலங்கைப் பெறுமதி ரூபா 181.40 சதமாக இருந்தது. ஆனால், இன்று அதன் பெறுமதி ரூபா 201.78 ஆக உயர்ந்துள்ளது. கருப்புச் சந்தையில் ஒரு அ.டொலர் ரூபா 250.00 விற்பனையாகிறது. இதே கால கட்டத்தில் ஒரு கனடிய டொலரின் பெறுமதி ரூபா 138.12 இல் இருந்து ரூபா 158.89 ஆக உயர்ந்துள்ளது. கருப்புச் சந்தையில் ரூபா 200.00 ஆக உயர்ந்துள்ளது!

நாணயத்தாளை கண்டபடி அச்சடிப்பதால் பணவீக்கம் 14.4% ஆக எகிறிவிட்டது. இதனால் அத்தியாவசியப் பொருட்களான அரிசி, மா, எண்ணெய், பால்மா, சமயல்எரிபொருள், பயணக் கட்டணம் அதிகரித்துவிட்டன. நடப்பு ஆண்டில் அரிசி விலை கிலோ ரூபா 200 யைத் தாண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதேவேளை சீனா 10 இலட்சம் மீட்றிக் தொன் அரிசியை இனாமாகக் கொடுக்க முன்வந்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. சிறிலங்காவில் மாறி மாறி ஆட்சிக் கட்டில் ஏறியவர்கள் நாட்டில் புரையோடிப் போயுள்ள இனச் சிக்கலுக்கு ஒரு நீதியான, நியாயமான, நிலையான தீர்வு காணத் தவறியதே இன்று நாடு ஒட்டாண்டி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அரசியல் உறுதிப்பாடு அவசியம்.






# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private – Work Insurance
- MVA – WSIB
- ODSP – Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle – Knee – Back Braces

**ENGLISH & TAMIL – SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**



உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறாார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**



Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE



## Serving the Tamil Community of Greater Toronto



உங்கள் உறவொன்றை பிரிந்து தவித்தும் தடுமாறும் வேளையில் அவரது இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலைகள் உங்களைப் பற்றிக்கொள்ளலாம்.

கவலையை விட்டு விலகிச் செல்ல அனுபவத்துடன் கூடிய நாங்கள் உங்களுக்கு உதவிடுவோம்.

உங்கள் உறவுகளின் இழப்பின்போது உங்களோடு இணைந்து உங்களில் ஒருவராக உங்களுக்குச் சேவை புரிய காத்திருக்கின்றார்.

CHRISTEEN SEEVARATNAM
**(416) 258-6759**



இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாம்
**Pre-Arranging – A Wise Choise**

**FINANCIAL BENEFITS**
*Lock in the cost at today's prices
*Convenient time payments
*Insured against early death

**EMOTIONAL BENEFITS**
*Letting your family know your wishes
*Peace of mind to you & your family
*Relieve the added stress & burden

Chapel Ridge Funeral Home & Cremation Centre
8911 Woodbine Ave. Markham, ON. L3R 5G1
www.chapelridgefh.com -- Email: christeenseeva@yahoo.ca



Toronto District School Board

# KINDERGARTEN REGISTRATION

## Opens in February

## Register online at tdsb.on.ca/kindergarten

# Happy Tamil Heritage Month & New Year

## இனிய தமிழ் மரபுத் திங்கள் மற்றும் புத்தாண்டு வாழ்த்துகள்







**Steven Del Duca**
Leader of the
Ontario Liberal Party

**Anita Anandarajan**
OLP Candidate for
Scarborough North

LIBERAL ONTARIO

Authorized by the CFO for the Scarborough North PLA


30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு
பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்
ஸ்காபுறோ
சங்கர் அன் கோ
இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்
தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.
Summer Special : கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள், மரக்கறி விதைகள் இன்னும் பல...
உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்
யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்
மண்சட்டிகள், மட்பானைகள், மண்அடுப்புக்கள், மண்கூசாக்கள், மின் தேங்காய் துருவி அனைத்தும் இங்கு கிடைக்கும்.
இல்லத்தரசிகளின் சமையலறைக்குத் தேவையான Rice Cookers, Grinding Machines, Rotty Makers, Sumeet, Preeti, Premier, Chef Mastrer Makes ஆகிய பல மின்சார உபகரணங்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துள்ளோம். மலிவான விலைகளில் பெற்றுக் கொள்ளுங்கள்.
Tasty தமிழா
Tasty Tamila தயாரிப்புகள் இப்போது சங்கர் அன் கோவில் கிடைக்கும்.
பனங்கருப்பட்டி
தேன் நெல்லி
பொங்கல் பொதி
PONGAL POTHI
Tasty Tamila புதிதாக அறிமுகம் செய்துள்ள பொங்கல் பொதிகள் சங்கர் அன் கோ வில் கிடைக்கும்
காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை
வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்
SHANKAR & CO
2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)

# இந்தோனேசிய அதிபர் சுகார்த்தோவும் கோடம்பாக்க நாயகி சாவித்திரியும்!

**- நக்கீரன்**

கடந்த நூற்றாண்டின் நீண்ட கால ஆட்சியாளர் பட்டியலில் இந்தோனேசியாவின் இரண்டாவது அதிபர் சுகார்த்தோவிற்கு முக்கிய இடம் உண்டு.

இந்தோனேசியாவின் இராணுவ ஜெனரலாக இருந்த சுகார்த்தோ, முதல் குடியரசுத் தலைவரான சுகர்னோவிற்கு எதிராக இராணுவப் புரட்சி நடத்தி, அதன்வழி ஆட்சியைக் கைப்பற்றி, 31 ஆண்டுகளாக தன்னுடைய இரும்புப் பிடிக்குள் இந்தோனேசியாவை வைத்திருந்தார். அப்படிப்பட்ட எ.்கு மனிதர் சுகார்த்தோவிற்கு ஜனவரி 27, 12-ஆவது நினைவு நாள்.

சுகார்த்தோவின் ஆட்சி வல்லடியாக அமைந்த நேரத்தில், இந்தோனேசியாவில் பொதுவுடைமைக் கொள்கை என்னும் கம்யூனிசக் கொள்கை நன்றாக வேர்விட்டிருந்தது. கம்யூனிஸ்டுகளை அழிப்பதாக சொல்லிக் கொண்டு தன் அரசியல் எதிரிகளையும் சேர்த்து ஈவு இரக்கமின்றி வேட்டையாடிய சுகார்த்தோவின் தொடக்க கால ஆட்சியில் இலட்சக் கணக்கானோர் காணாமல் போயினர்.

கம்யூனிச சிந்தனையாளர்களின் அடிச்சுவடே இல்லாமல் செய்த சுகார்த்தோ ஆட்சியில், குறிப்பாக அந்தக் கொள்கை கொண்ட சீன வம்சாவளியினர் வகைதொகையின்றி வேட்டை ஆடப்பட்டனர்.

இருந்தாலும், நாட்டில் அரசியல் நிலைத்தன்மையும் அமைதியான வாழ்க்கையும் சீரான பொருளாதார வளர்ச்சியும் தொடர்ந்ததால் இந்தோனேசிய மக்கள், சுகர்த்தோவின் கொடுங்கோண்மை குறித்து பொருட்படுத்தவில்லை.

இப்படிப்பட்ட சுகார்த்தோவின் ஆட்சிக் காலத்தில், 1970-ஆம் ஆண்டுகளின் தொடக்க காலத்தில் சர்வதேச திரைப்பட விழா இந்தோனேசியத் தலைநகர் ஜாகர்த்தாவில் நடைபெற்றது. அந்த நேரத்தில், தமிழ்த் திரைப்பட உலகில் நட்சத்திர நாயகியாக வளர்ந்திருந்த சாவித்திரியும் அந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டார். அவருடன், சாவித்திரி இரகசியமாக திருமணம் புரிந்து கொண்ட ஜெமினி கணேசனும் உடன் சென்றிருந்தார்.

பல நாடுகளில் இருந்தும் வந்த நட்சத்திர நடிக-நடிகையருக்கு சுகர்த்தோ தன்னுடைய மாளிகை வீட்டில் தனிப்பட்ட முறையில் விருந்து கொடுத்தார். மேற்கத்திய பாணியில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அந்த நிகழ்ச்சியில் தொடக்கத்திலேயே அனைவருக்கும் மது பரிமாறப்பட்டது. இதைக் கண்டு அதிர்ச்சி அடைந்த சாவித்திரி, முகத்தை சுழித்துக் கொண்டு அந்த மாளிகையின் நுழைவாயிலுக்கு வந்து தயக்கத்துடன் ஒதுங்கி நின்றார்.

ஜெமினி கணேசன் வந்து, கொஞ்சமாக மது அருந்தும்படி சாவித்திரியை கேட்டபொழுது, தனக்கு பழக்கம் இல்லை என்று சொல்லி சாவித்திரி நளினமாக மறுத்துள்ளார்.

இருந்தபோதும் ஜெமினி விடவில்லை அவை நாகரிகத்துக்காக கொஞ்சமாக மது அருந்துவது தப்பில்லை நான் பார்த்துக் கொள்கிறேன் என்று வலுக்கட்டாயமாக உள்ளே அழைத்துச் சென்ற ஜெமினி, தன் கையாலேயே மதுக் கிண்ணத்தை சாவித்திரியிடம் நீட்டி இருக்கிறார்.

மாலைப் பொழுது மயங்கிய அந்த வேளையில் சாவித்திரியின் மனமும் மயங்கியது. அன்று முதல் மாலை வேளை மயங்கும்பொழுதெல்லாம் மதுக்கிண்ணத்தை நாடி சாவித்திரியின் மனமும் மயங்கியது.

கோடம்பாக்கத்து நாயகியரில் முதன்முதலில் சொந்தமாக கார் ஓட்டிய சாவித்திரியின் காதல் வாழ்வில் அதன்பிறகு என்ன நடந்தது என்பதை திரை உலகமும் பொதுமக்களும் நன்கு அறிவர்.

**நக்கீரன் - Nakkeeran**
**013-244 36 24**

# 'பிளாஸ்டிக்கில் 8 நாள் மனித தோலில் 21 மணி நேரம் ஒமைக்ரான் வைரஸ் உயிர் வாழும்' – ஆய்வில் தகவல்

*சீனாவின் வூகான் நகரில் கடந்த 2019-ம் ஆண்டு டிசம்பர் மாதம், கொரோனா வைரஸ் கண்டறியப்பட்டது. இதையடுத்து கொரோனா வைரஸ் கடந்த 2 வருடங்களாக உருமாற்றம் அடைந்து, தற்போது 200-க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு பரவி, 3-வது அலை, 4-வது அலையாக உருவெடுத்து பெரும் பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது.*

*கொரோனாவை கட்டுப்படுத்த தடுப்பூசி செலுத்தும் பணிகள் தீவிரமாக நடைபெற்று வரும் நிலையிலும், வைரஸ் பாதிப்பு நாளுக்கு நாள் அதன் கோர முகத்தை பல்வேறு வடிவங்களில் காட்டி வருகிறது.*

*இதற்கிடையே, கொரோனா தொற்றின் ஒமைக்ரான் வகை திரிபு பிளாஸ்டிக்கில் 8 நாட்களும், தோலில் 21 மணி நேரமும் உயிர் வாழக்கூடும் என ஆய்வு ஒன்றில் கண்டறியப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. இது கொரோனாவின் மற்ற வகை திரிபுகளான ஆல்பா, பீட்டா, காமா மற்றும் டெல்டாவை காட்டிலும் அதிகம் என சொல்லப்பட்டுள்ளது.*

*ஜப்பானில் உள்ள கியோட்டோ மாகாண மருத்துவப் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர். இதன் நீடித்த தன்மைதான் மற்ற திரிபுகளை காட்டிலும் ஒமைக்ரான் தொற்று வேகமாக பரவக் காரணம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*ஆல்கஹால் அடிப்படையிலான சானிடைசரை பயன்படுத்தினால் ஒமைக்ரான் உட்பட அனைத்து திரிபுகளையும் 15 நொடிகளில் செயலிழக்கச் செய்து விடலாம் என ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். அதனால் சானிடைசரை தவறாமல் பயன்படுத்துமாறு அவர்கள் அறிவுறுத்தியுள்ளனர்.*

சினிமா

# விஜயகாந்த் – வடிவேலு சண்டைக்கு மதுதான் காரணமென கூறுகிறார் நடிகர் "சாரப்பாம்பு" சுப்புராஜ்



கடந்த 2007 ஆம் ஆண்டு விஜய்காந்திற்கும் நடிகர் வடிவேலுவிற்கும் சண்டை ஏற்பட்டதாக ஊடகங்களில் செய்திகள் வெளியானது. அதாவது விஜயகாந்தின் தங்கை திருமலாவின் கணவர் முத்துராமன் கடந்த 2007 ஆம் ஆண்டு உயிரிழந்தார். இவர்கள் இருந்த அடுத்த தெருவில்தான் நடிகர் வடிவேலுவின் அலுவலகமும் இருந்திருக்கிறது. அப்போது மதுரையில் இருந்து வந்த விஜயகாந்தின் உறவினர்கள், வாகனத்தை வடிவேலு அலுவலகம் எதிரே நிறுத்தி இருந்ததாகவும் குடிபோதையில் இருந்த வடிவேலு அதனை கண்டு சத்தம் போட்டு திட்டியதாகவும். உடனே அங்கிருந்த விஜய்காந்த் ரசிகர்கள், மேலாளர், காவலாளி உள்ளிட்டவர்கள் வடிவேலுவின் அலுவலகத்தை தாக்கி, வடிவேலுவின் காரை சேதப்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டதாகவும் செய்திகள் வெளியானது. அதன் பிறகு விஜயகாந்தை பல மேடைகளில் மிகவும் மோசமான முறையில் வடிவேலு பேசியதால் விஜயகாந்தின் ரசிகர்களின் எதிர்ப்பை பெற்றார். சில காலங்களுக்கு பிறகு மன்னிப்பும் கேட்டார்.

உண்மையில் அன்று என்னதான் நடந்தது என்பதை பிரபல நகைச்சுவை நடிகரும் விஜயகாந்த் மற்றும் வடிவேலுவிற்கு நெருக்கமானவருமான சுப்புராஜ் தற்போது வெளிப்படுத்தியுள்ளார்.

அதாவது வடிவேலு தனது பிறந்த நாளை முன்னிட்டு, தனது நெருங்கிய நண்பர்களுக்கு அழைப்பு விடுத்திருந்தாராம். பிரசாத் லேபில் இந்திர லோகத்தில் நா அழகப்பன் படப்பிடிப்பு முடிந்ததும் நடைப்பெற்ற பிறந்தநாள் விழாவில் மது விருந்து கொடுத்திருக்கிறார் வடிவேலு. இது சுப்புராஜுக்கு அதிர்ச்சியாக இருந்ததால், ஏதோ நடக்க போகுது நீ செலவெல்லாம் பண்ணுறியே என நகைச்சுவையாக கூறியிருக்கிறார் சுப்புராஜ். உடனே இருவரும் வடிவேலுவின் அலுவலகம் நோக்கி சென்றிருக்கின்றனர். அப்போது வடிவேலு அலுவலகம் முன்பு கார் இருக்கவே, அவர் யாருடைய கார் இது என கேட்க, உடனே விஜய்காந்த் வீட்டு காவலாளி ராதா என்பவர், வடிவேலுவிடம் விஜயகாந்தின் தங்கை கணவர் இறந்த விவரத்தை கூறியிருக்கிறார். மது போதையில் இருந்ததால் வடிவேலுவும், சுப்புராஜும் அடுத்த நாள் மாலை வாங்கிக்கொண்டு அஞ்சலி செலுத்த செல்லலாம் என முடிவெடுத்திருக்கின்றனர். இருவரும் வீடு சென்ற பிறகு நடந்த சம்பவத்தை அறிந்த அங்கிருந்த விஜயகாந்த் ரசிகர்கள், நமது அண்ணன் படத்தில் நடிக்க முடியாது என கூறியவர், எப்படி இப்படியெல்லாம் கேட்கலாம் என கோவப்பட்டு, அவரது அலுவலகத்தை அடித்தி நொறுக்கியுள்ளனர். இதனை அறிந்து சம்பவ இடத்திற்கு வந்தாராம் வடிவேலு, பிரச்சனை தீவிரமாகவே அடுத்த நாள் தொலைக்காட்சி செய்தியை பார்த்துதான் தெரிந்துக்கொண்டாராம் சுப்புராஜ். வடிவேலுவிற்கும் விஜயகாந்திற்கு எந்த பிரச்சனையும் கிடையாது. இதுதான் நடந்தது. என்னும் சுப்புராஜ், சில காலங்களுக்கு பிறகு விஜயகாந்த் தன்னை அழைத்து "வடிவேலுவ மீண்டும் நடிக்க சொல்லுடா..அவன் இல்லாம போர் அடிக்குது நடிக்கவே" என்றாராம். நடந்ததை எல்லாம் மறந்து, இயல்பாக நடந்துக்கொண்ட விஜயகாந்த்தை நினைத்து மேன் மக்கள்..மேன்மக்களே என நெகிழ்ந்து போகிறார் சுப்புராஜ்.

# பெண்களுக்கு அறிவுரை சொல்ல நன்கு அறிமுகமானவர் தேவை என தனுஷ் விரும்பியதால் அவர் படத்தில் நடித்தேன் என்கிறார் தொகுப்பாளினி டிடி



சின்னத்திரை ரசிகர்களுக்கு மிகவும் பிடித்த தொகுப்பாளினியாக வலம் வருபவர் டிடி என்று அழைக்கப்படும் திவ்யதர்ஷினி. இவர் விஜய் தொலைக்காட்சியில் காபி வித் டிடி, ஜோடி நம்பர் ஒன் உள்ளிட்ட பல நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கியுள்ளார். தற்போது சினிமாவில் கவனம் செலுத்தி வரும் டிடி அவ்வப்போது சில நிகழ்ச்சிகளையும் தொகுத்து வழங்கி வருகிறார். இவர் நளதமயந்தி என்னும் திரைப்படத்தில் சிறிய கதாபாத்திரத்தில் நடித்ததன் மூலம் தமிழ் சினிமாவுக்கு அறிமுகமானார். இதில் டிடி, மாதவனுக்கு தங்கையாக நடித்து இருப்பார். அதைத்தொடர்ந்து தொலைக்காட்சி நிகழ்ச்சியில் கவனம் செலுத்தி வந்த டிடிக்கு தனுஷ் இயக்கிய பவர் பாண்டி திரைப்படத்தின் மூலம் மீண்டும் சினிமாவில் நடிக்கும் வாய்ப்பு கிடைத்தது. இந்தப் படத்தில் டிடிக்கு வாய்ப்பு கிடைத்தது பற்றி அவர் ஒரு பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

ஒருமுறை நடிகர் தனுஷ் எனக்கு போன் செய்து தான் இயக்கும் படத்தில் ஒரு சின்ன கதாபாத்திரத்தில் நடிக்க வேண்டும் என்று கூறினார். தனுஷ் மாதிரி ஒருத்தர் எடுக்கும்பொழுது வேண்டாம் என்று எப்படி சொல்வது. அதனால் நானும் சந்தோ'மாக அதற்கு ஒப்புக் கொண்டேன்.

மேலும் தனுஷ் என்னிடம் இந்தப் படத்தில் பெண்களுக்கு ஒரு அறிவுரை செய்தியை சொல்லணும், அதை மக்களுக்கு மிகவும் பரிச்சயமான முகம் என்றால் நன்றாக இருக்கும் அதனால் தான் உங்களை தேர்ந்தெடுத்தேன் என்று கூறினார். அவர் சொன்ன அந்த வார்த்தைக்காகத்தான் நான் அந்த திரைப்படத்தில் ஒரே ஒரு காட்சியில் நடித்தேன் என்று டிடி தெரிவித்துள்ளார். பவர் பாண்டி திரைப்படத்திற்கு பிறகு அவர் தற்போது துருவ நட்சத்திரம், ஜோஸ்வா போன்ற திரைப்படங்களில் நடித்து வருகிறார். அதிலும் ஜோஸ்வா திரைப்படத்தில் டிடி போலீஸ் கதாபாத்திரத்தில் மிகவும் துணிச்சலாக நடித்துள்ளார். இதுகுறித்த முன்னோட்டக் காட்சி ஒன்று சமீபத்தில் வெளியாகி ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றது குறிப்பிடத்தக்கது.

# கனடா "விழித்தெழு பெண்ணே" அமைப்பின் ஏற்பாட்டில் கொழும்பில் 100 தமிழ்ப் பெண் ஆளுமைகளை கௌரவிக்கும் பெருவிழா

கனடிய செய்திகள்
Canadian News



கனடாவில் நீண்ட காலமாக இயங்கிவரும் கனடா "விழித்தெழு பெண்ணே" அமைபபின் ஏற்பாட்டில் கடந்த 21ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணிக்கு கொழும்பு GLOBAL TOWERS LOUNGE HALL மண்டபத்தில் இடம்பெற்ற தமிழ்ப் பெண் ஆளுமைகளை கௌரவிக்கும் பெருவிழாவில் இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மனோ கணேசன் மற்றும் சுரேன் ராகவன் ஆகியோர்கலந்து சிறப்பித்தனர்.

100 பெண்மணிகள் கௌரவிக்கப்பட்ட இந்த பெருவிழாவில் இலங்கையில் பல்வேறு மாகாணங்களில் வாழும் பெண்மணிகளுள் கலை இலக்கியம் சமூக சேவை. நாடகம். சினிமா. சமயப் பணி போன்ற துறைகளில் மிகுந்த ஈடுபாட்டுடன் பங்காற்றி வரும் வெற்றியாளர்கள் இந்த விழாவில் மிகுந்த மகிழ்ச்சியுடனும் உற்சாகத்துடனும் தங்கள் விருதுகளையும் ஒன்றாரியோ மாகாண அரசின் பாராட்டுச் சான்றிதழ்களையும் பெற்றுக்கொண்டனர்.

விருது பெற்றவர்களில் பிரபல எழுத்தாளர் அன்னலட்சுமி இராஜதுரை மற்றும் ஸ்ரீமதி அருந்ததி ஸ்ரீரங்கநாதன் ஆகியோரும் அடங்கியிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த விருதுகள் வழங்கும் விழாவை சிறப்பாக ஏற்பாடு செய்த கனடா விழித்தெழு பெண்ணே" அமைப்பின் தலைவி திருமதி சசிகலா நரேன் மற்றும் அவரது குழுவினர் ஆகியோருக்கு பாராட்டுக்கள் குவிந்தவண்ணம் உள்ளன.

மேற்படி இரண்டு பெரு நிகழ்விற்கு இலங்கையின் வீரகேசரி நாளிதழ். சக்தி தொலைக்காட்சி. கனடாவின் உதயன் வார இதழ் மற்றும் கனடா சங்கர் நல்லதம்பி அவர்களின் VIBARANT HOSPITALITY GROUP நிறுவனம் ஆகியவை பிரதான அனுசரணையாளர்களாக தங்கள் ஆதரவை வழங்கியிருந்தார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

- சத்தியன்








MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

ALL DEBT SOLUTIONS CR PLAN

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills


வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077

# விமானங்களைப் பயமுறுத்தும் ஐந்தாவது தலைமுறை

- குரு அரவிந்தன்

**5ஜி** விமானங்களைப் பயமுறுத்துகிறதா? விமானங்களை மட்டுமல்ல, விமானப் பயணிகளையும்தான்!

சில நாட்களாகப் பயணிகளிடையே ஒருவித பயத்தை இது ஏற்படுத்தி இருந்தது. கோவிட்-19 பேரழிவு காரணமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்த விமான சேவைகள் சில கட்டுப்பாடுகளுடன் தமது முக்கியமான சேவைகளை மீண்டும் ஆரம்பித்த நிலையில், 5ஜியின் பயமுறுத்தல் வந்திருக்கின்றது.

பயணிகளின் பாதுகாப்புக் கருதிச் சில விமான நிறுவனங்கள் அமெரிக்காவுக்கான சில பறப்புக்களை நிறுத்தி வைத்திருப்பதாக அறிவித்தன. புதிதாக அறிமுகமான 5ஜி செல்போன் சேவைகளிற்கும் விமானங்களில் பாவிக்கும் முக்கியமான விமான தொழில்நுட்பத்திற்கும் இடையிலான தொழில்நுட்ப தொடர்புகளை காரணம் காட்டியே அமெரிக்காவிற்கான சில விமான சேவைகளை நிறுத்தப்பட்டன.

"5ஜி என்றால் அது என்ன ஏலியனா அல்லது விமான எதிர்ப்புப் பீரங்கியா?" என்று மெய்நிகர் ஊடாகக் கற்பித்தல் நிகழ்ச்சியில் 5 ஆம் வகுப்பில் கற்கும் ஒரு மாணவன் என்னிடம் கேட்டபோது, மாணவர்களின் சிந்தனை எங்கெல்லாம் பறக்கிறது என்று நினைத்துப் பார்த்தேன். ஏனென்றால் அவர்கள் ஏலியனைப்பற்றிய கதைகளை அறிந்திருக்கிறார்கள், ஆனால் 5ஜி பற்றித் தெரிந்திருக்கவில்லை. புதிய தொழில் நுட்பம் என்பதால் நானும் அதைப்பற்றி அதிகம் அறிந்திருக்கவில்லை. ஸ்மாட்போனில் ஒரு தரவை விரைவாகப் பதிவிறக்கம் செய்யவோ அல்லது ஒரு தரவை விரைவாகப் பதிவேற்றம் செய்யவோ இது பயனுள்ளதாக அமையும் என்பதை, எனக்குத் தேவையானதை அறிந்திருந்தேன். அப்படித்தான் இங்கேயும் அறிமுகம் செய்திருந்தார்கள்.

ஜி என்ற ஆங்கில எழுத்து "ஜெனரேசன்" என்பதைக் குறிக்கும். இதுவரை காலமும் 4ஜி தொழில்நுட்பம்தான் பாவனையில் இருந்தது. சுருக்கமாகச் சொல்வதானால் தொழில் நுட்ப வளர்ச்சியின் அடுத்த கட்டம்தான் 5ஜி ஆகும். தொலைபேசித் தொடர்பாடலில் 5ஜி என்பது செல்போன்களின் தொடர்பாடலின் விரைவையும், அதன் புதிய செயற்பாட்டையும் குறிக்கும் ஐந்தாம் தலைமுறைத் தொழில்நுட்ப வசதியாகும். இப்போது இந்த நவீனவசதிகள் சில நாடுகளில் மட்டுமே அறிமுகம் செய்யப்பட்டிருக்கின்றன. 2019 ஆம் ஆண்டில் இருந்து செல்போன் நிறுவனங்கள் 5ஜிக்கு ஏற்றமாதிரியே தங்கள் புதிய தொலைபேசிகளைத் தயாரிக்கின்றனர். எதிர்காலத்தில் 5ஜி தொழில் நுட்பம் உலகெங்கும் சுமார் 170 கோடி வாடிக்கையாளர்களால் பாவனைப்படுத்தப்படும் என்று ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.

முதன் முதலாக வர்த்தக ரீதியாக காற்றலைகள் மூலம் வயர் தொடர்பில்லாமல் 1980களில் நடந்த செல்போன் சேவையைத்தான் ஜி1 என்று குறிப்பிட்டார்கள். மிகப் பெரியதொரு மாற்றத்தை தொலைத்தொடர்பில் இது ஏற்படுத்தி இருந்தது. முன்பு வயர்களால் தொடுக்கப்பட்ட தொலைபேசிகளே பாவனையில் இருந்தன. வீடுகளில், பணியிடத்தில், அல்லது அதற்காக அமைக்கப்பட்ட இடங்களில் இருந்துதான் தொலைபேசியில் கதைக்க முடியும். புதிய தொழில் நுட்ப வசதியால் எங்கும் கொண்டு செல்லக்கூடிய வகையில் இந்த செல்போன்கள் அமைந்திருந்தன. இதனால் விரைவான செய்திப் பரிமாற்றம் ஏற்பட்டது. அதன்பின் 1991 ஆம் ஆண்டு மேலும் பல வசதிகளோடு ஜி2 சேவை பின்லாந்து நாட்டில் அறிமுகமானதால் மேலும் சில வசதிகள் கிடைத்தன. 2001 ஆம் ஆண்டு ஜி3 சேவை அடுத்த கட்டமாக யப்பான் நாட்டில் அறிமுகமானது. வண்டிப் பயணத்தின்போது இடங்களை அறிந்து கொள்ளப் பாவிப்கும் ஜி.பி.எஸ் போன்ற வசதிகளை இது பெற்றுத்தந்தது.

2009 ஆண்டு ஜி4 சேவை தென்கொரியாவில் அறிமுகமானது. ஒரு நொடிக்கு நூறு மெகாபைட் வேகத்தில் இது செயற்பட்டது. அனேக நாடுகளில் இந்த ஜி4 சேவைதான் இப்போதும் பாவனையில் இருக்கின்றது. இதைத் தொடர்ந்து ஜி5 சேவை 2019 ஆண்டு அறிமுகமானாலும், இப்போது சில நாடுகளில் மட்டுமே அறிமுகமாகி இருக்கின்றது. இதற்கு மெமரிக்காட் தேவையில்லை. எங்கோ ஒரு கிராமத்தில் நடக்கும் நிகழ்வை உடனடியாக எங்கிருந்தும் தெளிவாகப் பார்க்க முடியும். இதன் மூலம் ஒரு திரைப்படத்தை முழுமையாகச் சில நொடிகளில் பதிவிறக்கம் செய்துவிட முடியும். திரையிடப் போகும் திரையரங்குகளுக்கு இதன் மூலம் விரைவாகத் திரைப்படங்களைத் தெளிவாகப் பதிவிறக்கம் செய்துவிட முடியும். பிலிம் பெட்டிகளைக் காவிக்கொண்டு திரியவேண்டிய அவசியமிருக்காது.



ஏன் அமெரிக்காவுக்கான சில விமான சேவைகளை தற்காலிகமாக நிறுத்தினார்கள் என்பதற்கான காரணத்தை நீங்கள் அறிந்து கொள்ள விரும்பலாம். விமான சேவைக்கும் இந்த 5ஜிக்கும் என்ன தொடர்பு என்று நீங்கள் நினைக்கலாம். இந்த ஜி5 சேவையைப் பரிமாறும் அன்ரனாக்கள் விமான நிலைத்தற்கு அருகே இருந்தால் அது ஆபத்தானது என்று இதற்கான நிபுணர்களால் சொல்லப்பட்டது. காரணம் விமானம் பறக்கும் உயரத்தைக் கணிப்பதற்கும், அவசரகாலங்களில் தரை இறங்குவதற்கும் இதுபோன்ற சக்தி வாய்ந்த சேவைதான் விமானிகளால் இப்போது பாவிக்கப்படுவதால், தவறான தகவல்களால் தரை இறங்கும் போது விபத்துக்கள் ஏற்படலாம் என விமான நிறுவனத்தினர் பயம் கொள்கிறார்கள். பொதுமக்களின் பாவனைக்கு இது வந்துவிட்டால், விடயம் தெரிந்த யாராவது தவறாக, அல்லது விஷமத்தனமாகக் கட்டளைகளைப் பிறப்பித்தல், நூற்றுக் கணக்கான விமானப் பயணிகளின் உயிர் இதில் தங்கி இருக்கின்றது. விமான ஓட்டுனரை நம்பி விமானத்தில் ஏறும் அப்பாவிப் பயணிகளைப் பலிக்கடாவாக்கக் கூடாதல்லவா?

அமெரிக்காவின் சில விமானநிலையங்களிற்கான சேவைகளை நிறுத்தியுள்ளதாக எமிரேட்ஸ் விமானசேவை நிறுவனத்தினர் முதலில் அறிவித்துள்ளனர். அதைத் தொடர்ந்து பயணிகளின் பாதுகாப்புக் கருதி எயர்இந்தியா, எயர் நிப்போன், ஜப்பான் எயர்வேய்ஸ், லுப்ஹன்ஸா, பிரிட்டிஷ் எயவேய்ஸ் போன்ற சில விமானநிறுவனங்கள் அமெரிக்காவில் உள்ள ஒன்பது விமான நிலையங்களுக்கான தங்கள் விமானச் சேவைகளைத் தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளன. எயர்பிரான்ஸ், கே.எல்.எம், வேஜின் அட்லான்டிக் போன்ற நிறுவனங்கள் தொடர்ந்தும் சேவையில் ஈடுபடுகின்றன. டெல்டா எயலைன்சும் காலநிலையைப் பொறுத்து முடிவெடுக்க இருப்பதாக அறிவித்திருக்கின்றது. சுமார் 10 விமான நிறுவனங்களின் 1000 தினசரி சேவைகள் இதனால் பாதிக்கப்பட்டன. அல்டிமீட்டர்கள் பொருத்தப்பட்ட சில விமானங்களின் வகைகள், Airplane models with one of the five cleared altimeters include some Boeing 717, 737, 747, 757, 767, 777, MD-10/-11 and Airbus A300, A310, A319, A320, A330, A340, A350 and A380 models.

"ரேடார் அல்டிமீட்டர்கள்" என்று சொல்லப்படுகின்ற உபகரணங்கள் அனேகமான விமானங்களில் பொருத்தப்பட்டுள்ளன. பறப்பின் உயரத்தையும், அவசரதேவையின் போது தரை இறங்குவதற்கும் இந்தக் கருவிகளே பாவிக்கப்படுகின்றன. அதிவேக 5ஜியின் அறிமுகத்தால் விமானத் தொழில்நுட்பத்திற்குப் பாதிப்பு ஏற்படலாம் என்பதுதான் இப்போது உள்ள பிரச்சினை. வெள்ளம் வரமுன்பு அணை கட்டுவது நல்லது தானே என்ற முடிவோடுதான் சில விமான சேவைகளை நிறுத்தி வைத்திருந்தனர். 5ஜியின் பாவனைக்காக இந்த விமான நிலையங்களுக்கு அருகே இருக்கும் அன்டனாக்களால் பாதிப்பு ஏற்படலாம் என விமான ஓட்டிகள் நம்புகின்றார்கள். எனவே அதற்கு ஒரு மாற்று வழியைக் கண்டு பிடிக்கும்வரை, தற்காலிகமாகச் சேவைகளை நிறுத்தி இருக்கிறார்கள்.

கனடாவில் சுமார் 49 நகரங்களில் இப்போது இந்த சேவை பாவனைக்கு வந்து விட்டது. சென்ற வருடம் கனடா, அமெரிக்கா, பிரித்தானியா, சீனா, தென் கொரியா, ஆஸ்திரேலியா, சுவிஸ், ஜெர்மனி, ஸ்பெயின் போன்ற முன்னேறிய சில நாடுகளில் மட்டுமே இந்த சேவை பயன்படுத்தப்பட்டு வந்தது. இப்போது பிரான்ஸ், தாய்லாந்து, இந்தியா போன்ற சுமார் 40 நாடுகளில் இந்த 5ஜி சேவை அறிமுகம் செய்யப் பட்டிருக்கின்றது. இந்தியாவில் ரிலையன்ஸ் ஜியோ டெலிகாம் நிறுவனம் 5ஜியை அறிமுகம் செய்வதில் தற்போது முனைப்புடன் செயற்படுகின்றது. இந்தச் சேவை அறிமுகம் செய்யப்பட்டால், ஜியோ நிறுவனத்தின் சுமார் 40 கோடிக்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்கள் 1 ஜிபிபிஎஸ் வேகத்தில் இணையத்தளத்தைப் பயன்படுத்த வாய்ப்புக் கிடைக்கும். ஜியோ நிறுவனம் இதை அறிமுகம் செய்தால் 5ஜி சேவைகள் அனைத்தும் ஜியோ இன்போகாம் சொந்தமாக உருவாக்கிய தொழில்நுட்பத்தின் வாயிலாக இந்தியாவின் டிஜிட்டல் பொருளாதாரத்தின் வெற்றிக்கு இது ஒரு முன் உதாரணமாக அமையலாம் என்று எதிர்பார்க்கிறார்கள்.

தெற்காசியாவில் பரீட்சார்த்தமாக 5ஜியை 2019 ஆண்டு பயன்படுத்திய நாடுகளில் இலங்கையும் அடங்கும். இந்தத் தொலைதொடர்பு தொழில்நுட்பம் ஒரு துவிச்சக்கர வண்டியின் வேகத்தில் இருந்து படிப்படியாக மாறி இப்போது ரொக்கட் வேகத்திற்கு வந்திருக்கின்றது. விரைவாகக் கொள்ளையடிக்க இணையத் திருடர்களுக்கும் இது சாதகமாக மாறலாம். இத்துறையில் அடுத்து நடக்கப்போகும் மாற்றம் என்னவென்று பொறுத்திருந்து பார்ப்போம்.



# இந்தியாவுக்கு துரோகம் செய்த இலங்கைக்கு ரூ.18,090 குடியரசு தின விழாவின்போது எழுந்து நிற்காததால் சர்ச்சை; 'தமிழ்த்தாய் வாழ்த்து மாநிலப் பாடல் என்பதை உணர்கிறோம்' : அமைச்சர் பழனிவேல் தியாகராஜனை சந்தித்த நிலையில் ரிசர்வ் வங்கி விளக்கம்

தமிழ்த்தாய் வாழ்த்து அவமதிப்பு சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில், தமிழ்த்தாய் வாழ்த்து மாநிலப்பாடல் என்பதை உணர்வதாக இந்திய ரிசர்வ் வங்கியின் சென்னை மண்டல அலுவலகம் தெரிவித்துள்ளது.சென்னை தலைமைச் செயலகம் அருகில் உள்ள இந்திய ரிசர்வ் வங்கிமண்டல அலுவலகத்தில் 26ம் தேதி குடியரசு தினம் கொண்டாடப்பட்டது. ரிசர்வ் வங்கி மண்டல இயக்குநர் எஸ்எம்என் சுவாமி தேசியக் கொடியை ஏற்றி வைத்து உரையாற்றினார்.

நிகழ்ச்சி முடிவில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பட்டபோது, ரிசர்வ் வங்கி பெண் அதிகாரி உட்பட சிலர் உட்கார்ந்திருந்தனர்.தமிழ்த்தாய் வாழ்த்து பாடலை வாய்ப்பாட்டாக பாட வேண்டும். இசைத்தட்டு வாயிலாக இசைக்கக் கூடாது.தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்படும்போது எழுந்து நிற்க வேண்டும் என பல அறிவுறுத்தல்களை வழங்கி தமிழக அரசு அரசாணை வெளியிட்டுள்ள நிலையில், அதிகாரிகளின் நடவடிக்கை அதிர்ச்சியை ஏற்படுத்தியது.இதுகுறித்து பத்திரிகையாளர்கள் கேள்வி எழுப்பிய நிலையில், அதிகாரிகள் செய்தியாளர்கள் இடையே வாக்குவாதம்



ஏற்பட்டது. அப்போது, நீதிமன்ற உத்தரவு இல்லை என்று கூறி,அதிகாரிகள் சென்றுவிட்டனர்.

வலைதளங்களில் இந்த வீடியோ காட்சி வெளியாகி பரபரப்பு ஏற்பட்டது.இதற்கு திமுக, பாஜக, காங்கிரஸ் உள்ளிட்ட கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்தன.இதையடுத்து, சென்னை தலைமைச் செயலகத்தில் நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜனை, ரிசர்வ் வங்கி மண்டல இயக்குநர் எஸ்எம்என் சுவாமி மற்றும் நிகழ்ச்சியில் பங்கேற்ற பெண் அதிகாரிஉள்ளிட்டோர் நேற்று சந்தித்தனர்.குடியரசு தின விழாவில் தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பட்ட போது அதிகாரிகள் எழுந்து நிற்காததற்கான விளக்கத்தை அமைச்சரிடம் அளித்தனர். அமைச்சரும் இதுகுறித்து அறிவுறுத்தல்களை வழங்கினார்.இந்நிலையில், ரிசர்வ் வங்கி மண்டலஅலுவலகம் நேற்று மாலை வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

குடியரசு தினத்தை முன்னிட்டு தமிழ் கலாச்சாரம், மொழிக்கு மரியாதை செலுத்துவதன் அடையாளமாக தமிழ்த்தாய் வாழ்த்து பாடப்பட்டது. எனினும்,அதைத் தொடர்ந்து ஏற்பட்ட குழப்பத்தில் பாடல் குறித்து எதிர்பாராத மற்றும் வருந்தத்தக்க தேவையற்ற கூற்றுகள் எழுப்பப்பட்டன.'தமிழ்த்தாய் வாழ்த்து' தமிழகத்தின்மாநிலப்பாடல் என்பதை உணர்கிறோம். ஒழுங்குமுறைப்படுத்தும் அமைப்பு என்ற முறையில், நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் பின்பற்றப்படும் பழக்க வழக்கங்கள், நடைமுறைகளை நாங்கள்மதிக்கிறோம். இதுகுறித்து, அமைச்சர் தியாகராஜனை சந்தித்து எங்கள் நிலைப்பாட்டை மண்டல இயக்குநர் சுவாமி தலைமையிலான அதிகாரிகள் உறுதி செய்தனர். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மதுரையில் தொடங்கப்படாத எய்ம்ஸ் கட்டுமானப் பணி பிரதமர் மோடி அடிக்கல் நாட்டி இன்றுடன் 3 ஆண்டுகள் நிறைவு




மதுரை அருகே தோப்பூரில் எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுவதற்கு 2019 ம் ஆண்டு ஜன.27 ம்தேதி பிரதமர் மோடி அடிக்கல் நாட்டினார். இன்றோடு அடிக்கல் நாட்டி 3 ஆண்டுகள் கடந்து விட்டன.ஆனால் தோப்பூரில் மருத்துவமனைக்கான சுற்றுச்சுவர் தவிர வேறு எந்த கட்டுமானப் பணிகளும் தொடங்கப்படவில்லை.

பிரதமர் அடிக்கல் நாட்டும்போது ரூ.1,464 கோடி மதிப்பில் 750 படுக்கைகள் கொண்ட மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரி, நர்சிங் கல்லூரி அமைக்கப்படும் என்று கூறினார். திட்டமிடப்பட்ட காலத்தில் கட்டுமானப் பணி தொடங்காத நிலையில், 2020ம் ஆண்டு இறுதியில் எய்ம்ஸ் மருத்துவமனை திட்ட மதிப்பீடு ரூ.2,000 கோடியாக உயர்ந்துவிட்டதாக அறிவிக்கப்பட்டது.எய்ம்ஸ் மருத்துவமனை கட்டுமானப் பணிக்கான கடனுதவியை ஜப்பானின் ஜெ.ஐ.சி.ஏ. நிறுவனத்திடம் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தற்போது வரை நிதி உதவி வராததால் கட்டுமானப் பணிகள் தொடங்கப்பட வில்லை. இதுகுறித்து மதுரை எய்ம்ஸ் மருத்துவமனை மக்கள் இயக்க தலைமை ஒருங்கிணைப்பாளர் வி.எஸ்.மணிமாறன் கூறியதாவது:மதுரை எய்ம்ஸ் மருத்துவமனைக்கான கடனுதவி தொடர்பாக புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு 9 மாதங்கள் கடந்துவிட்டன. இன்னும் கட்டுமானப் பணிகள் தொடங்கப்படவில்லை. மதுரையோடு சேர்ந்து பஞ்சாப், அசாம் உள்ளிட்ட மாநிலங்களுக்கும் ஒரே நேரத்தில்தான் எய்ம்ஸ் அறிவிப்பு வெளியானது.

தற்போது பஞ்சாபில் எய்ம்ஸ் மருத்துவமனைக்கான 88% கட்டுப்பானப் பணிகள் முடிவடைந்து விட்டன. அசாமில் 52%, இமாசலப் பிரதேசத்தில் 68%, ஜம்மு மற்றும் காஷ்மீரில் 25% கட்டுமானப் பணிகள் நிறைவடைந்துள்ளன. ஆனால் தமிழகத்தில் கட்டுமானத்துக்கான டெண்டர் விடும் நடவடிக்கை கூட மேற்கொள்ளப்படாமல் கிடப்பில் உள்ளது. மற்ற மாநிலங்களில் எய்ம்ஸ் மருத்துவமனை அமைய உள்ள இடத்திலேயே நிர்வாக அலுவலகம் தொடங்கப்பட்டுள்ளன. ஆனால்மதுரை எய்ம்ஸ் மருத்துவமனைக்கான நிர்வாக அலுவலகம் புது டெல்லியில் அமைக்கப்பட்டுள்ளது என்று கூறினார்.

தகவல் அறியும் உரிமைச் சட்ட ஆர்வலர் பாண்டியராஜா கூறும்போது, "மதுரை எய்ம்ஸ் தொடர்பான நிர்வாகக் குழுக் கூட்டத்தில் 2023ம் ஆண்டில்தான் கட்டுமானப் பணிகளே தொடங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இது மிகப்பெரிய ஏமாற்றத்தை தருகிறது.மேலும், கட்டுமானப் பணிகள் எப்போது தொடங்கும் என்றே தெரியாது என்று மத்திய சுகாதாரத் துறை தெரிவித்திருப்பது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. மற்ற மாநிலங்களைப்போல் தமிழகத்திலும் விரைவில் கட்டுமானப் பணியை தொடங்குவதுடன், மாணவர் சேர்க்கையையும் மேற்கொள்ள மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று கூறினார்.

# புலிகளின் எண்ணிக்கை இரட்டிப்பானதால் சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்துக்கு விருது அறிவிப்பு

சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தில் கடந்த 10 ஆண்டுகளில் புலிகளின் எண்ணிக்கை இரு மடங்காக அதிகரித்துள்ளதற்காக சர்வதேச விருது வழங்கப்பட்டுள்ளது. உலகம் முழுவதும் உள்ள வனங்களில் வாழும் புலிகளைக் காப்பதற்காகவும், அவற்றின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், டபுள்யு டபுள்யு எப் இந்தியா நிறுவனம் உள்ளிட்ட சர்வதேச அளவிலான அமைப்புகள்,பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. இந்த அமைப்பினர் நடத்திய ஆய்வில், சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தில், கடந்த 2010ம் ஆண்டு இருந்த புலிகளின் எண்ணிக்கை, தற்போது இரு மடங்காக அதிகரித்துள்ளது தெரியவந்துள்ளது.

இதையடுத்து சத்தி புலிகள் காப்பகத்திற்கு டிஎக்ஸ் 2(TX2) விருது அறிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து டபுள்யு டபுள்யு எப் இந்தியா நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:நீலகிரி உயிர்க்கோள நிலப்பரப்பைச் சேர்ந்த சத்தியமங்கலம் புலிகள் காப்பகத்தில், உலகிலேயே மிக அதிகமான எண்ணிக்கையில் புலிகள் வாழ்கின்றன. கடந்த 2013ம் ஆண்டு புலிகள் காப்பகமாக அறிவிக்கப்பட்ட சத்யமங்கலத்தில் தற்போது 80 புலிகள் உள்ளன.

முதுமலை புலிகள் காப்பகம், பந்திப்பூர் மற்றும் பி.ஆர்ஹில்ஸ் புலிகள் காப்பகங்களுடன் இந்த காப்பகம் இணைந்துள்ளது. இதனால் புலிகளால் எளிதாக இரை தேடவும் புதிய எல்லைக்குள் பிரவேசிக்கவும் முடிகிறது.இதேபோல், புலிகளின் எண்ணிக்கையை இருமடங்கு அதிகரித்ததற்காக நேபாளத்தில் உள்ள பார்டியா தேசியப் பூங்காவும், இந்த ஆண்டுக்கான டிஎக்ஸ் 2 விருதினைப் பெற்றுள்ளது.

இந்தியா மற்றும் நேபாளத்திற்கும் இடையே புலிகள் தடையின்றி, எல்லைகளைத் தாண்டிச் சென்று வர இந்த பூங்கா வழிவகுக்கிறது.உலக அளவில் 2010ம் ஆண்டு புலிகளின் எண்ணிக்கை 3200 ஆக சரிந்திருந்த நிலையில், 2016ல் நடத்தப்பட்ட ஆய்வில் புலிகளின் எண்ணிக்கை 3900மாக உயர்ந்துள்ளது தெரியவந்துள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# விருதுநகர் அருகே அழகாபுரியில் 102வது பிறந்தநாள் கொண்டாடிய முதியவர்

தினந்தோறும் அதிகாலை நடை பயிற்சியும், சைவ உணவுமே தனது ஆரோக்கியத்துக்கு முக்கியக் காரணம் என 102வது பிறந்தநாளை கொண்டாடிய முதியவர் கூறினார்.விருதுநகர் அருகே உள்ள அழகாபுரியைச் சேர்ந்தவர் சின்னராஜ். நேற்று தனது வீட்டில் 102வது பிறந்தநாளை குடும்பத்தினருடன் கொண்டாடினார்.

இவருக்கு பாலாமணி(73), வசந்தகுமாரி(71), திலகவதி (68), மேனகா (65) ஆகிய மகள்களும் அழகர்சாமி (62) என்ற மகனும் உள்ளனர். விருதுநகர் தந்திமரத்தெருவில் வசித்து வந்த சின்னராஜ், தந்தையின் தொழிலான பஞ்சு வியாபாரம் செய்து வந்தார். அப்போது வியாபார



வளர்ச்சிக் குழுவின் தலைவராகவும் பொறுப்பு வகித்தார்.

முன்னாள் அமைச்சர் கக்கனுடன் நெருங்கிப் பழகியவர். அப்போதைய சட்டப்பேரவைத் தேர்தலில் பிரச்சாரம் மேற்கொண்டவர். பின்னர், விருதுநகர் அருகே உள்ள அழகாபுரியில் தங்கி விவசாயம் செய்து வந்தார். புத்தகம், பத்திரிகை வாசிப்பதில் ஆர்வம் கொண்ட முதியவர் சின்னராஜ், தற்போது வரை அதை தொடர்ந்து வருகிறார். உறவுகளுக்கு கடிதம் எழுதும் பழக்கத்தையும் வழக்கமாகக் கொண் டுள்ளார். மேலும், தனக்கான அனைத்து வேலைகளையும் தானே செய்து கொள்கிறார்.

# ஈழத்துத் திருக்கோவில்கள் 983



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com



## வருத்தலைவிளான் மருதடிப்பிள்ளையார் கோவில் தெல்லிப்பளை

*“அஞ்சுள ஆனை அடவியுள் வாழ்வன*
*அஞ்சுக்கும் அஞ்செழுத்து அங்குச மாவன*
*அஞ்சையும் கூடத் தடுக்கவல் லார்கட்கே*
*அஞ்சதி யாதி அகம்புக லாமே”*

கந்தப்புராணம், இலிங்கபுராணம், உபதேசகாண்டம் முதலியவற்றிலே கூறப்படும் பிள்ளையாரின் மகிமைகளைத் திரட்டித் தருவது பெருங்கதையாகிய பிள்ளையார் காப்பாகும். இப்பெருங்கதையைப் படித்து மருதடியான் கடாட்சம்பெற வர்த்தலைவிளான் மக்கள் விரும்பினர். 1919 ஆம் ஆண்டு கார்த்திகையில் கார்த்திகை கழிந்த பின்னாளில் பெருங்கதையைப் படிக்க ஆரம்பித்தனர். இக்காலத்தில் அன்பர்கள் இருபத்தொரு இழைகளை இன்பமுறக்கட்டி, இருபத்தியொருநாள் ஒருபொழுது உணவுண்டு, ஒரு மனமாகி அவ்விரதத்தை அனுட்டிக்க ஆரம்பித்தனர்.

எங்கும் நீக்கமற நிறைந்துள்ள ஆன்மாக்கள் நன்னிலை பெற்று பேரின்பம் பெற, மூலாதீதரான பிரணவர் விரும்பினார். ஆன்மகோடிகள் பாசப்பிணிப்பிலிருந்து விடுபட்டு, பக்குவம் பெற வேண்டும். ஆதிபகவானாகிய அவர் சர்வபிரபஞ்சங்களையும், பிரகிருதிகளையும் தோற்றுவித்து, அதில் ஆன்மாக்களைப் பிறக்க வைத்தார். ஜெனித்த உயிர்களுக்கு மலநாசம் ஏற்பட இறையருள் அடிப்படையாக விளங்குகின்றது. அத்தன்மை கைகூட ஏற்புடைய இடமாகக் கோவில்கள் காணப்படுகின்றன. இவ்வாறான கோவில்களிலே இறையருள் பரவிக்கிடக்கின்றது. இதனைப் பெற வழிபாட்டு முறைகள் பெரிதும் உதவுகின்றன.

வருத்தலைவிளானிலுள்ள மருதடிப்பிள்ளையார் கோவில்கொண்டுள்ள பதி, பலவகையிலும் சிறப்புப் பெற்றுக் காணப்படுகின்றது. தன்னை நாடிவரும் அடியவர் துயர்தீர்த்து அருள்புரியும் பிரணவராக, இவ்வாலயத்திலே விநாயகர் எழுந்தருளியுள்ளார். இவரது பெருமையை அறிந்த வர்த்தலைவிளான் மக்களும், அயலூரவர்களும் பிள்ளையாரை நாடிவரத் தொடங்கினர். விநாயகவிரதங்களை பக்திபூர்வமாகக் கடைப்பிடிக்க ஆரம்பித்தனர். இவ்வாறான நிலையிலே, விநாயவருக்குகந்த பிள்ளையார் காப்பாகிய பெருங்கதையை மக்கள் பக்திபூர்வமாகப் படித்தும் இவ்விரதத்தை ஒருமனமாகிக் கடைப்பிடித்தும் பல்வேறு நன்மைகளைப் பெற்றனர்.

தம்மைக் காத்தற்பொருட்டு பிள்ளையார் காப்புப் படிக்கும் கேட்கும் பக்தர்களை, பிள்ளையார் அருள்புரிந்துகாப்பாற்றுவார் என்ற எண்ணம் மக்கள் தனதிலே நிறைந்து காணப்பட்டது. பக்தர்களது மனமறிந்து இடர்களைப்போக்கும் விநாயகனின் அருளுக்குச் சான்றாக, ஒரு சம்பவத்தை இவ்வூரவர் கூறி மகிழ்வர். இம்மை, மறுமை ஆகிய இருமையையும் நல்கும் விநாயகனிடம், இவ்வூரிலே வாழ்ந்த வல்லிபுரம் தம்பதிகள் ஆராத பக்திகொண்டவர்களாக விளங்கினர். இத்தம்பதிகளுக்கு ஆறு பெண் குழந்தைகள் இருந்தபோதிலும், குலம்காக்க ஆண்குழந்தை இல்லையே என்ற குறை இவர்களிடம் காணப்பட்டது.

மருதடியானிடம் தமது குறையை முறையிட்டுத் தினமும் மருதைச் சுற்றி வலம்வந்து வணங்கித் தொழுதனர். நோன்புகளைக் கடைப்பிடித்து, தேவையானோருக்குத் தொண்டுகள் புரிந்தனர். தர்மம் செய்தனர். சன்னிதியின் ஈசான மூலையில் ஓர் அரச மரத்தை நாட்டினர். மருதடிப்பெருமானின் அனுக்கிரகத்தால் வல்லிபுரம் தம்பதிகளுக்கு அழகான ஆண்மகவு கிடைத்தது. ஆண்மகவு வேண்டித் தாம் வைத்த நேர்த்திகளை நிறைவேற்றியதோடு, தொடர்ந்தும் தொண்டு செய்யும் பெருமனதுடையவர்களாக வாழ்ந்தனர்.

இவ்வாறான நிலையில் இவர்கள் நட்ட அரசமரத்துடன் இணைந்து வேப்பமரக்கன்று ஒன்றும் இணைந்து வளரத்தொடங்கியது. விநாயகன் அருளால் கிடைத்த ஆண்மகவு திருமணம் செய்த காலமாகிய 1946 ஆண் ஆண்டிலேயே இந்த வேப்பமரம் முளைத்து, அம்மையும் அப்பனும் சிவபார்வதி சமேதராக இணைந்துள்ள அர்த்தநாரீஸ்வர தத்துவத்தை உணர்த்துவது போலக் காணப்பட்டது. இவ்வாறான பல அனுபவங்கள், மருதடி விநாயகன் அருளால் தமக்கும் ஏற்பட்டதாக பக்திகொண்ட அன்பர்கள் கூறி மகிழ்கின்றனர். வாழ்க்கை என்பது நம்பிக்கையின் அடித்தளத்திலேயே காணப்படுகின்றது. நம்பினார் கெடுவதில்லை இது நான்கு மறை தீர்ப்பு என்பதற்கமைய ஒவ்வொருவருடைய ஆழ்ந்த நம்பிக்கையும், அவரவரின் வாழ்க்கையின் ஆணிவேராக நின்று மகிழ்ச்சியைக் கொடுக்கின்றது.

இவ்வாறே வித்துவசிரோன்மணி பிரம்மஸ்ரீ சி. கணேசையர் அவர்கள் வர்த்தலைவிளான் மருதடி விநாயகரின் திருவருளைப் பூரணமாக உணர்ந்தவராக விளங்கியுள்ளார். மருதடி கணேசரும், மகாவித்தவான் கணேசையரும் வேற்றறக்கலந்து காணப்பட்டனர் என்பதை அவரது “வர்த்தலைவிளான் மருதடி விநாயகர் இருபா இருப.ஃ.து” என்ற நூலிலுள்ள பாடல் வரிகளான,

“என்குலத் தந்தணர் நின்னடித் தொண்டினை
வழிவழி செய்து வாழும் புன்னைமர
நகரின் மேவிய நற்றளியிற் போல்
வீயா மருதடி மேவு மூலத்தும்
உற்றே யருள் செய்யும் உயர் பரம்பொருளே”

என்ற பாடல் வரிகள் தெளிவாக்கியுள்ளது.

வளரும்...


கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை
NEW LIFE FRESH START

வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு
Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தொலைபேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Proted all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy

crc CREDIT RECOVERY CANADA

55 Town Centre Court, Suite 700, Scarborough, ON. M1P 4X4



Suren Sornalingam
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

Tel: 647-274-2832
Fax: 416-332-0914
www.creditrecoverycanada.com



***மொன்றியால் வீணைமைந்தன்*** எழுதுகின்றார்




# 'மஹாகவி' பாரதி பாடல்கள்

***அத்தியாயம் - 08***

"பள்ளிப்பருவம் தொட்டு யாருடைய எழுத்துக்களைப் படித்து படித்து என்னை செம்மையாக செதுக்கிக் கொள்ள முயன்றேனோ, அந்த பாரதியை மகா சக்தியாக என் மனதில் வைத்துப் பூசித்து வாழ்பவன் நான்!

சுமார் 50 ஆண்டுகளுக்கு மேலாக நான் பாரதியை படித்து வருகிறேன் சிந்திக்கிறேன். பாரதியின் சிந்தனைகள் சமூக வெளிகளில் பதிவு செய்ய முயல்கிறேன். எத்தனை முறை படித்தாலும் ஒரே பொருளை திரும்பத் திரும்ப தருமானால் அது உயரிய இலக்கிய படைப்பு ஆகாது. படிக்கிற ஒவ்வொரு முறையும் புதிய புதிய சிந்தனைகளையும் கருத்துக்களையும் அள்ளி அள்ளி கொடுக்கக்கூடிய ஆற்றல் பெற்ற படைப்போ! எழுத்தோ அதுதான் காலங்கள் கடந்து வாழும்! அதுபோன்று காற்று உள்ளவரை - தமிழ் உள்ளவரை - கடைசி தமிழன் உள்ளவரை வாழக் கூடிய ஆற்றல் படைத்த எழுத்துக்கள் தான் பாரதி என்ற மகா கவிஞனின் எடுத்துக்காட்டு" என்று மனம் பூரிக்க சொல்கிறார் பாரதியின் வழியில் வந்த அறிஞர் தமிழருவி மணியன் அவர்கள்!

இனி காலங்கள் பல கடந்தாலும் தமிழ் திரையுலகின் முடிசூடா மன்னனாக விளங்கிய பெரும் புகழ் படைத்த நடிகர் திலகம் ஐயாவின் படங்களில் ஒன்றான "படிக்காத மேதை"யில் இடம்பெற்ற மகாகவியின் பாடல் பற்றி பார்ப்போம். படம் "படிக்காத மேதை". இப்படம் பற்றிய ஒரு சுவாரஸ்யமான தகவலையும் சுட்டிக்காட்டி விட்டு - பின் பாடலுக்குள் செல்வோம். "ஆஷா பூர்ணா தேவி" என்ற வங்க எழுத்தாயினி இன் மூலக் கதைக்கு வசனம் எழுதி இயக்குவதற்கு முதலில் தயாரிப்பு நிறுவனமான "பாலா மூவிஸார்" நாடியது இயக்குனர் ஸ்ரீதர் ஆவார். ஸ்ரீதர் கதையை படித்துவிட்டு வசனம் எழுதி இயக்குவதற்கு மறுத்துவிட்டார். ஆனால் தன்னிடம் உதவி இயக்குனராகவும் வசனம் எழுதுபவராகவும் பணியாற்றிய கே எஸ் கோபாலகிருஷ்ணன் அவர்களை அறிமுகம் செய்து சிபாரிசு செய்தார். பல விவாதங்களுக்கு பிறகு கே.எஸ்.ஜி வசனகர்த்தாவாகவும், இயக்கம் இயக்குனர் பீம்சிங் ஆகவும் தீர்மானிக்கப்பட்டு "படிக்காத மேதை" படம் வெற்றிப்படம் ஆயிற்று. (1960)

படத்தில் பிரபல குணச்சித்திர நடிகர் எஸ்வி ரங்காராவும் சிவாஜியும் போட்டி போட்டு நடித்திருப்பார்கள். அல்ல... அல்ல... வாழ்ந்திருப்பார்கள். "ரங்கன்" என்னும் எஜமான விசுவாசம் மிக்க வேலைக்காரனாக சிவாஜி நடித்திருப்பார். ரங்கனின் பணிவிடைகளை எண்ணி எண்ணி நினைத்து நன்றியுடன் கண் கலங்கி மனம் துயருறும் பின்னணியில் அமரகவி யின் "கண்ணன்" பாடல் தொகுப்பிலிருந்து சில வரிகளை ஆங்காங்கு எடுத்து தொகுத்து புதிய வடிவம் கொடுத்து மெட்டமைத்து இசையமைத்திருப்பார் "திரை இசைத் திலகம்" கேவி மகாதேவன். கணீரென தனது கம்பீரக் குரலில் பாடியிருப்பார் நமது தெய்வ குரலோன் சீர்காழி கோவிந்தராஜன் ஐயா அவர்கள்.

"மகாகவி"யின் கண்ணன் பாடல் தொகுப்பில் பொறுக்கி எடுத்த வரிகள் இதோ..



*பல்லவி*

*எங்கிருந்தோ வந்தான்*
*இடைச்சாதி நான் என்றான்*
*இங்கிவனை யான் பெறவே*
*என்ன தவம் செய்து விட்டேன்... (கண்ணன்)*

*சரணங்கள்*

*சொன்னபடி கேட்பான்*
*துணிமணிகள் காத்திடுவான்*
*சின்னக் குழந்தைக்கு*
*சிங்காரப் பாட்டிசைப்பான்... (கண்ணை)*

*கண்ணை இமையிரண்டும் காப்பது போல்*
*என் குடும்பம் வண்ணமுறக் காக்கின்றான்*
*வாய் முணுத்தல் கண்டறியேன்... (கண்ணன்)*

*பற்று மிகுந்து வரப் பார்க்கின்றேன்,*
*கண்ணனால் பெற்றுவரும் நன்மையெல்லாம்*
*பேசி முடியாது...*

*நண்பனாய்... மந்திரியாய்... நல்லாசிரியனுமாய்...*
*பண்பிலே... தெய்வமாய்...*
*பார்வையிலே.. சேவகனாய்... ரங்கன்*
*எங்கிருந்தோ வந்தான்... ரங்கா.. ரங்கா..*

எனும் வரிகளில் கேட்பவர் உள்ளம் நெஞ்சுருகிப் போகும் அனுபவித்தால் புரியும்.

அடுத்து 1963இல் "இயக்குனர் திலகம்" கே எஸ் கோபாலகிருஷ்ணன் அவர்கள் கே.ஜே மகாதேவன் அவர்களது மூலக் கதைக்கு திரைக்கதை - வசனம் எழுதி இயக்கி வெளியான "கை கொடுத்த தெய்வம்" படத்தில் ஒரு காட்சியில் அமரகவி பாரதியின் பாடலை பயன்படுத்தியிருந்தார். இப்படத்தின் நாயகர்களுள் ஒருவரான "நடிகர் திலகம்" பாரதி பாடல் ஒன்றினை நினைத்துக்கொண்டு தூங்கச் செல்லும் போது இடம்பெற்ற கனவில் வந்த பாடல் காட்சி அது!

தூங்கப் போகும் முன் தனது வீட்டில் குடியிருக்கும் புதிதாக திருமணம் செய்த நண்பனும் அவரது மனைவியும் பிரியமுடன் பேசிக்கொண்டிருப்பதை பார்த்து மனதில் மகிழ்ச்சி பொங்க அங்கு மாட்டி இருந்த பாரதியின் உருவப்படத்தை பார்த்து

... ஐயா! பாரதி... தென்கோடியில் பிறந்த ஒருவன், வடகோடியில் பிறந்து ஒருத்தி, இந்த "ஒருவனும் ஒருத்தியும்" இதயத்தால் இணையும் போது அங்கு ஜாதி ஏது? மதம் ஏது? மொழி ஏது? அந்த ஐக்கியத்தை பிரிக்க வேறு வழி தான் ஏது?... ஐயா... பாரதி... உன் புகழ் வாழ்க!" என சொல்லியவாறு பாரதியின் கவிதைகள் கொண்ட நூலின் பக்கங்களை புரட்டிய வாறு, "சிந்து நதியின் மிசை நிலவினிலே சேர நன்னாட்டிளம் பெண்களுடனே சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்து தோணிகளோட்டி விளையாடி வருவோம்"... எனும் கவிதை வரிகளை மெல்ல முணுமுணுத்துக் பாடியவாறு தூங்கி விடுகிறான். அப்போ அவன் காணும் கனவில் பாரதி கண்ட தேசிய ஒற்றுமை பாடலாக இடம் பெற்ற பாடலை பாரதி வேடத்தில் நடிகர் திலகமே பாடுவதாகக் காட்சி இடம் பெறுகிறது. இப்படத்தில் தான் முதல் முறையாக சிவாஜி ஐயா அவர்கள் பாரதி வேடத்தில் தோன்றுகிறார். நடிகர் திலகம் அவர்கள் பாடல் வரிகளில் சொல்லப்பட்ட கோதுமை வெற்றிலை பயிர் செய்பவராகவும், மராட்டிய கவிஞராகவும், சேர நாட்டு யானைத் தந்தம் பரிசளிப்பவராகவும், தேசிய ஒற்றுமையை வலியுறுத்தும் பாரத குடிமகனாக நான்கு வேடங்களில் தோன்றுவார்.

"பாரத தேசம்" எனும் தலைப்பின் கீழ் பாரதி ஐயா புன்னக வராளி ராகத்தில் எழுதிய பாடல் வரிகள் இயக்குனரின் விருப்புக்கேற்றவாறு ஒழுங்குபடுத்தி மெல்லிசை மன்னர்களால் மெட்டமைத்து இசையமைக்கப்பட்டிருந்தது.

"ஏழிசை வேந்தர்" ரி.எம் எஸ் குரலில் (பெண் பாடகிகள் கோர்ஸுடன்) மிகவும் இனிமையாக காட்சிப்படுத்த பட்டிருந்தது. இதோ இடம் மாறிய பாடல் வரிகள்..



*"சிந்து நதியின் மிசை நிலவினிலே*
*சேர நன்னாட்டிளம் பெண்களுடனே*
*சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்து*
*தோணிகளோட்டி விளையாடி வருவோம்*

*கங்கை நதி புறத்து கோதுமை பண்டம்*
*காவிரி வெற்றிலைக்கு மாறு கொள்வோம்*
*சிங்க மராட்டியர் தம் கவிதை கொண்டு*
*சேரத்துத் தந்தங்கள் பரிசளிப்போம்!*

*சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்*
*சேதுவை மேடுறுத்தி வீதி அமைப்போம்*
*வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால்*
*மையத்து நாடுகளில் பயிர் செய்வோம்*

என கனவு கண்ட பாரதியின் சிந்தனைகளை மெய்ப்பட வைப்பதே எதிர்கால இளைய பாரதத்தின் லட்சியமாக வேண்டும்.

அடுத்த இதழில்.. இந்திய சுதந்திர வேள்வியில் தன்னை ஆகுதியாக்கிய ஒரு வீரத் தமிழனின் வரலாற்று படத்தில் இடம்பெற்ற பாரதியின் பாடல்கள் பற்றி அறிவோம்.

- *வீணை மைந்தன்*

## 26–ஆம் நாளுக்கும் இந்த பூமிக்கும் என்ன தொடர்பு? கடைசி இந்துப் பேரரசு சரிந்த நாள் ஜனவரி 26

ஆசியக் கண்டத்தைப் பொறுத்தவரை ஜனவரி 26-ஆம் நாளான இன்று, இந்தியா தன் குடியரசு தினத்தை 73-ஆவது தடவையாக கொண்டாடுகிறது.

இதைத் தவிர பொதுவாக 26-ஆம் நாளுக்கும் இந்தப் புவிப் பந்துக்கும் ஏதோவொரு பந்தம் தொடர்கிறது அது என்ன உறவு, எப்படிப்பட்ட நெருக்கம் என்பதுதான் இன்றுவரை தெரியவில்லை.

புவியியல் ஆராய்ச்சியாளர்களின் சிந்தனையை வண்டைப் போல குடைந்து கொண்டிருக்கும் ஒரு சங்கதி, 26-ஆம் நாளுக்கும் நிலமும் நீரும் இணைந்த இந்த பூமிக்கும் உள்ள நெருக்கத்தைப் பற்றியதுதான்.

இந்த உலகில் இதுவரை நிகழ்ந்த நிலநடுக்கம், கடலுக்குள் எரிமலை வெடிப்பது, ஆழிப் பேரலை பொங்கி எழுவது என பெரும்பாலான இயற்கைப் பேரிடர்கள் 26-ஆம் நாளில்தான் நடைபெற்றுள்ளன.

அதிலும் குறிப்பாக, பிப்ரவரி 26-இலும் டிசம்பர் 26-ஆம் நாளிலுமே இத்தகைய இயற்கைப் பேரிடர்கள் நிகழ்ந்துள்ளன. ஏன் இப்படி 26-ஆம் நாளில் மட்டும் அதிகமாக நடைபெறுகின்றன என்பதற்கான விடை இதுவரை யாருக்கும் புரியவில்லை.

இத்தகைய புவியியல் விந்தைகள் ஒருபுறம் இருக்க, இன்றைய ஜனவரி 26-ஆம் நாளுக்கு இன்னொரு வரலாற்றுச் சுவடு உண்டு. கடைசி இந்துப் பேரரசு முஸ்லிம் சுல்தான்களின் கூட்டுப் படையிடம் தோற்று சரிந்த நாள் ஜனவரி 26.

இந்தியா என்ற நாட்டை ஆங்கிலேயர்கள் கட்டமைக்கும்முன், மொகலாய சாம்ராஜியம் அந்த மண்ணில் பரந்து விரிந்திருந்தது.

இதில் விஜய நகர பேரரசுக்கும் தக்காண பீடபூமி சுல்தான்களுக்கும் நடந்த போரை முக்கியமானப் புள்ளியாக வரலாற்று அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். காரணம், அந்தப் போரில்தான் கடைசி இந்தப் பேரரசாக விளங்கிய விஜய நகரப் பேரரசு வீழ்ந்தது.

அதற்குப் பின்னர்தான், இந்தியா முழுவதும் மொகலாய சாம்ராஜியம் ஏகமாக விரிவடைந்தது. அந்தப்போர் முடிவுக்கு வந்த நாள், 1565ஆம் ஆண்டில் இதே ஜனவரி 26-இல்.

**நக்கீரன்** - Nakkeeran
013-244 36 24


## இருபத்தாறாம் ஆண்டில் வெற்றிகரமாக கால் பதிக்கும் கனடா உதயனின் 'இலங்கைச் சிறப்பிதழ்'

நூற்றுக்கு மேற்பட்ட பக்கங்களில் பெருமளவு தாயகப் படைப்பாளிகளின் எழுத்துக்களை தாங்கி 2022, ஏப்ரல் மாதம் 8ம் திகதி வெள்ளிக்கிழமை கனடாவில் வெளியாகின்றது.

கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள், நர்காணல்கள், விமர்சனங்கள் ஆகிய படைப்புக்கள் 2022 மார்ச் மாதம் 14ம் திகதிக்கு முன்னர் எதிர்பார்க்கப்படுகின்றன.

படைப்புக்களை தபால் மூலமாகவோ
அன்றி மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பலாம்.
சிறிய படைப்புக்களை (416) 732-1608 என்னும்
WhatsApp இலக்கத்திற்கும் அனுப்பலாம்.

இலங்கைச் சிறப்பிதழில் பிரசுரமாகும் படைப்புக்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெறும் சிலவற்றுக்கு சன்மானமும் சிறப்பிதழின் பிரதியொன்றும் அனுப்பிவைக்கப்பெறும்

தபால் முகவரி: Managing Editor
Uthayan Publishers
4062 Ellesmere Road
Scarborough, Ontario
CANADA. M1C 1J2

மின்னஞ்சல் முகவரி: uthayannews@yahoo.com


*(சென்ற வார தொடர்ச்சி)* *(அத்தியாயம் 41)*

# கல்கியின் பொன்னியின் செல்வன்

## வந்தியத்தேவனின் மீண்டும் ஓர் கடம்பூர் பயணம்

அதற்கு வந்தியத்தேவன், 'இது என்ன வீண் பேச்சு சோழ சாம்ராஜ்ஜியத்தின் இருபது லட்சம் வீராதி வீரர்கள் கொண்ட மகா சேனையை இரவு நேரத்தில் வெளிப்பட்டு வரும் இந்த பத்து நரிகளைப் போன்ற உம் ஆட்களாலா இந்த மகத்தான காரியத்தை செய்யத் துணிந்தீர்?' என்றான். அதற்கு நந்தினி, 'இல்லை இதோ இந்த வாள் ஒன்றே போதும் எனக்கு நீர் உதவி செய்ய மாட்டீர் எந்த உண்மைகளையும் வெளிப்படுத்தவும் மாட்டீர் என் எதிரியாகிய அந்தக் குந்தவை மட்டும் தான் உமக்குப் பெரிய தெய்வம். நீர் அந்தக் கரிகாலனை கடம்பூர் வராது தடுத்து விட உம்மால் முடியும் என்று நினைக்கிறீரே அது சாத்தியமா?' என்று கேட்க வந்தியத்தேவன், 'தேவி நான் தடுக்க முயல்வேன்' என்றான். 'நீர் உண்மை தெரியாது இவ்வாறு பேசுகிறீர் நிறுத்தும் உன் பேச்சை' என்று கோபங் கொண்ட நந்தினி தனது ஆட்களை அழைத்தாள். 'இவனால் எனக்கு பல காரியங்கள் ஆக இருக்கிறது நான் புறப்படுகிறேன் நீங்களும் புறப்படுங்கள் இவனை யாரும் தடை செய்ய வேண்டாம் அவன் வந்த வழியே போகட்டும்' என்றபடி பல்லக்கில் ஏறிப் புறப்பட்டாள். மந்திரவாதியும் அவன் ஆட்களும் சிறுவனை அழைத்துக் கொண்டு வந்தியத்தேவனைக் கட்டிப் போட்டு விட்டு சென்றார்கள். வந்தியத்தேவன் தன் கட்டுக்களை அவிழ்க்க முயன்று கொண்டிருந்தான். அப்பொழுது காலாமுகன் ஒருவன் வருதைக் கண்டான் ஐயோ என் உயிர் போகப் போகிறது என்றபடி கட்டுக்களை அவசரமாக அவிழ்த்தான். அந்தக் காலாமுகனும் வந்தியத்தேவனை நோக்கினான். கட்டுக்களை அவிழ்த்த வந்தியத்தேவன் அவன் மீது பாய்ந்து அவன் தாடியை இழுத்தான். அவன் கண்டதோ ஆழ்வார்க்கடியான் முகம் இருவரும் அணைத்துக் கொண்ட பின்னர் ஆழ்வார்க்கடியான் வந்தியத்தேவனை நோக்கி, 'நான் உன்னை எந்தக்காரியத்திலும் தலையிடாதே என்று சொன்னேன். ஆனால் நீ கேட்பதாக இல்லை எப்பொழுதும் அபாயத்தில் மாட்டிக் கொள்கிறீர்' என்றான். அதற்கு 'நான் மாட்டிக் கொள்ளவில்லை' என்றபடி நடந்தவை யாவற்றையும் கூறினான் வந்தியத்தேவன். அதற்கு ஆழ்வார்க்கடியான், 'நான் இன்று நடந்த காலாமுகர் மகா சங்கத்திற்குப் போனேன் அங்கு பழுவேட்டரையரும் வந்திருந்தார் யாரையோ எதிர்பார்த்துக் காத்திருந்தார்கள் ஆனால் அவர் வரவில்லை அது மதுராந்தகர் என்று நினைக்கிறேன் நீர் சொன்னபடி குதிரை வெகுண்டு ஓடியதால் அவர் எங்கே விழுந்து கிடக்கிறார் என்று தெரியவில்லை நான் இந்த மகாசங்கத்திற்கு போவதற்காக இந்த வேடம் போட்டேன் வரும் வழியில் மந்திரவாதியும் அவன் ஆட்களும் போவதைக் கண்டு சந்தேகத்தில் இங்கு வந்தேன். நான் வராவிட்டால் உன் கதி கஸ்ரந்தான் இது ஒரு அடர்ந்த காடு. இங்கிருந்து வெளியில் போவது கடினம் விரைவாக வா போகலாம்' என்றான் ஆழ்வார்க்கடியான். வந்தியத்தேவன் 'நான் மதுராந்தகரைத் தேடிப் பார்த்துவிட்டு வருகிறேன்' என்றான். ஆழ்வார்க்கடியானோ 'நீ எதையும் பார்க்க வேண்டாம் உன் வேலையை மட்டும் பார் காஞ்சிக்குப் புறப்படு அன்பின் அநிருத்தர் யாவற்றையும் கண்காணிப்பபார்' என்றான். அதற்கு 'அவருக்கு எப்படி இது தெரியும்' என்றான் வந்தியத்தேவன். 'அவருக்குத் தெரியாமல் இந்த சோழ ராஜ் ஜியத்தில் எதுவும் நடக்காது வீர நாராயண புரத்தில் திருவிழாவின் போது பழுவூர் ராணி பல்லக்கில் போவதாக நீ நினைத்தாய் அதில் போவது மதுராந்தகர் என்று நான் தெரிந்து கொண்டேன் அதனால் தான் ஓலை கொடுத்து உன்னை அவரை எச்சரிக்கச் சொன்னேன் ஆனால் நீ மறுத்து விட்டாய் என்னைப் பெண் ஆசை பிடித்தவன் என்றாய். கடம்பூர் சூழ்ச்சி யாவும் அநிருத்தருக்குத் தெரியும். இன்று மதுராந்தகர் காலாமுகர் மகா சங்கத்திற்குப் போவது அவருக்குத் தெரியும். அதனால்தான் அவரைத் தடுக்க ஒருவனை அனுப்பினார். அவர் குதிரையை வெகுண்டு ஓட விட்டிருப்பார். அவரே மதுராந்தகரைக் காப்பாற்றுவார்' என்றார். 'அப்போ வானதியின் கதி என்ன?' என்று வந்தியத்தேவன் கேட்க 'வானதியை காலாமுகர் காவிக்கொண்டு சென்றதாக அந்தப் பெண்ணின் தோழி சொன்னாளே அதனால் நீ பயப்பட வேண்டாம் நாளை பார்க்கலாம்' என்றார் ஆழ்வார்க்கடியான். 'இது என்ன சொல்கிறீர்கள் காலாமுகன் இன்று இரவே அவளைப் பலி கொடுத்து விட்டால் நாளை பார்ப்பதில் என்ன பயன் எப்போதும் வருமுன் காப்போனாக இருக்க வேண்டும் இதை விட்டு விட்டு துன்பங்கள் வந்த பின் காப்பதில் பயனில்லை' என்றான் வந்தியத்தேவன். 'வானதி கொடும்பாளூர் பெண் என்று காலாமுகன் அறிந்தால் அவளுக்கு இராஜ உபசாரம் செய்வார்கள் ஏனென்றால் கொடும்பாளூர் வம்சம் காலாமுகனைச் சேர்ந்தவர்கள் நீ அவசரமாக காஞ்சி புறப்படு இளவரசர் கரிகாலர் காஞ்சியில் இருந்து புறப்பட்டு விட்டதாக அறிகிறேன்' என்றான் ஆழ்வார்க்கடியான். பின்னர் இருவரும் அங்கிருந்து புறப்பட்டனர். பல்லக்கில் நாகபட்டினம் போக உத்தேசித்துப் புறப்பட்ட வானதிக்கு என்ன ஆயிற்று குடந்தை சோதிடர் வீட்டில் இருந்து புறப்பட்ட வானதி தான் தன்னந்தனியாக போவதையிட்டு பயமும் கவலையும் கொண்டிருந்தாள். இருந்தும் தான் பொன்னியின் செல்வர் மீது கொண்ட அன்பை நினைத்து தன்னைத் தேற்றிக் கொண்டு அந்த ஓடக் காரப் பெண் கொண்ட தைரியம் எத்தகையது என்று எண்ணி தன்னைத் தைரியப்படுதியபடி இருந்தாள்.

அப்போது சில வீர சைவ காலாமுகர்கள் மரத்திற்குப் பின்னால் ஒழிந்திருப்பதைக் கண்டாள். அவள் அதைப் பற்றி கவலைப்படவில்லை ஏனெனில் தான் கொடும்பாளூர் அரண்மனையில் வளர்கையில் இவர்கள் தன் பெரிய தந்தையிடம் வந்து பேசி தமக்குத் தேவையான பொருட்களை பெற்று செல்வது வழக்கமாக இருந்தது. அவர்கள் பெரிய குருவையே என் பெரிய தந்தை சந்தித்தார் என்ற படி திரையை மூடினாள். திடீர் என்று அவர்கள் பல்லக்கின் அருகில் வந்து சூழ்ந்து கொண்டார்கள். அப்பொழுது வானதி 'நான் கொடும்பாளூர் வேளாளன் மகள் என்னைத் தொடாதீர்கள்' என்றாள். அவர்களோ, 'எமக்கு நீ யார் என்று தெரியும்' என்றபடி அவள் தோழியை மரத்தில் கட்டி துணியை வாயில் அடைத்தார்கள். பல்லக்கை சுமந்தவர்களை அடித்து விரட்டினார்கள். பின்னர் பல்லக்கை எடுத்துக் கொண்டு ஓடினார்கள். அவ்வேளை வானதி சத்தமிட, 'சத்தமிட்டால் உன்னை அத் தீயால் சுட்டுப் பொசுக்கி விடுவோம்' என்றார்கள். சிறிது தூரம் ஓடிச்சென்று பின் துர்க்கை அம்மன் கோயிலில் நிறுத்தி, அங்கு எரிந்த தீப் பந்தத்தை எடுத்து வந்து வானதியின் முன் உயர்திப் பிடித்தபடி 'பெண்ணே நீ யாரைச் சந்திக்க இரகசியமாய்ப் போகிறாய் யார் அவர் என்று சொல்லிவிடு' என்றனர். அதற்கு வானதி, 'நான் யாரை சந்திக்கப் புறப்பட்டேன் என்று ஏன் உமக்குச் சொல்ல வேண்டும் நீங்கள் யார்' என்றாள். அதைக் கேட்ட காலாமுகன் 'நீ சொல்ல வேண்டாம் நீ அருள்மொழிவர்மரைப் பார்க்கப் போகிறாய் என்பது எமக்குத் தெரியும் அவர் எங்கே இருக்கிறார் என்று சொல்' என்றார்கள். வானதியோ, 'நீங்கள் என்னைக் கொன்றாலும் நான் அவரைப் பற்றி ஒன்றும் சொல்ல மாட்டேன்' என்றாள். அதே வேளை ஒரு ஊர்வலம் அங்கு போவதைக் கண்டாள். யானைகள், குதிரைகள், காலாட் படைகள், பல்லக்குகள் என்று ஊர்வலத்தில் காணப்பட்டன. உடனே அவள் அத்திசையை நோக்கினாள். காலாமுகரிடம் 'இதோ அநிருத்தர் பெருமான் வருவது போல் இருக்கிறது நீங்கள் தப்பி ஓடிவிடுங்கள்' என்றாள். அவர்கள் கலகல என்று சிர்த்தபடி உன்னைக் கவர்ந்ததே அவர் கட்டளையின்படிதான் என்றார்கள். பின்னர் பல்லக்கை தரையில் வைத்தார்கள். வானதியோ தப்பி ஓட முடியாதபடி திக்குமுக்காடினாள் அன்பின் அநிருத்தரின் அறிவும் இராஜதந்திரமும் உலகம் அறிந்ததே. இவரிடமிருந்து எப்படித் தப்புவது சக்கரவர்த்தியிடம் செல்வாக்குக் கொண்டவர் இவரைப் பற்றி யாரும் வம்பு பேச மாட்டார்கள் இளைய பிராட்டி குந்தவை பெரும் மரியாதை வைத்திருக்கிறார் என்று எண்ணிய வானதி வருவது வரட்டும் என்ற தைரியத்துடன் நின்றாள்.




அப்பொழுது அநிருத்தர் அங்கு வந்தார். வானதியை நோக்கி 'இராஜாங்கத்திற்கு விரோதமாக சதி செய்த ஒருவனை அந்தரங்மாக பார்க்கும் நோக்குடன் நாகபட்டினத்திற்கு புறப்படவில்லையா' என்றார். அதற்கு வானதி, 'யாரை நான் பார்க்கப் போவதாக எண்ணி உம் மனிதர்களை என்னைத் தடுக்கும் படி செய்தீர்' என்று வினவினாள். அதற்கு முதல் மந்திரி 'தாயே இளவரசர் அருள்மொழிவர்மரை இரகசிய-மாக பார்க்கும் நோக்குடன் நீ நாக பட்டினம் போகின்றீர் அல்லவா? அவர் அங்கே எங்கே இருக்கிறார் இதைப் பற்றி உனக்கு எப்படித் தெரியும் என்ற விபரங்களைக் கூறி விட்டு நீ எங்கு போக வேண்டுமோ போகலாம்' என்றார். 'ஐயா இது என்ன வார்த்தை' என்று கோபத்துடன் கேட்டாள் வானதி மேலும் 'நீர் எப்படி இளவரசர் அருள்மொழிவர்மர் இராஜாங்கத்திற்கு விரோதமாக சதி செய்தார் என்று சொல்ல முடியும் சக்கரவர்த்தியின் அருள் குமாரரைப் பற்றி நீர் இவ்விதமாக பேசுவது குற்றம் அல்லவா இது சோழ குலத்திற்கு எதிரான சதி ஆகா இதைப்பற்றி உடனே குந்தவையிடம் சொல்லியாக வேண்டும்' என்றாள். அதற்கு அநிருத்தர் 'தாயே என் கேள்விக்கு பதில் கூறிவிடு பின் நானே உன்னை குந்தவையிடம் அனுப்பி வைக்கிறேன்' என்றார். வானதி 'ஐயா சர்வவல்லமையும் படைத்த முதல் மந்திரியாரே தாங்கள் இளவரசரைப் பற்றி எந்த விடயமும் என்னிடமிருந்து அறியமுடியாது நீங்கள் என்னை தீயிலிட்டு எரியுங்கள்' என்றாள். அதற்கு அநிருத்தர் 'கோமகளே பொன்னியின் செல்வர் இருக்ககுமிடத்தை சொல்கிறாயா அல்லது இராஜாங்கத்திற்கு துரோகமாக சதி செய்பவர்களுக்கு அளிக்க வேண்டிய கடும் தண்டனையை உனக்கு அளிக்கட்டுமா?' என்று கேட்டடார். அதற்கு வானதி 'தண்டனைக்கு தயாராக இருக்கிறேன்' என்றாள். அநிருத்தரும் கையினால் சமிக்ஞை செய்தார் யானை பூமி அதிரும்படி நடந்து வந்து வானதியின் அருகில் நின்றது அவளின் தேகத்தை சுற்றி வளைத்தது வானதி தன் தைரியத்தை நினைத்துப் பெருமை கொண்டாள் 'நான் உயிர் விடப் போகிறேன் குந்தவையும் வந்தியத்தேவனும் பொன்னியின் செல்வர் நாகபட்டினத்தில் இருக்கிறார் என்று பேசிக் கொண்டது என் காதில் கேட்டது அந்த இரகசியத்தை நான் யாரிடமும் சொல்லவில்லை அநிருத்தர் என்னை எப்படி மிரட்டிப் பார்த்தார் அவரால் முடியவில்லை. பொன்னியின் செல்வரை நான் காட்டிக் கொடுக்கவில்லை என் உயிர் போகட்டும்' என்று நினைத்தபடி மயக்கம் கொண்டாள். வானதியைத் தூக்கிய யானை அவளை குந்தவையின் மடியில் விட்டுவிட்டது. குந்தவையும் வானதியை அணைத்தபடி பயணத்தைத் தொடர்ந்தாள். சிறிது நேரத்தின் பின் மயங்கி இருந்த வானதி கண் விழித்துப் பார்த்து விட்டு 'அக்கா நீங்களா நான் கனவு காண்கிறேனா அல்லது இது உண்மையா?' என்றாள். வானதி நாங்கள் இப்பொழுது யானை மேல் அம்மாரியில் ஏறி ஆனை மங்கலம் போகிறோம் என்று கூறினாள் குந்தவை. வானதி யானை என்றவுடன் நடுக்கத்துடன் 'நான் இத்தனை நேரமும் தூங்கிக் கொண்டிருந்தேனா? ஆனை மங்கலம் எங்கே இருக்கிறது அங்கு எதற்காகப் போகிறோம்' என்றாள் வானதி. 'அது நாகபட்டினத்திற்கு அருகில் உள்ளது அங்கு சென்று பொன்னியின் செல்வரை தேடுவதற்காக ஏற்பாடு செய்யப் போகிறேன்' என்றாள் குந்தவை. வானதியின் உள்ளம் ஒரே குழப்பமாக இருந்தது. 'நான் எவ்வாறு யானையின் அம்மாரியில் வந்தேன்? யானை தன் துதிக் கையால் தூக்கியது அப்பொழுது அந்த ஊர்வலத்தில் வந்த யானையில் அக்கா இருந்திருக்க வேண்டும். அநிருத்தர் அக்காவைக் கண்டு நடுங்கியிருப்பார் அதனால் அக்காவிடமே என்னை விட்டுவிட்டுவிட்டார் போல்' என்று எண்ணிக் கொண்டாள். ஆனால் நிகழ்ந்தது அதுவல்ல. யானை வானதியை தும்பிக் கையினால் தூக்கி எடுத்து அம்பாரியின் மேல் அருகில் இலேசாக வைத்தது. அங்கு அம்பாரியின் மேல் இருந்த குந்தவை அவளை வாரி அணைத்துக் கொண்டாள். பின்னர் முதல் மந்திரி அநிருத்தர், 'வருகிறேன் தாயே உனது பிரயாணம் இனிதாக இருக்கட்டும்' என்று விடை கொண்டார். அதற்கு குந்தவை 'ஐயா மிக்க நன்றி' என்றாள். அநிருத்தர் 'கொடும்பாளூர் கோமகளை கோழை என்று நினைத்தோம் அவள் பெரிய நெஞ்சழுத்தக்காரப் பெண் இவளைப் போல் நான் எங்கும் யாரையும் பார்த்ததே இல்லை என்று கூறினார். பின்னர் அவர் பல்லக்கு மேற்கு திசை நோக்கிப் புறப்பட்டது போகும் வழியில் ஒரு மரத்தடியில் மனிதன் ஒருவன் கிடப்பது கண்டு பல்லக்கு நின்றது. செய்தி அறிந்த முதல் மந்திரி இறங்கி அங்கே சென்று யார் அது என்று கேட்டார் அதற்கு தாங்கள் முதல் மந்திரி போலிருக்கிறதே' என்று அந்தக் குரல் கேட்டுது. 'முதல் மந்திரிதான் கிடப்பது யார்?' என்றார் முதல் மந்திரி. 'நான் தான் மதுராந்தகன்' என்றது அந்தக் குரல். உடனே அநிருத்தர் 'இளவரசே இது என்ன கோலம் எப்படி நீர் இங்கே வந்தீர் என்ன நேர்ந்தது' என்ற பரபரப்புடன் கேட்டபடி அவரைத் தூக்கி நிறுத்தினார். அப்பொழுது மதுராந்தகரால் நிற்க முடியாது அலறினார். உடனே பல்லக்கில் அவரை ஏற்றி தானும் பல்லக்கின் அருகில் நடந்து தனது மாளிகைக்குச் சென்றார். அங்கு அவரை கட்டிலில் படுக்க வைத்து மருத்துவம் பார்த்தார் அதன் பின் மதுராந்தகரும் அமைதி கண்டார். 'படுத்து உறங்குங்கள் நான் வருகிறேன்' என்றார் அநிருத்தர். அதற்கு மதுராந்தகர் 'தாங்கள் எனக்கு எவ்வளவோ தீங்கு செய்தீர்கள் அதற்கு இன்று பரிகாரம் செய்து விட்டீர்கள் உங்கள் நன்றியை என்றும் மறக்க மாட்டேன் சோழ சிங்காசனத்தில் நான் முடி சூடினால் தங்களையே முதல் மந்திரியாக வைத்துக் கொள்வேன்' என்றார். இதைக் கேட்ட அநிருத்தர் 'சோழ குலத்திற்கு ஆலோசனை செய்வதும் உதவி செய்வதும் என் கடமை தங்களுக்கு நான் எந்தத் தீங்கும் செய்யவில்லை தெரிந்தால் அதற்குப் பிராயச்சித்தம் செய்கிறேன்' என்றார். அதற்கு மதுராந்தகர் 'நீங்கள் எனக்குச் செய்த தீங்கு மிகக் கொடூரமானது இருந்தும் அதை நான் மறந்துவிடுகிறேன் அல்லது உமக்கு பிரதி உபகாரம் செய்ய வேண்டும்' என்றார். 'அதைச் செய்ய விரும்புகிறேன்' என்றார் அநிருத்தர். அத்துடன் 'இளவரசே தாங்கள் குதிரையில் ஏறி தனி வழியே செல்ல வேண்டாம் முன்னும் பின்னும் பரிவராரங்கள் சூழ ரதத்தில் பிரயாணம் செய்யுங்கள் அல்லது பல்லக்கில் பிரயாணம் செய்யுங்கள் அதுவும் கடம்பூர் மாளிகைக்கு ஆடி மாதம் பதினெட்டாம் பெருக்கன்று நந்தினியின் மூடு பல்லக்கில் பெரிய பழுவேட்டரையருடன் போயிருந்தீர்கள் சம்புவரையர் மா-ளிகையில் அர்த்த ராத்திரியில் திருடன் கூட்டத்தைப் போல் கூட்டம் போட்டு சதி யோசனை நடத்தினீர்கள். பின்னர் மூடு பல்லக்கில் திரும்பி வந்தீர்கள் இப்பொழுது பொன்னியின் செல்வர் கடலில் மூழ்கிய செய்தி கேட்டு மக்கள் கலக்கம் அடைந்துள்ளார்கள். அதனால் நந்தினியின் மூடு பல்லக்கு உங்களுக்கு நல்லது என்றே தோன்றுகிறது' என்றார். இதைக் கேட்ட மதுராந்தகர் பீதி கொண்டு 'ஐயா தாங்கள் எப்படி இவற்றைத் தெரிந்து கொண்டீர்கள் சக்கரவர்த்திக்கும் இது தெரியுமா தங்கள் நெஞ்சில் பெரிய இரகசியங்கள் புதைந்து கிடக்கின்றதா? அவற்றை வெளிக் கொணர்ந்தால் சோழ ராஜ்ஜியம் நடு நடுங்கி விடும்' என்றார் மதுராந்தகர். 'இளவரசே சக்கரவர்த்திக்கு தங்கள் சதி எதுவும் தெரியாது நானும் சொல்லப் போவதில்லை சுந்தர சோழரின் புதல்வர்கள் போலவே உங்களையும் நேசிக்கிறேன். சோழ சிங்காசனம் ஏறுவதற்கு தங்களுக்கு பூரண உரிமை உண்டு தங்கள் பெற்றோர்கள் விருப்பம் ஒரு விதம் தாங்கள் அவர்கள் விரும்பியபடி சிவ பக்தனாக இருந்து தற்போது மனம் மாறி விட்டீர்கள் தங்கள் விருப்பத்தை உரிமையை பகிரங்கமாகக் கோரலாம்.

*(தொடரும்...)*

---

Jenita.Jaffna@gmail.com
தொகுப்பு, எழுத்தாக்கம்: மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை
மாதினி நிமலன

---

# அன்பின் தொனி - 639

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**பரிசுத்தராய் இருங்கள் - Be Holy**

**பரிசுத்தம் அடைவதற்கான வழி**
**மனந்திரும்புதல்**

மனிதன் தேவனண்டை கிட்டிச்சேர பரிசுத்தம வேண்டும் என்பதையும், அந்த பரிசுத்தத்தை ஆண்டவராகிய இயேசு மூலமாகவே அடைய முடியும் என்பதையும், அதற்கான சகல நியமங்களையும் இயேசுதாமே கல்வாரி சிலுவையிலே நமக்காக இரத்தம் சிந்தி மரித்ததின் மூலம் செய்து முடித்துவிட்டார் என்பதையும், வேத வசனங்களுக்கூடாக மேலே வாசித்த பகுதிகளிலிருந்து அறிந்து கற்றுக்கொண்டவர்கள் அந்தப் பரிசுத்தத்தை பெறுவதற்கான நடை முறைகளை மேலும் பரிசுத்த வேதாகமத்திறகூடாக தெரிந்து கொள்ள வேண்டும். ஆண்டவராகிய இசே கிறிஸ்துவுக்குள் தேவன் நமக்கு அருளும் இரட்சிப்பைப் பெற்றுக் கொள்வதற்கான முதற்படி, **மனந்திரும்புதல்**.

ஆகையால், நீங்கள் சிலுவையில் அறைந்த இந்த இயேசுவையே தேவன் ஆண்டவரும் கிறிஸ்துவுமாக்கினாரென்று இஸ்ரவேல் குடும்பத்தார் யாவரும் நிச்சயமாய் அறியக்கடவர்கள் என்றான். இதை அவர்கள் கேட்டபொழுது, இருதயத்திலே குத்தப்பட்டவர்களாகி, பேதுருவையும் மற்ற அப்போஸ்தலரையும் பார்த்து: சகோதரரே, நாங்கள் என்ன செய்யவேண்டும் என்றார்கள். பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக் கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்தஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். **- அப்போஸ்தலர் 2: 36-38**

அறியாமையுள்ள காலங்களைத் தேவன் காணாதவர்போலிருந்தார், இப்பொழுதோ மனந்திரும்பவேண்டுமென்று எங்கு முள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார். **- அப்போஸ்தலர் 17: 30**

நமது பாவத்தைக் குறித்த குற்ற உணர்வைப் பெறுவது, மனந்திரும்புதலுக்கு முன்னர் நிகழ்வதாகும், ஆனால் அது மனந்திரும்புதல் அல்ல. முதலில் தங்கள் பாவத்தைப் பற்றிய குற்ற உணர்வைப் பெறாமல் எவரும் மனந்திரும்ப முடியாது, அதேவேளை குற்ற உணர்வைப் பெறும் எல்லோருமே மனந்திரம்புவது கிடையாது. ஒரு சிலரே உண்மையில் மனந்திரும்புகிறார்கள். சிலர் தங்கள் பாவத்தின் பின்விளைவுகளைக் குறித்து அல்லது பாவத்தில் பிடிபட்டுவிட்டதைக் குறித்து வருத்தப்படுகிறார்களேயன்றி தாங்கள் செய்தது தவறு என்பதற்காக அல்ல. மேலும் பிடிபட்டதினால் கிடைக் கப்போகும் தண்டனையைக் குறித்தே வருத்தப்படுகிறார்கள்.

தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண் டாக்குகிறது, லௌகிக துக்கமோ மரணத்தை உண்டாக்குகிறது. **- 2 கொரிந்தியயயர் 7: 10**

அநேகர் நல்ல மனிதராக மாறுவதற்கும், தங்கள் வாழ்க்கை முறையை மாற்றிக் கொள்வதற்கும் தங்கள் சொந்த பலத்திலும், சுய முயற்சியிலும் தங்கியிருக்கிறார்கள். இந்த சுய முயற்சிக்கு அடிப்படைக் காரணம் சுயநீதியே, இந்தச் சுய நீதி பாவத்திலிருந்து மனந்திரும்ப வேண்டியதின் அவசியத்தை ஏற்றுக்கொள்வதில்லை.

நாங்கள் அனைவரும் தீட்டானவர்கள்போல இருக்கிறோம், எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தைபோல இருக்கிறது, நாங்கள் அனைவரும் இலைகளைப்போல் உதிருகிறோம், எங்கள் அக்கிரமங்கள் காற்றைப்போல் எங் களை அடித்துக்கொண்டுபோகிறது. **- ஏசாயா 64: 6**

பரிசுத்த வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள பரிசேயர்கள், தங்கள் நடத்தைகளிலும், செயற்பாடுகளிலும் சமய உணர் வுள்ளவர்களாக உபவாசம், ஜெபம், வழிபாட்டுச் சடங்குகள், பாரம்பரிய சம்பிரதாயங்கள் போன்றவற்றிற்கு முக்கியத்தவம் கொடுத்து நடந்தார்கள், ஆனால் மனந்திரும்பவில்லை. இன்றும் அநேகர் அப்படியே பாரம்பரிய பரம்பரை பளக்க வளக்கங்களுக்கு முதலிடம் கொடுத்து நடப்பதை நாம் காணலாம். சத்தியத்தை அறிந்தும் அதன்படி நடக்க அவர்களுடைய சம்பிரதாய வழிபாடு இடம் கொடுப்பதில்லை. பரிசேயரிலும் சதுசேயரிலும் அநேகர் தன்னிடத்தில் ஞானஸ்நானம் பெறும்படி வருகிறதை அவன் கண்டு: விரியன் பாம்புக் குட்டிகளே! வருங்கோபத்துக்குத் தப்பித்துக்கொள்ள உங்களுக்கு வகைகாட்டினவன் யார்? மனந்திரும்புதலுக்கு ஏற்ற கனிகளைக் கொடுங்கள். **- மத்தேயு 3: 7-8**

வேதபாரகர் பரிசேயர் என்பவர்களுடைய நீதியிலும் உங்கள் நீதி அதிகமாயிராவிட்டால், பரலோகராஜ்யத்தில் பிரவேசிக் கமாட்டீர்கள் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். **- மத்தேயு 5: 20**

**மெய்யான மனந்திரும்புதல்**


மெய்யான மந்திரும்புதல் என்பது ஒருவர் தன் பாவத்தைக குறித்து தனக்குள்தானே மனம் வருந்துவதோ, அல்லது மற்றவரிடம் அதைப் பகிர்ந்து வருத்தப்படுவதோ அல்ல, முதலாவதாகவும் முக்கியமாகவும் செய்யவேண்டியது, தேவனை நோக்கி ஆழமான இருதயத்திலிருந்து முழு மனஸ்தாபத்தோடு மெய்யான வருத்தத்தை தெரிவிப்பதாகும். அத்தோடு பாவத்தை வெறுத்து, பாவத்திலிருந்து திரும்பி, சத்தியத்தின்படி நடக்க தீர்மானம் எடுக்கவேண்டும்.

தேவனே, உமது கிருபையின்படி எனக்கு இரங்கும், உமது மிகுந்த இரக்கங்களின்படி என் மீறுதல்கள் நீங்க என்னைச் சுத்திகரியும். என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவி, என் பாவமற என்னைச் சுத்திகரியும். என் மீறுதல் களை நான் அறிந்திருக்கிறேன், என் பாவம் எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது. தேவரீர் ஒருவருக்கே விரோத மாக நான் பாவஞ்செய்து, உமது கண்களுக்கு முன்பாகப் பொல்லாங்கானதை நடப்பித்தேன், நீர் பேசும்போது உம்முடைய நீதி விளங்கவும், நீர் நியாயந்தீர்க்கும்போது உம்முடைய பரிசுத்தம் விளங்கவும் இதை அறிக்கையிடுகிறேன். **- சங்கீதம் 51: 1-4**

நான் என் அக்கிரமத்தை மறைக்காமல், என் பாவத்தை உமக்கு அறிவித்தேன், என் மீறுதல்களைக் கர்த்தருக்கு அறிக்கையிடுவேன் என்றேன், தேவரீர் என் பாவத்தின் தோஷத்தை மன்னித்தீர். **- சங்கீதம் 32: 5**

தொடரும்...

# பணியிடங்களில் பெண்கள் கடைப்பிடிக்க வேண்டிய விடயங்கள்



**த**ற்போது பெண்கள் அணைத்து துறைகளிலும் தங்களது சாதனைகளை நிலை நிறுத்தி வருகின்றனர்.

இருப்பினும் அவர்கள் இன்றும் பல பிரச்சனைகளுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். அவ்வாறான பிரச்சனைகளால் அவர்களின் முன்னேற்றம் பாதிக்கப்படுகின்றது. அவ்வாறான தடைகளை எதிர்கொண்டு முன்னேற சில வழி முறைகளை பார்க்கலாம்.

**சுய முயற்சி**

வேலைத்தளங்களில் பெண்கள் தங்களுடைய வேலைகளை தாமே செய்து முடிப்பதற்கான சிறந்த முயற்சி மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு செயற்படும் போது அவர்கள் யாரிடமும் சென்று உதவி கோரவும் அனுமதி கோரவும் அவசியம் இருக்காது. இதனால் மற்றவர்களின் தலையீடு மற்றும் தொல்லைகளிலிருந்து விலகியே இருக்கலாம்.

**பயிற்சி மற்றும் கல்வி**

கல்வி என்பது எந்த நிலையிலும் அழிக்கமுடியாத ஒன்று. புரி- யும் வேலை தொடர்பான அறிவு மற்றும் கல்வியை வளர்த்துக்கொண்டால் அந்த தொழிலில் மற்றவர்களை விட அதிகமாக முன்னேற்றமடையலாம். அதுமட்டுல்லாது தொழிலில் அறிவு பெறுக பெறுக எமது சுய நம்பிக்கையும் அதிகரிக்கும்.

**வாய்ப்பினை பயன்படுத்திக்கொள்ளல்**

வாய்ப்பு என்பது எமக்கு அரிதாக கிடைக்க கூடிய ஒன்று அது எம்மை நாடி வரும் போது நழுவ விட கூடாது. பெரும்பாலும் பெண்கள் தங்களுக்கான வாய்ப்புகளை குடும்பம், கலாச்சாரம் மற்றும் பயம் என பல காரணங்களால் இழந்து விடுவர் இதெல்லாம் ஒரு புறம் இருந்தாலும் அவற்றையெல்லாம் சமாளித்துக்கொண்டு கிடைக்கும் வாய்ப்பினையும் சிறப்பாக பயன்படுத்தும் திறமையை எல்லா பெண்களும் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

**தன்னம்பிக்கை**

பெண்களுக்கு தன்னம்பிக்கை என்பது மிகவும் அவசியமான ஒன்று. அது வேலைத்தளத்தில் மட்டுமல்லாமல் எல்லா இடங்களிலும் பெண்களுக்கு இருக்க வேண்டிய சிறப்பு அம்சம். காரணம் தன்னம்பிக்கையுடன் செயற்படும் ஒரு பெண்ணால் எந்த வேலையையும் துணிந்து செய்து முடிக்க முடியும். தன்னால் எந்த வேலையும் இலகுவாகவும் திறமையாகவும் செய்து முடிக்க முடியும் என்ற எண்ணம் ஒரு பெண்ணிடம் இருந்தால் அந்த பெண் அந்த வேலைத்தளத்தில் தனித்து விளங்குவாள்.

**கட்டுப்பாடுடன் நட்புறவுகள்**

பெண்கள் சமூகத்தில் தனக்கென ஒரு நட்பு வட்டாரத்தை உருவாக்க வேண்டும் இது பெண்களை தனிமை படுத்தலிலிருந்து விளக்கி வைப்பதுடன் வேலைத்தளங்களில் சில பாதுகாப்பையும் அளிக்கும். இருப்பினும் அவ்வாறான நட்பு சிறந்த கட்டுப்பாட்டுடனும் ஒழுக்கத்துடனும் காணப்பட வேண்டும். அப்படி இருந்தால் பணியிடங்களில் எந்த ஒரு கெட்ட எண்ணமும் எமது மீது மற்றவர்களுக்கு ஏட்படாது. இது எம்மை எந்த தடங்களுமின்றி முன்னேற வழி வகுக்கும்.

**முன் வரவேண்டும்**

பணிப்புரியும் இடத்தில் பெண்கள் தங்களுடைய கருத்துக்களை சொல்லவோ அல்லது பொறுப்புக்களை ஏற்கவோ முன் வரவேண்டும். வேலை தொடர்பான சகல விடயங்களிலும் ஆர்வத்தோடு இருக்க வேண்டும். வேலைத்தளத்தில் கூச்சமின்றி நாம் வெளிக்காட்டும் ஆர்வமானது எம்மீது எப்போதும் உயரதிகாரிகளின் மற்றும் உடன் பணிபுரிபவர்களின் கவனத்தை ஈர்க்கும். எம்முன்னேற்றத்திற்கு இது பெரும் உதவியாக இருக்கும்.

**வேலை தொடர்பான கவனம்**

பெண்கள் தங்களுடைய குடும்பம் பற்றி அதிகமாக யோசிப்பர். பணிக்கு வந்த பின்னும் நினைவுகள் எப்போதும் வீட்டின் மீதே இருக்கும். இது தவறான விடயமில்லை. ஆயினும் இந்த பழக்கம் பெண்களின் தொழிலுக்கு ஒரு முட்டுக்கட்டையாக அமைந்து விட கூடாது என்பது முக்கியமானது. எந்த அளவு குடும்பம் மீது அக்கறை உள்ளதோ அதே அளவு நாம் புரியும் பண- யிலும் இருக்க வேண்டும். அந்த அக்கறை கண்டிப்பாக எமது தொழிலை முன்னேற்ற பாதைக்கு கொண்டு செல்லும்.

**தனிமை படுத்தலின் பாதிப்பிலிருந்து விலகுதல்**

பொதுவாக பெண்கள் வேலை இடங்களில் முகங்கொடுக்கும் முக்கியமான பிரச்சனை இதுவாகும். மற்றவர்களிடமிருந்து நாம் தனிமை படும் போது உடைந்து விட கூடாது. நாம் அவ்வாறான சந்தர்ப்பங்களில் மிகவும் மன வலிமையுடன் இருக்க வேண்டும். எமது வேலைகளை நாம் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும். காலப்போக்கில் இது போன்ற பிரச்சனைகள் மறைந்து விடும். பணியிடங்களில் தனிமை என்பது நிரந்தரமல்ல, இதற்காக எமது வேலையின் மீதான ஆர்வத்தை குறைத்து விட கூடாது.

பணியிடங்களில் பெண்கள் தனக்கென சிறந்த பாதையை அமைத்துக்கொண்டால் வெற்றியை நோக்கி சிறப்பாக பயணிக்கலாம்.

**- இரா.சஹானா**

மலேசிய மடல்

# கோலாலம்பூரில் நேதாஜியின் 125-ஆவது பிறந்த நாள் விழா



நக்கீரன்

**கோ**லாலம்பூர், ஜன.24:

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் 125-ஆவது பிறந்த நாள் விழா, அவர் பிறந்த நாளான ஜனவரி 23-இல் கோலாலம்பூரில் நடைபெற்றது.



இந்திய விடுதலைக்காக பிரிட்டிஷ் படையை எதிர்த்துப் போராடியவர் நேதாஜி சுபாஷ் சந்திர போஸ். இந்திய தேசிய இராணுவத்தைக் கட்டமைத்தவரும் அவர்தான். நேதாஜி, தன்னுடைய அரசியல் நகர்வுக்காகவும் இராணுவ நடவடிக்கைக்காகவும் மையமாகக் கொண்ட இடம் அன்றையா மலாயர் இன்றைய மலேசியா.

இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன் நாடு கடந்த இந்திய அரசாங்கத்தை நிறுவி, ஆண்டதும் சிங்கப்பூர் இணைந்திருந்த மலாயாவில்தான். மலாயாத் தமிழர்கள் இல்லையென்றால் இந்திய தேசிய இராணுவப் படையை நேதாஜியால் முறையாகக் கட்டமைத்திருக்க முடியாது. அதற்கேற்ப, நேதாஜியும் தமிழரின்பால் அன்பும் மரியாதையும் வைத்திருந்தார்.



மலேசியாவிற்கான இந்திய தூதரகத்தின் ஏற்பாட்டில் நேதாஜியின் 125-ஆவது பிறந்த நாள் விழா நடைபெற்றது.

கோலாலம்பூர், டான்ஸ்ரீ கே.ஆர். சோமா மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் தொடக்க விழாவிற்குப் பின், மஇகா தலைவர் டான்ஸ்ரீ எஸ்.ஏ. விக்னேஸ்வரனும் இந்தியத் தூதர் பி.என். ரெட்டியும் செய்தியாளர்களுக்குப் பேட்டி அளித்தனர்.

இராணுவத்தை உருவாக்கி ஆயுதமேந்தி போராடிய சுபாஷ், திவிரவாத நடவடிக்கையில் ஈடுபடவில்லை. ஒரு தேசத்தின் விடுதலைக்காகவே மரபுவழி இராணுவப்போராட்டத்தை அவர் முன்னெடுத்தார்.

அப்படிப்பட்டவரை இன்றைய இளம் தலைமுறையினருக்குத் தெரியவில்லை. தமிழ்ப் பள்ளி பாட நூல்களில் நேதாஜி பற்றிய பாடத்தை இடம்பெறச் செய்ய வேண்டும். இது குறித்து, மஇகா முனைப்பு காட்டும் என்று சொன்ன விக்னேஸ்வரன், மஇகா தேசிய தலைமையக மண்டபம் நேதஜியின் பெயரில்தான் இருக்கிறது என்று பெருமையாக சொன்னார்.



மஇகாவிற்காக புதிய கட்டடம் எழுப்பப்படும்பொழுது, அங்கு நேதாஜியின் சிலை இடம்பெறும் என்றும் சொன்னார்.

தொடர்ந்து, பி.என். ரெட்டி செய்தியாளர்களிடம் பேசுகையில் நேதாஜியின் பெருமையைப் போற்றும் மலேசிய இந்தியர்களுக்கு தூதரகத்தின் சார்பில் நன்றியையும் பாராட்டையும் தெரிவிப்பதாக சொன்னார்.

தேசிய நில நிதி கூட்டுறவு சங்கத் தலைவரும் மலாயா இந்திய தேசிய இராணுவத்தில் லெப்டினண்ட் தகுதிக்கு உயர்ந்தவருமான டான்ஸ்ரீ கே.ஆர். சோமசுந்தரம், நேதாஜி சமூக நல இயக்கத் தலைவர் எஸ்.இராதாகிருஷ்ணன் உட்பட பலரும் கலந்து கொண்ட இந்த நிகழ்ச்சியில் நேதாஜியின் மகள்வழி பெயரன் சந்திர குமார் போஸ் கல்கத்தாவில் இருந்து காணொளிவழி பேசினார்.



நேதாஜியின் பெருமைகளை அவர் எடுத்துரைத்தார். அதைப் போல ஐ.என்.ஏ.வில் இணைந்திருந்த பூச்சோங்கைச் சேர்ந்த லெப்டினண்ட் சுந்தரம் உட்பட பலரும் நேதாஜியின் பெருமை குறித்து பேசினர். கோலாலம்பூர் இந்திய தூதரகத்தின் கிளை அமைப்பான இந்திய கலாச்சார மையம் (ICC) நேதாஜி மையம் என்ற பெயரில் அழைக்கப்படுகிறது.

ஐசிசி ஒருங்கிணைப்பில் செம்மையாக நண்பகல் வரை நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் நேதாஜி சமூக நல இயக்கத்தின் சார்பில் மாணவர்களுக்கு கல்வி நலம்சார்ந்த உதவி செய்யப்பட்டது. ஐசிசி - பொது



உறவு அதிகாரியும் ஊடகப் பொறுப்பாளருமான ஹரி நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு பணியை மேற்கொண்டார்.

**நக்கீரன் -** Nakkeeran
013-244 36 24

# கடந்தவையும் கடப்பவையும் (20)

**- உமா மோகன் -**

உரும்பிராய் திரும்பும் முன் பார்க்கலாம்
பரந்த பெரு வீதி உள்ள ஆலயம் - அதையும்

திரும்பிப் பார்த்து வணங்கிவிட்டு - பின்
கிளம்புகின்றோம் பெரும் ஊக்கத்தோடு

வீதியின் மருங்குகளில் ஆங்காங்கு மரங்கள்
சோலை தரும் நோக்கோடு நிற்கின்றன - எனினும்

அவ்வூர்ப் பெயருக்குள்ள பொலிவில் அவை இருக்கவில்லை
முன்னோர், வழிப்போக்கர் நலன் கருதி

தெருவோரம் வைத்தனராம் பராய் மரங்கள்
'பெருஞ்சூலி மரம்' என்ற பெயர் கொண்டு - அது

பெருவுருக் கொண்டு வளர்வதனால்
'உரு' என்ற அடைகொண்டு 'உரும்பராய்' ஆகி - பின்

உரும்பிராய் ஆகிப் ஊருக்கும் ஆகியதாம்
இதுமட்டும் காரணமாய்க் கூறவில்லை

தமிழ் எண்ணின் சிறப்பாலும் வந்துவாம், அன்று
மரங்களுக்கு எண்கள் பொறித்தனராம் தமிழில்

உரும்பிராய் இடத்தில் உள்ள மரத்தின் எண்
இருபத்தைந்தாக இருந்ததனால்

இப்படி எழுதினராம் ,

இரண்டிற்கு - உ (2-உ)
ஐந்திற்கு - ரு (5-ரு)

அதனாற் பிறந்ததாம் உரு (25)
அதனோடு இணைந்ததாம் பராய் மரம் (25 பராய்)
இதுவே உரும்பராய் மருவி உரும்பிராய் ஆனதாம்

பெருமளவு தமிழ் எழுத்து எண்கட்குப்
பரிட்சையமான மக்கள் வாழ்ந்த காலம் போலும்

இக்கால மக்களுக்கு அப்பகுதி பெரும்பாலும்
தெரியாது
கற்ற தமிழ் வல்லோருக்கு இங்கு இது விதிவிலக்கு

உற்ற தமிழ் எண்கள் போலவே
வைத்த பெரு மரங்களும் அதிகளவில் அங்கில்லை

மாலைபோட்டு வரவேற்ற மக்களை
சாரைசாரையாய் சாயவைத்தவர்க்கு - அப்

பராய் மரங்களைஅழிப்பதென்ன கடினமா? - என்று
கேட்டவாறு தொடருவோம் அடுத்த ஊரை நோக்கி...

(தொடரும்)

# இவ்வார ராசிபலன்

## 28-01-2022 வெள்ளி தொடக்கம் 03-02-2022 வியாழன் வரையும்




**மேஷம்:** உறவுகளால் பெருமை சேரும் வாரம். செல்வாக்கு பெருகும். தொழில் உற்பத்தி அதிகரிக்கும். இனிதான காரியம் நடைபெறும். குடும்ப மகிழ்ச்சி இரு மடங்காகும். நிம்மதியான குடும்ப வாழ்க்கை அமையும். சகோதரியால் லாபம் உண்டு. மனைவியால் மகிழ்ச்சி உண்டு. உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். ஒத்துழைப்பு கிடைக்கும். குதூகலம் அதிகரிக்கும். ஒப்பற்ற பலன் சேர்க்கும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. கடன் சுமை தீரும். மன அமைதி கூடும். செயல்களில் கவனம் தேவை. நிர்வாகத் திறமை கூடும். தன்னம்பிக்கை கூடும். வீடு, மனை யோகம் உண்டு. அரசாங்க அனுகூலம் உண்டு. இனிய எண்ணம் உதயமாகும். அந்தஸ்து அதிகமாகும். வாழ்க்கை வசதி பெருகும். ஆண்களுக்கு ஆதாயம் உண்டு. மாணவர்கள் திறமை பளிச்சிடும். நினைத்தக் காரியங்கள் நிறைவேறும். புதிய முயற்சி பலன் தரும். ஆசைகள் கைகூடும். வேண்டாத செயல்களில் ஈடுபடுதல் தவிர்க்கவும். தொல்லைகள் விலகும். அமைதியாக இருப்பது நல்லது. அதிருப்தி அதிகரிக்கும். உடல் உபாதைகள் ஏற்படும். புதிய நட்பை தவிர்க்கவும். பணியில் நிம்மதி குறையும். திடீர் செலவு உண்டாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: அம்பிகை, அதிர்ஷ்ட எண்: 1,3,5,7
அதிர்ஷ்ட நிறம்: பொன் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,I




**ரிஷபம்:** விரும்பிய பொருள் சேரும் வாரம். ஆலய தரிசனம் அமைதி தரும். பிணிகள் அகலும். பிரயாணம் ஏற்படும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பொருளாதாரம் சிறப்பு தரும். பொறுப்புக்கள் கூடும். புதிய நட்பு உருவாகும். உடல்நலம் பாதிக்கும். உறவினரால் பாதகம் உண்டு. திடீர் கடன் உருவாகும். இடமாற்றம் ஏற்படும். காரிய தாமதம் ஏற்படும். உத்தியோக அலைச்சல் உண்டு. பழைய நட்பினால் பலன் கிடைக்கும். மாணவர்களுக்கு கல்வியில் அக்கறை கூடும். பேச்சில் நிதானம் தேவை. கட்டிடத்தொழில் லாபம் தரும். தோல்விகள் விலகும். தொல்லைகள் குறையும். பிள்ளைகள் கல்வி மேம்படும். குடும்ப அன்யோன்யம் அதிகமாகும். இன்னல்கள் அகலும். எதிர்ப்புகள் குறையும். எளிமையை விரும்புவீர்கள். இனிய காதல் உருவாகும். புதிய வாய்ப்புத் தேடி வரும். இனிய தகவல் வந்து சேரும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். மேன்மையாக செயல்படுவீர்கள். அரசியல் ஆதாயம் உண்டு. வீண் விரயம் அதிகமாகும். புதிய தொழில் அமையும். உடல்சோர்வு ஏற்படும். பணவரவு தாமதமாகும். பாராட்டு பெருகும். உணவு பிரியம் அதிகரிக்கும். ஆதலால் கவனம் தேவை. கால்நடைகளால் பலன் உண்டு. நண்பரால் செலவு உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: முருகப்பெருமான், அதிர்ஷ்ட எண்: 2,8,9,3
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,M




**மிதுனம்:** பிள்ளைகளால் சொத்து சேரும் வாரம். விரோதங்கள் விலகும். மன நெருக்கடிகள் தீரும். உடன்பிறப்புக்களால் உதவி கிடைக்கும். ஊக்கம் அதிகரிக்கும். திறமைகள் அதிகரிக்கும். வீண் வம்பு அகலும். விவேகமான பேச்சுக்களால் பிரச்சனைகள் தீரும். ஆரோக்கியம் சீராகும். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். மங்கள நிகழ்ச்சியில் இருந்து பங்கு பெறுவீர்கள். இனிய தகவல் உண்டு. வங்கி சேமிப்பு உயரும். விருந்தினர் வருகை உண்டு. பயணம் வெற்றி தரும். நண்பர்கள் சந்திப்பு கிட்டும். உடல்நலம் பெறும். ஆசைகள் நிறைவேறும். எதிலும் வெற்றி கிட்டும். அதிகாரம் குவியும். அணிமணிகள் சேரும். வாகன யோகம் உண்டு. கட்டிட தொழிலில் ஒப்பந்தங்கள் குவியும். அந்நிய தேச பயணம் உண்டு. அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். பொருளாதாரம் உயரும். திருமண தீபம் சுடர்விடும். கடன் பாக்கிகள் வசூலாகும். நினைத்த விஷயம் நிறைவேறும். பயண முயற்சி பலன் தரும். எதிலும் எச்சரிக்கையோடு செயல்படுவது நல்லது. உளுந்து தானம் சிறந்த பலன் சேர்க்கும். வாய்ப்புக்கள் தேடி வரும். உழைப்பில் கவனம் தேவை. சுபச்செலவுகள் அதிகரிக்கும். செல்வாக்கு மேம்படும். காதலர்கள் தம்பதியாவார்கள். பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கருமாரி அம்மன், அதிர்ஷ்ட எண்: 9,4,3,2
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த வெண்மை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,K




**கடகம்:** வீண் வம்புகள் விலகும் வாரம். எதிர்காலத் தேவைகள் பூர்த்தியாகும். திட்டமிட்ட செயல்பாடு தேவை. ஞாபக மறதி ஏற்படும். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். வேண்டாத நபர்கள் விலகுவர். பணப்பற்றாக்குறை நீங்கும். பயணத்தால் அனுகூலம் உண்டு. ஆன்மீக ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோக உயர்வு கிட்டும். தெளிவான முடிவுகள் உதயமாகும். மனக்குறை நீங்கும். வேலைபளு அதிகரிக்கும். கலைஞர்களுக்கு வாய்ப்புகள் வரும். நண்பர்களால் மதிப்பு உயரும். எதிர்ப்புக்கள் தவிடுப் பொடியாகும். கௌரவத்தில் கவனம் தேவை. புதிய சிந்தனை உதயமாகும். கண்ணாடி பொருட்கள் சேதமாகும். கலக்கமான மனநிலை காணப்படும். பெண்களுக்கு ஆபரணங்கள் சேரும். போதிய தனவரவு இருக்கும். நீண்டகால எண்ணம் நிறைவேறும். வாழ்க்கை தரம் உயரும். விவாதங்கள் ஏற்படும். பேச்சில் கனிவு கூடும். எதிர்காலத் தேவைகள் பூர்த்தியாகும். நற்காரியங்களில் ஈடுபடுவீர்கள். குடும்ப நலம் மகிழ்ச்சி தரும். வருமானம் உயரும். ஸ்திர சொத்துக்கள் சேரும். மங்களச்செய்தி வரும். உத்தியோக முன்னேற்றம் தடைப்படும். நிர்வாகத் திறன் கூடும். செயல்திறன் வெளிப்படும். கலைத்தொழில் கவனம் தேவை. கால்நடைகளால் சிரமம் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: வனதேவதை, அதிர்ஷ்ட எண்: 9,5,7,1
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,A




**சிம்மம்:** வெற்றிச் செய்தி தொட்டு ரசிக்கும் வாரம். வசந்தம் தேடி வரும். வரவுகள் பெருகும். அலைச்சலால் அசதி ஏற்படும். தொழில் மாற்றம் ஏற்படும். வேலைத்திறன் அதிகரிக்கும். சுபச்செய்தி வரும். ஆடை, அணிகலன் சேர்க்கை உண்டு. பொருளாதார வளர்ச்சியுண்டு. உடன் பிறந்தோரால் உதவி கிடைக்கும். நல்ல முன்னேற்றம் ஏற்படும். கனவு தொல்லை உண்டு. காதலால் மகிழ்ச்சியுண்டு. கூட்டுத்தொழிலில் லாபம் உண்டு. மருத்துவச் செலவு ஏற்படும். பங்கு சந்தை வியாபாரம் லாபம் தரும். இனிய தகவல் வந்து சேரும். உடல் உபாதை அதிகமாகும். குடும்பச் செலவு அதிகரிக்கும். குழந்தைகளால் அல்லல் ஏற்படும். உறவினர் வருகை தொல்லை ஏற்படும். வாய்பேச்சில் நிதானம் தேவை. சேமிப்பு உயரும். சேய் நலம் கூடும். நோய், நொடிகள் அகலும். வீண் வம்பு விலகும். வழக்குகள் வெற்றி தரும். விபரீத எண்ணம் விலகும். புத்துணர்ச்சியோடு செயல்படுவீர்கள். பயணத்தில் எச்சரிக்கை தேவை. ஆடம்பர சுகங்கள் கூடும். உத்தியோக மாற்றமுண்டு. புதிய தொழில் அமையும். அரசாங்க அனுகூலம் ஏற்படும். குடும்பத்தில் மகிழ்ச்சி பெருகும். காரிய வெற்றி கிட்டும். வாழ்க்கை வசதி பெருகும். வீண் வம்பு ஓடி மறையும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீதேவி, அதிர்ஷ்ட எண்: 3,1,9,7
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: D,K




**கன்னி:** செலவுகள் அதிகரிக்கும் வாரம். ஆக்கம் அதிகரிக்கும். ஆரோக்யம் திருப்தி தரும். மறைமுக தொல்லை நீங்கும். வழக்கு வெற்றித்தரும். புத்திர வழியில் தொல்லை உண்டு. புதிய பொருள் சேர்க்கை உண்டு. வியாபார வாய்ப்பு உண்டு. கடன் பிரச்சனை தீர்வு உண்டு. கல்வியில் ஏற்றம் உண்டு. மேலதிகாரியின் ஆதரவு உண்டு. குடும்பத்தில் சஞ்சலம் உண்டு. தனவரவால் தாமதம் உண்டு. தகுதியில் மேன்மை உண்டு. தனம் சேர்க்கையுண்டு. படிப்பில் ஆர்வம் கூடும். விரோதம் விலகும். வருமான வரி தொல்லை ஏற்படும். சங்கடம் அதிகமாகும். குடும்ப சச்சரவு ஏற்படும். அரசியம் ஆதாயம் உண்டு. பொருள் நஷ்டம் ஏற்படும். அலட்சியப் போக்கு தவிர்க்கவும். தொழில் பளிச்சிடும். ஒப்பற்ற பலன் சேரும். கணவன், மனைவி ஒற்றுமை ஏற்படும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். வாகனச் செலவு ஏற்படும். பழையக்கடன் வசூலாகும். பெற்றோர்களால் பாராட்டும் பெறுவீர்கள். தொழிலில் முன்னேற்றம் உண்டு. தனலாபம் கூடும். வெளிவட்டாரப் பழக்கம் அதிகமாகும். இயற்கைக் காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். உல்லாசப் பயணம் இனிக்கும். புதிய வேலை முயற்சி பலிதமாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: 9,7,2,3
அதிர்ஷ்ட நிறம்: பிங்க், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,Q



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377





**துலாம்:** வெற்றிகளை குவிக்கும் வாரம். புகழ் கூடும். அரசு வழியில் கவனம் தேவை. உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். திருமண முயற்சி பலன் தரும். உடல்நிலையில் கவனம் தேவை. ஏற்றுமதி தொழிலில் லாபம் கிடைக்கும். செல்வாக்கு கூடும். பங்குச்சந்தையில் பணம் புரளும். விளையாட்டுத்துறையில் ஆர்வம் கூடும். காதலர்கள் தம்பதியாவார்கள். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். தர்ம சிந்தனை மேலோங்கும். சகோதர வழியில் கவனம் தேவை. நண்பர்களின் சந்திப்பு நன்மை பயக்கும். மாங்கல்ய நமஸ்காரம் மனோ தைரியம் கொடுக்கும். மனை வாங்கும் யோகம் உண்டு. மருத்துவச் செலவு அதிகரிக்கும். குழப்பங்கள் அகலும். கணவரிடத்தில் மதிப்பு உயரும். எதிர்ப்புகள் மாயமாய் மறையும். பெண்களால் பெருமை உண்டு. மனைவியால் நன்மை உண்டு. பதவி உயர்வு தாமதமாகும். தெய்வப்பணியில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் நல்ல பெயர் கிட்டும். தொழில் வளர்ச்சி கூடும். வாய்ப்புக்கள் சாதகமாக அமையும். வார்த்தைகளில் நிதானம் தேவை. நல்லோர்களின் வாழ்த்துக் கிடைக்கும். தாயின் பிரார்த்தனையால் தகுதிகள் உயரும். அரசு வகையில் ஆதாயம் கிட்டும். பதவி உயர்வு உண்டு. நட்பு வட்டம் விரிவடையும். மனதில் மகிழ்ச்சி கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சிங்கப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 1,8,9,2
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,C




**விருச்சிகம்:** வேண்டாத நபர்கள் விலகும் வாரம். சுபகாரியங்கள் இல்லத்தில் இனிதே நடந்தேறும். கலைஞர்களுக்கு ஒப்பந்தங்கள் குவியும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். கல்வியில் கவனம் தேவை. பணியில் மாற்றம் ஏற்படும். முயற்சிகள் தாமதமாகும். இரகசியம் காப்பது நல்லது. கலைஞர்களுக்கு திருப்புமுனையான காலம். வியாபாரிகளுக்கு கவனம் தேவை. கூட்டுத்தொழில் சுமாராக இருக்கும். மனைவியின் பிரார்த்தனை மாற்றம் தரும். உறவினர் வருகையால் கலகலப்பு கூடும். மருத்துவச் செலவுகள் குறையும். வரவு திருப்தி தரும். திருமணப் பேச்சு முடிவிற்கு வரும். விலகி சென்றவர் திரும்பி வருவர். புதிய சொத்துக்கள் சேரும். பூர்வீக சொத்துக்கள் விற்பனையாகும். திடீர் செலவு ஏற்படும். தொழிலில் லாபம் தரும். அடுத்த நபரால் ஆதாயம் உண்டு. உடல்நலனில் அக்கறை தேவை. பிள்ளைகள் வழியில் செலவுகள் ஏற்படும். ஏஜென்ஸி தொழில் ஏற்றம் தரும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். உத்தியோகத்தில் உற்சாகம் கூடும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். கணவன், மனைவி கௌரவம் உயரும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. மகான்களின் சந்திப்பு கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: வாராஹி அம்மன், அதிர்ஷ்ட எண்: 9,7,2,1
அதிர்ஷ்ட நிறம்: பொன்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,K




**தனுசு:** பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும் வாரம். திருஷ்டிகள் விலகும். ஆடம்பர பொருள் சேரும். உடல்சோர்வு உருவாகும். எதிரிகளிடையே சந்தோஷம் உண்டாகும். பெற்றோர்களிடத்தில் சமாதானம் கிடைக்கும். பிள்ளைகள் வழியில் இன்பம் உண்டாகும். ஆன்மீக சிந்தனை உதயமாகும். பயணங்களால் இடையூறு ஏற்படும். மறைமுக எதிர்ப்பு வலுபெறும். எச்சரிக்கையோடு செயல்பட வேண்டும். பேச்சில் கம்பீரம் கிடைக்கும். பெற்றோரின் ஆசி கிட்டும். உறவினர் வருகையால் பலன் உண்டு. திடீர் லாபம் உண்டு. விருப்பமான தொழில் அமையும். விபரீத போக்கு மறையும். குடும்ப பாசம் அதிகரிக்கும். பழையக்கடன் வசூலாகும். பணியில் ஆர்வம் ஏற்படும். சுயத்தொழிலில் கவனம் தேவை. நண்பர்களால் நன்மை உண்டு. செலவுகள் குறையும். புகழும், பொருளும் பெருகும். முன்னேற்றம் அதிகரிக்கும். கலை ஆர்வம் கூடும். தொழில் உயர்வு பெருகும். புதுத்தொழிலை தொடங்கும் வாய்ப்பு உள்ளது. எலக்ட்ரிக்கல் தொழில் லாபம் தரும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். எண்ணிய காரியம் கைகூடும். போதாத காலம் விலகும். ஆரோக்கியத்தில் முன்னேற்றம் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: வரதராஜப் பெருமாள், அதிர்ஷ்ட எண்: 3,9,8,1
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,D




**மகரம்:** திருப்புமுனை சந்திக்கும் வாரம். தனம் சேர்க்கையுண்டு. அச்சுத்தொழில் ஆதாயம் தரும். பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். போட்டிகள் அதிகமாகும். கல்வியில் அக்கறை தேவை. இடமாற்றம் உண்டு. மனைவி உறவு சீராகும். கருத்து வேறுபாடுகள் அகலும். புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். தன வரவில் தடங்கல் உண்டு. தொழில் அபிவிருத்தி உண்டாகும். பொருளாதார மேன்மை உண்டு. குடும்பத்தில் அமைதி பெருகும். வேலைப்பளு அதிகமாகும். பழையக்கடன் தீரும். பொறுமையைக் கையாள வேண்டும். நிர்வாகச் செலவுகள் கூடும். வாய்ப்புக்கள் வந்து சேரும். வழக்குகள் சாதகமாகும். உத்தியோகத்தில் ஒற்றுமை விலகும். உடல் உ"ணம் வந்து போகும். அச்சுத்தொழில் ஆதாயம் உண்டு. உடன் பிறப்புகளால் நன்மை உண்டு. தேக ஆரோக்கியம் மிளிரும். முகப்பொலிவு பெறும். கணவன், மனைவி ஒற்றுமை கூடும். நிதானம் தேவை. இனிய தகவல் வந்து சேரும். புகழ் அதிகரிக்கும். பெருமைகள் தேடி வரும். வெற்றிகள் குவியும். அரசு வகை ஆதாயம் கிட்டும். கடன் வாங்க நேரிடும். வெளியூர் பயணம் வெற்றி தரும். தொலைதூரப் பயணம் உண்டு. பணிச்சுமைகள் குறையும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சரஸ்வதி தேவி, அதிர்ஷ்ட எண்: 6,5,1,3
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,R




**கும்பம்:** பாக்கியவான்களை சந்திக்கும் வாரம். பிரச்சனைகள் விலகும். சொந்த தொழில் அமையும். விவசாய விளைச்சலில் பலன் உண்டு. நிர்வாக பொறுப்பு கூடும். அரசு வகையில் ஆதாயம் கிட்டும். வியாபார அபிவிருத்தி அடையும். அதிகாரியின் ஆதரவு பெருகும். கொள்கையில் பிடிப்பு சேரும். அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாகும். கொடுக்கல், வாங்கலில் நன்மை சேரும். ஆன்றோர்கள் வாழ்த்து கிட்டும். பேச்சில் கவனம் தேவை. உதவும் குணம் உண்டு. நற்செய்தி வரும். தொழில் வாய்ப்பு தேடி வரும். தடைகள் விலகும். தேவைகள் பூர்த்தியாகும். விருப்பங்கள் நிறைவேறும். வீண் செலவு அதிகமாகும். புதிய பொறுப்பு வரும். அரசியலில் பொறுமை தேவை. பயணம் லாபம் தரும். சூழ்நிலைகளால் மாறுதல் உண்டு. சகோதர விசுவாசம் கூடும். விபரீத எண்ணம் விலகும். சாதனைகள் ஓங்கும். பணியார்வம் கூடும். புதுத்தொழில் அமையும். வாகனம் மாற்றம் ஏற்படும். உலோகத்தொழில் உயர்வு பெறும். தந்தை நலன் கூடும். மற்றவர்களுக்கு உதவி செய்வீர்கள். கடன் வசூலாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: முருகன், அதிர்ஷ்ட எண்: 1,9,7,6
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,K




**மீனம்:** அர்ச்சனையால் பிரச்சனை குறையும் வாரம். குதூகலம் தாண்டவமாடும். அந்நியர் நட்பு ஆக்கம் தரும். காரிய தாமதம் ஏற்படும். கடன் பிரச்சனை குறையும். கற்பனை ஆற்றல் பெருகும். டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும். அரசியலில் புகழ் கூடும். உணவு விடுதி லாபம் தரும். மாணவர் பாராட்டு பெறுவர். சந்தோஷம் பெருகும். ஆபரணச்சேர்க்கை உண்டு. வியாபார மேன்மை உண்டு. சந்தர்ப்பம் சாதகம் உண்டு. ஆரோக்கியம் அதிகரிக்கும். இடமாற்றம் ஏற்படும். பயணம் சிறக்கும். தாய்வழி உறவு நன்மை பயக்கும். எதிர்பார்ப்புகள் கூடும். ஆடை, அணிகலன்கள் சேரும். பொன், பொருள் சேரும். விபரீத போக்கு மறையும். தான தர்மங்கள் பலன் தரும். புதிய நட்பு உருவாகும். பூமியால் லாபம் அடைவீர்கள். புனிதமான காரியங்களில் ஈடுபடுவீர்கள். சந்தோஷமான சூழ்நிலை உருவாகும். திட்டங்கள் நிறைவேறும். வயிறு உபாதைகள் தோன்றி மறையும். மின்சாரத்தில் கவனம் தேவை. கலை ஆர்வம் கூடும். பொறாமைகள் விலகும். வேலை பளு கூடும். மாமூலான வளர்ச்சி சிறக்கும். மரத்தொழில் லாபம் தரும். பிள்ளைகளால் சந்தோஷம் அதிகரிக்கும். பெற்றோர் நலனில் கவனம் தேவை. பல்வலி வந்து போகும். கூட்டுத்தொழில் லாபம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஏழுமலை, அதிர்ஷ்ட எண்: 5,1,3,2
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: M,P

# 16ம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
02-04-1926

உதிர்வு
29-01-2006



கொழும்பைப் பிறப்பிடமாகவும், ஆனைக்கோட்டை மானிப்பாயை வாழ்விடமாகவும்,
கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர். ஸ்ரீபதி மகேஸ்வரி

(தர்மகர்த்தா புளியங்கண்டு பிள்ளையார் தேவஸ்தானம்,
முருகமூர்த்தி பிள்ளையார் தேவஸ்தானம்)

**திதி: 01-02-2022**

அன்போடு எமையணைத்து பண்போடு வளர்த்தீட்டீர்
கண்ணின் மணிபோல கருத்தோடு காத்திட்டீர் – இன்று
அம்மா உமைப்போல அன்போடு ஒரு ஜீவன்
எம்மோடு இல்லாமல் ஏங்குகின்றோம் கலங்குகின்றோம்...

மண்ணுலகை விட்டு உமது மலருடல்தான் மறைந்தாலும்
கண்ணை விட்டு மறையவில்லை கருத்தைவிட்டு அகலவில்லை
மீண்டுமொரு பிறவி பரமன் எமக்களித்தால் – அதிலும்
தாயாய் நீர் வேண்டும் தங்கமே நீர் வேண்டும் எமக்கு...

அன்பின் திருவுருவே அன்னையே உமைப்பிரிந்து
ஆண்டு பல சென்றிடினும் ஆறவில்லை நம்மனது
காலனவன் உமைக்கவர்ந்து காலங்கள் கழிந்திடினும்
காயமது மாறாமல் கண்கள் கலங்குதம்மா...

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

மொன்றியல் நகரில்
உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS!
Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
HIGHER ACHIEVEMENTS
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 416-291-0005
www.iselldreamcondos.ca www.iselldreamhomes.ca

25 ஆது வெள்ளி விழா 2021
UTHAYAN
உதயன்

LOOKING FOR YOUR Dream House?
647-401-9211
416-321-0110
@REALTOR.SEYON
WWW.REALTORSEYON.COM
INFO@REALTORSEYON.COM
7595 MARKHAM RD #19, MARKHAM, ON L3S 0B6
AJAX - 1801 HARWOOD AVE N #5, AJAX, ON L1T 0K8
Call SEYON CHANDRAKUMAR
RE/MAX ROYAL PROPERTIES
BUYING SELLING INVESTING

உதயம் 1347 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday January 28, 2022

# மட்டக்களப்பில் 1300 பேருக்கு ஒமிக்கிரோன் – ஒருவாரத்தில் 22 வயது யுவதி உட்பட 6 பேர் உயிரிழப்பு



மட்டக்களப்பு மாவட்டத்தில் ஓமிக்குரோன் வைரஸ் என சந்தேகிக்கப்படும் வைரஸ் நோயயினால் 40 கர்ப்பிணி தாய்மார்கள் உட்பட 1300 பேருக்கு நோய் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் கடந்த ஒருவாரத்தில் 22 வயதுடைய யுவதி ஒருவர் உட்பட 6 பேர் உயிரிழந்துள்ளதாக மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் கே. சுகுணன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்ட கொரோனா தடுப்பு செயலணி கூட்டம் வியாழக்கிழமை (27) மாவட்ட செயலகத்தில் செயலணியின் தலைவரும் மாவட்ட அரசாங்க அதிபர் கே.கருணாகரன் தலைமையில் இடம்பெற்றது.

*(தொடர்ச்சி உள்ளே 8ம் பக்கத்தில்)*

# கனடா "விழித்தெழு பெண்ணே" அமைப்பின் ஏற்பாட்டில் கொழும்பில் 100 தமிழ்ப் பெண் ஆளுமைகளை கௌரவிக்கும் பெருவிழா










கனடாவில் நீண்ட காலமாக இயங்கிவரும் கனடா "விழித்தெழு பெண்ணே" அமைபபின் ஏற்பாட்டில் கடந்த 21ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணிக்கு கொழும்பு **GLOBAL TOWERS LOUNGE HALL** மண்டபத்தில் இடம்பெற்ற இலங்கையின் 100 தமிழ்ப் பெண் ஆளுமைகளை கௌரவிக்கும் பெருவிழாவில் இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்கள் மனோ கணேசன் மற்றும் சுரேன் ராகவன் ஆகியோர்கலந்து சிறப்பித்தனர்.

*(தொடர்ச்சி உள்ளே 18ம் பக்கத்தில்)*

# FRONTLINE COMMUNITY CENTRE சமூகசேவை நிறுவனம் நடத்திய "தமிழர் மரபுரிமை மாதக் கொண்டாட்ட நிகழ்வு



கனடாவில் பல வருடங்களாக இயங்கிவருவதும் தமிழர்களால் நிர்வகிக்கப்பெற்று வருவதுமான சமூக சேவை நிறுவனம் **FRONTLINE COMMUNITY CENTRE** ஏற்பாட்டில் அண்மையில் "தமிழர் மரபுரிமை மாதக் கொண்டாட்ட நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

அமைப்பின் நிறுவனரும் நிறைவேற்றுப் பணிப்பாளருமான திருமதி விஜயா குலாவின் தலைமையில் அமைக்கப்பெற்ற சிறப்புக் குழு இந்த வைபவத்தை நேர்த்தியான முறையில் திட்டமிட்டது.

*(தொடர்ச்சி உள்ளே 5ம் பக்கத்தில்)*

# உதயன் வெள்ளி விழாவை ஒட்டிய நன்றி பாராட்டும் அன்பளிப்புப் பொதிகள் வழங்கப்பெற்ற வர்த்தக வெற்றியாளர்கள்





கனடா உதயன் வெள்ளி விழாவை ஒட்டிய நன்றி பாராட்டும் அன்பளிப்புப் பொதிகளுக்கு உரித்தான நண்பர்களை கௌரவிக்கும் எமது திட்டம் தொடர்ந்து இடம்பெறுகின்றது.

இந்த வரிசையில் நன்றி பாராட்டும் அன்பளிப்புப் பொதிகளுக்கு உரித்தான இணைந்த வர்த்தக வெற்றியாளர்கள், ஸ்காபுறோ நகரில் அமைந்துள்ள **Mardi Gras Banquet Services and Hall** நிறுவன பங்காளர்கள் திருவாளர்கள் ஜெயா மற்றும் சந்திரா ஆகியோர் கடந்த திங்களன்று உதயன் பிரதம ஆசிரியர் அவர்களால் கௌரவிக்கப்பெற்றார்கள்.

# மலேசியத் தமிழ்ப் பள்ளி மாணவர்களுக்கான "நாவன்மை நிகழ்ச்சி" யின் ஜனவரி 2022 இற்கான அரங்கம் எதிர்வரும் 30 – 01 – 2022 அன்று நடைபெறுகின்றது




தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Siva Shanmuganathan
Broker
Homelife/Future Reality Inc., Brokerage
Joy H. Selvanayagam
Broker